

www.tamilarangam.net

# தலைநகருக்கு வந்த யுத்தம்!







சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே — பாரதி

இதழ் 90 பெப்.08 — பெப்.21,1996 விலை 7.00

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## மணலாறு : குடியேற்றவாசிகள் வெளியேற்றம் !

13 வருட காலத்தினுள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் 102 தாக்குதல்களுக்கு முகம் கொடுத்துள்ளாதாகக் கூறும் வெலிஓயா திட்டத்திற்குப்பட்ட ஏழாயிரம் குடும்பங்கள் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற முடியாதுள்ளதாக வெலிஓயாவிலிருந்து அறியக் கிடைக்கிறது.
1983இல் ஆரம்பிக்கப்பட்ட இத் திட்டத்தில் ஆரம்பக் காலத்தில் ஏறத்தாழ இருபதாயிரம் குடும்பங்கள் இருந்ததாகவும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க அச்சுறுத்தல, அரசின் க்வனிப்பின்மை காரணமாக ஏறத்தாழ 13 ஆயிரம் குடும்பங்கள் அப்பிரதேசத்தைக் கைவிட்டுச் சென்றாலும், மீதி ஏழாயிரம் மட்டிலான குடும்பங்கள் அனைத்து இன்னல்களையும் அனுபவித்துப் பிரதேசத்தைப் பாதுகாக்கும் போராட்டத்திற்குத் தோள் கொடுத்துள்ளதாகவும் தெரிவிக்கபபடுகிறது.
நான்கு மாவட்டங்களிற்குள் (அனுராதபுரம், வவனியா, முல்லைத்தீவு, திருக்கோணமலை) அகப்பட்டுள்ள இப்பிரதேசத்தின் மின்சாரம், நீர், வீதிகள், போக்குவரத்து, பாடசாலைகள் போன்ற பொது வசதிகள் தொடர்பாக முன்னாள் ஆட்சியாளர்களைப் போலவே, தற்போதைய ஆட்சியாளர்களும் முறையான கவனத்தை திருப்பாது இருப்பதால் இப்பிரதேசவாசிகள் விசனமடைந்துள்ளனர்.
இப்பிரதேசத்தின் நிர்வாக நடவடிக்கைகள் குழப்பகரமானதாக இருப்பதாகச் சுட்டிக்காட்டும் தகவல் வட்டாரங்கள், இராணுவத்தினதும், மகாவலியினதும் வாகனங்கள் இருந்திருந்தாவது போக்குவரத்துச் செய்ய உதவியாயுள்ளது எனச் சுட்டிக்காட்டுகிறது.
முன்னாள் அரசியல்வாதிகளைப்போலவே, தற்போதைய அரசியல்வாதிகளும் எப்போதாவது ஒரு முறை இப்பிரதேசத்திற்கு வந்தாலும் பொதுப் பிரச்சினைகளை மறந்து அரசியல் பற்றி ஏதாவது அலட்டித் தப்பிவிடும் நிகழ்ச்சி நிரலைப் பின்பற்றுவதற்குப் பழகியுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

(றாவய - 19960128)

## தனியார் மயப்படுத்தலுக்கு எதிர்ப்பு

அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள், திணைக்களங்களைத் தனியார் மயப்படுத்தலுக்கு எதிராக மக்களை அறிவூட்டும் கூட்டத் தொடரொன்றை பெப்ரவரி 01 ம் திகதி முதல் நாடெங்கும் நடத்தத் ''தனியார் மயப் படுத்தலுக்கு எதிரான தொழிற்சங்க கூட்டு அமைப்பு'' தீர்மானித்துள்ளது.
இக் கூட்டங்களைப் பிரதான நகரங்களில் நடத்தத் தீர்மானித்திருப்பதுடன் அதன் முதற் கூட்டம் கண்டியிலும், அதன் பின்பு குருணாகலை, கேகாலை, இரத்தினபுரி, அனுராதபுரம், அம்பாறை, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை உட்பட மேலும் நகரங்கள் பலவற்றிலும் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இலங்கை வங்கி ஊழியர் சங்கம், தொலைத் தொடர்புத் தொழிற் சங்கக் கூட்டுச் சபை, மின்சார சபைத் தொழிற் சங்கக் கூட்டு அமைப்பு, நீர்வளச் சபைத் தொழிற் சங்க முன்னணி, காப்புறுதிக் கூட்டுதாபனத் தொழிற் சங்க முன்னணி உருக்குக் கூட்டுத்தாபனத் தொழிற் சங்க அதிகார சபை, தபால் தொழிற் சங்க முன்னணி உட்பட தொழிற் சங்கங்களின் மத்திய நிலையங்கள் பலவும் இவ் எதிர்ப்புக்கூட்டத் தொடருக்குத் தமது ஒத்துழைப்பைத் தருவதாகத் தொலைத் தொடர்புத் தொழிற் சங்க முன்னணியின் ஏற்பாட்டாளர் ஜே.பீ.பீ.திசாநாயக்க தெரிவித்தார்.
இக்கூட்டங்களில் வங்கி, காப்புறுதி, ரெலிகொம், மின்சார சபை, நீர்வளச் சபை, உருக்குக் கூட்டுத்தானம், தபால், எண்ணெய்க் கூட்டுதாபனம் உட்பட தனியார் மயமாக்கலுக்கு உட்படும் நிறுவனங்களின் ஊழியர்கள் கலந்து கொள்ள உள்ளதாகவும் திசாநாயக்க தெரிவித்தார்.
(லங்காதீப - 19960131)

## வடக்கிலிருந்து வரும் வாகனங்களை இராணுவம் பொறுப்பேற்கும் !

கொழும்பு நகரின் பாதுகாப்பிற்கு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல் காரண்மாக யாழ்ப்பாணத்திலிருந்தும், மட்டக்களப்பிலிருந்தும் வரும் கனரக வாகனங்களைக் கொழும்பினுள் வருவதை முழுமையாகத் தடை செய்ய அரசு விரைவிலேயே நடவடிக்கை எடுக்கவுள்ளது.
பாதுகாப்பு அதிகாரிகளினால் பல காலத்திற்கு முன்பே செய்யப்பட்ட ஆலோசனையொன்றின் படி இந் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது
புதிய திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய இடங்களிலிருந்து வரும் லொறிகள், பஸ்கள் போன்ற வேறு கனரக வாகனங்கள் கொழும்பு நகரினுள் வரும் பிரதான இடங்களில் இராணுவத்தினர் பொறுப்பேற்பர்.
ஹை லெவல் வீதியினூடாக வரும் வாகனங்கள் நுகேகொடவிலும், பழைய அவிசாவளை வீதியினூடாக வரும் வாகனங்கள் வெல்லம்பிட்டியிலும், நீர்கொழும்பிலிருந்து வரும் வாகனங்கள் பேலியகொடவிலும், காலி வீதி வழியாக வரும் வாகனங்கள் தெஹிவளை பாலத்திற்கருகேயும், கண்டி வீதி வழியாக வரும் வாகனங்கள் புதிய பாலத்தின் மேலும் இவ்வாறு இராணுவத்தினரால் பொறுப்பேற்கப்படும்.
அதன் பின்பு இராணுவத்தினரால் இக் கனரக வாகனங்கள் உரிய இடத்தை நோக்கிக் கொண்டு செல்லப்படுவதுடன், அதற்கு செலவாகும் பணத்தை லொறி, பஸ் உரிமையாளர்கள் இராணுவத்திற்கு வழங்க வேண்டும்.
மத்திய வங்கித் தலைமையலுவலகமும், செலிங்கோ மாளிகையும் குண்டு வைத்து வெடிக்கச் செய்யப்பட்ட சம்பவத்தின் பின் இவ் வேலைத் திட்டம் துரிதமாக நடைமுறைப்படுத்த வேண்டிய முக்கியத்துவம் பாதுகாப்பு அதிகாரிகளினால் சுட்டிக்காட்டப்பட்டுளளது.
இதே சமயம் கடந்த காலங்களில் மட்டக்களப்பிலிருந்தும், யாழ்ப்பாணத்திலிருந்தும் கொழும்பிற்குள் வந்த வாகனங்களினால் நம்ப முடியாதளவு ஆயுத உபகரணங்களும், வெடி மருந்துகளும் கொழும்பு நகரினுள் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி ஒருவர் கூறினார்.
இரு வருடங்களுக்குத் தேவையரனளவு வெடி மருந்துகள், துப்பாக்கிகள், வேறும் ஆயுத உபகரணங்களும் கொழும்பு நகரினுள் இரகசிய இடங்களில் மறைத்து வைக்கப்பட்டுள்ளதெனச் சுட்டிக்காட்டிய அவ் அதிகாரி அங்குலத்திற்கு, அங்குலம் சோதனையிட வேண்டிய அளவு உக்கிர நிலைமை தற்போது ஏற்பட்டுள்ளதாகக் கூறினார்.
(லக்பிம - 19960204)

## வர்த்தகர்களும் பாண் வழக்கும் !

விலைலைக்கட்டுப்பாடு வழக்குகள் நீதிமன்றங்களில் வரும் போது வர்த்தகர்கள் தாம் பிழைவிட்டு விட்டதாகக் கருதி அபராதம் செலுத்துகின்றனர். தாம் தவறுசெய்யும் வர்க்கம் என்பது அவர்களின் எண்ணமாகவும் இருந்து வருகின்றது. அதனால் ஆராயாது தமது குற்றத்தை ஒப்புக்கொண்டு விடுகிறனர்.
இவ்வாறு வர்த்தகர்கட்கு எதிராகப் பிழையாக வைக்கப்படும் வழக்குகளில் பாண் வழக்குகளும் ஒன்றாகும். பாணின் விலை ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பிதரமராக இருந்த 1970-1977ஆண்டுகாலப் பகுதியில் விலைக்கட்டுப்பாட்டுக்குரிய ஒரு பொருளாக அங்கீகரிக்கப்பட்டு இருந்தது. அதன் விலையும் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்னால் நாடு எங்கிலும் ஆயிரக்கணக்கான வழக்குகள் வைக்கப்பட்டன.
அதன் பின்பு விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் இருந்த பாண் விலை அகற்றப்பட்டது. பின்னர் பாண் விலை அரசினால் அறிவிக்கப்பட்ட போதும் அவை அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படவில்லை. அதன் அர்த்தம் விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடர முடியாது என்பதே. இன்றைய பாண் விலை ரூபா்5 ஆக இருப்பின் அதன் எடை குறைந்திருப்பின் பகுதி ரீதியில் (Proportionate Charge) வழக்கு வைக்க முடியாது. உதாரணமாக 450 கிராம் பாணின் விலை ரூபா5 எனில் 400கிராம் பாணின் விலையை வகுத்தெடுத்து வழக்கு வைத்தல் முடியாது. அவ்வாறு செய்வதாயின் அது அதிவிசேட வர்த்தமானியின் மூலம் பிரகடனப்படுத்தப்பட வேண்டும். அப்பிரகடன்ம் இதுவரை எழுத்து வடிவில் வெளியிடப்படாமை சட்டத்தில் உள்ள ஓட்டையே!
இந்த ஓட்டையையும் தமக்குச் சாதகமாக்கி வர்த்தகட்கு எதிராக வழக்குச் சோடிக்கும். ஒரு திணைக்களப் பிரிவு இருக்கும் என்றால் இன்று மட்டக்களப்புத்தான்! தமது வழக்கில் இருக்கும் இந்தப் பலவீனத்தை உணராது அப்பாவி வர்த்தகர்களை இத்திணைக்களத்தின் பரிசோதனைகள் தண்டித்துப் பெரும் தொகை அபராதத்துக்கும் ஆட்படுத்தி விடுகின்றார்கள்.
சட்டம் வேறு; சட்டத்தை தமது கைகளில் எடுப்பது வேறு. ஒரு சிறந்த நிர்வாகி எனப் புகழப்படும் அரச அதிபர் ஏ.கே.பத்மநாதனை அரச அதிபராக கொண்டுள்ள இக்கச்சேரியே பிழையான வழக்குகளைத் தாக்கல் செய்வது என்றால்; யாரிடம் தான் முறையிடுவது?
பெரும் கொள்ளை அடிக்கும் சீமெந்து வியாபாரிகட்குப் பொதுமன்னிப்பு! சட்டம் தெரியாது பாண் சுடும் அப்பாவிகட்கு பெரும் அபராதமா?
ஏ.கே.பத்மநாதன் பதில் சொல்வாரா?

பாலன்.

## குர் ஆனை எரித்த காடையர்கள் !

குருநாகல் மாவட்டத்தில் வெல்லவ பொலிஸ் பகுதிக்குட்பட்ட ஹிரிபிட்டிய என்ற ஊரிலுள்ள பள்ளிவாசலொன்றுள் சிங்களக் காடையர்கள் நுழைந்து அட்டகாசம் புரிந்துள்ளனர்.
புதிதாகத் திறந்து வைக்கப்பட்ட (1996-01-19) இப்பள்ளிவாசலில் தூக்கத்திலிருந்த அபூஹாலி என்பவரை ஆயுதமுனையில் எச்சரித்து விட்டு குர்ஆன், ஹதீஸ் மற்றும் மார்க்க நூல்களை தீயிட்டு எரித்துமுள்ளனர். அவைகளைப் பள்ளியின் நடுவேவைத்து டயரில் போட்டுக் கொளுத்தியுள்ளனர் என்பது விஷேடமாகக் குறிப்பிடப்பட வேண்டியதாகும்.
அத்துடன் அங்கிருந்த சுவர்க்கடிகாரம், உண்டியல் 'பணம்' ஆகியவற்றை அபகரித்துச் சென்ற அவர்கள் 'எக தம்பியெகுடவத் மெதன இன்டதென்னே..'' (ஒரு முஸ்லிமையாவது இங்கு இருக்கவிடமாட்டோம்..) என்றும் எச்சரித்துச் சென்றுள்ளனர். இது சம்பந்தமாகப் பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாடும் புறந்தள்ளப்பட்டு, மாற்றாந்தாய் மனப்பான்மையோடே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.
பள்ளிவாசல் நிர்மாணிப்பின் போதும், பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்த இப்பிரதேச முஸ்லிம்கள், இவ்வாறான அச்சுறுத்தலையும் எதிர்கொண்டிருக்கிறார்கள்.
இது விடயமாக உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிடின் சிறுபான்மையினரின் இருப்புக்கள் எப்போதும் போல் கேள்விக் குறியுடனேயே நகரும்!

ஏ. எஸ். எம். மஸாஹிம்

## கழகத்துள் கலகம் !

தமிழீழ மக்கள் விடுதலைக் கழக (புளொட்) இயக்கத்தின் இராணுவப்பிரிவுப் பொறுப்பாளர் மாணிக்கதாசனுக்கும் அவ் இயக்கத்தின் அரசியல் பிரிவுக்குமிடையே எழுந்துள்ள கருத்து வேறுபாடுகள் இப்போது உச்சக் கட்டத்தை அடைந்துள்ளதாக எமது வடபகுதித் தகவல் வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன
மாணிக்கதாசனால் கடந்த சில தினங்களுக்கு முன்பு வவுனியாப் பிரதேசத்தில் பலர் மீது மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதன் பின்பு எழுந்துள்ள இக்கருத்து வேறுபாடு காரணமாக இதுவரை மாணிக்கதாசனுக்கு எதிராக இயக்கத்தினுள் பேசக் கூட உறுப்பினர்கள் அஞ்சுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.
மாணிக்கதாசனின் எதேச்சாதிரகா நடைமுறைகள் தொடர்பாகப் புளொட் இயக்கத்தின் அடுத்த மாநாட்டில் முன்வைக்கவென வவுனியாவைச் சேர்ந்த செல்வச்சந்திரன் ஷண்முகநாதனின் தலைமையிலான குழுவொன்று அறிக்கையொன்றைக் கூடத் தயாரித்துள்ளதாகவும் அறியக் கிடைத்துள்ளது.
அது தொடர்பாக மாணிக்கதாசனுக்குத் தகவல் கிடைக்கலாமென்ற பீதியினால் அவர்களில் ஐந்து பேர் புளொட் இயக்கத்தின் பொதுச் செய்லாளர் சித்தார்த்தனின் கீழ் பாதுகாப்புப் பெற்றுள்ளதாகவும் அறியக்கிடைத்துள்ளது.
இதே சமயம் மாணிக்கதாசனால் கொல்லப்பட்ட அவ் இயக்கத்தின் திருக்கோணமலை அரசியல் இராணுவப் பிரிவுகளின் பொறுப்பாளரான அர்ச்சுனா என்பவர் அவ் இயக்கம் மாலைதீவைக் கைப்பற்ற நடத்திய சண்டையில் இரண்டாவது தலைவராகச் செயல்பட்டவர். இவரின் கொலையின் பின்பு மாணிக்கதாசனின் இராணுவத் தலைமையை நிராகரிப்பதற்காகப் புளொட் உறுப்பினர்கள் வெளிப்படையாகவே செயற்படுவதாகவும் அறியக் கிடைக்கிறது.
(யுக்திய -19960128)

## புலிகளின் வாகனக் கடத்தல் !

கடந்த டிசம்பர் மாதம் 31ஆந் திகதி மட்டக்களப்பு மாவட்டத்தின் ஈரக் குளம் பிரதேசம் மீது சுப்பர் சொனிக் விமானம் இரு குண்டுகளைப் பொழிந்துள்ளது.
அப் பிரதேசத்தின் ஆற்றங்கரையில் விழுந்த அவ் இரு குண்டுகளில் ஒன்று வெடித்துள்ளதுடன், மற்றைய குண்டு செயற்பட வில்லை. 250 கிலோ எடையுள்ள வெடிக்காத குண்டைப் பார்க்கப் பிரதேசவாசிகள் நூற்றுக்கணக்காக ஆற்றங்கரைக்கு வந்துள்ளதாகவும் அறியக் கிடைத்துள்ளதுடன், குண்டு தொடர்பான தகவல் கிடைத்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் ட்ராக்டர் வண்டியொன்றினூடாக ஏறாவூர் பிரதேச செயலகத்திலிருந்து கடத்திச் சென்ற வாகனமொன்றில் அதனை ஏற்றிக் கொண்டு சென்றுள்ளனர்.
இதே சமயம் பிரதேச செயலக வாகனங்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் கடத்திச் செல்லப்பட்டதால் காத்தன்குடி, மண் முனை கிழக்குப் பிரதேச செயலாளர் காரியாலய வாகனங்களைத் தவிர மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த பிரதேச செயலாளர் காரியாலயங்கள் பத்தின் வாகனங்களையும் மாவட்டச் செயலகத்தின் நிறுத்துமாறும் உத்தரவிடப்பட்டிருக்கிறது. இதுவரை மட்டக்களப்பு மாவட்ட பிரதேச செயலக வாகனங்கள் ஐந்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.
(யுக்திய -19960128)

## இராணுவம் விஸ்தரிப்பு

மத்திய வங்கிக் குண்டுவெடிப்பின் பின் எழுந்துள்ள நிலைமையின் கீழ் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு மென்மேலும் யுத்தமய ரீதியாக முகங்கொடுக்கும் முகமாக இராணுவத்தை விரிவாக்குவது பற்றி அரசு கடுமையாக ஆராய்ந்து கொண்டிருப்பதாக அறியக் கிடைக்கிறது.
கடந்த சில தினங்களுக்கு முன் இராணுவத்திற்குப் 11ஆயிரத்து 500பேரைச் சேர்த்துக் கொள்ளச் செய்யப்பட்ட முயற்சியில் அரைவாசியையாவது நிறைவு செய்ய முடியாதது பற்றிச் கவலைக்குள்ளாகியுள்ள பாதுகாப்புப் பிரிவு வட பகுதி யுத்தத்தைத் தொடர்ந்தும் நடத்துவதானால் 18 வயது முதல் 35 வயது வரையிலுள்ள மக்களுக்கு யுத்தப் பணியைக் கட்டாயமாக்க வேண்டி இருப்பதாக அரசாங்கத்திற்குத் தொடர்ந்தும் கூறி வருவதாகவும் அறியக் கிடைக்கிறது.
கொழும்பு மத்திய வங்கித் தாக்குதலின் பின்பு தென் பகுதியின் பாதுகாப்பைப் பலப்படுத்து முகமாகவாவது பெருந்தொகையானவர்களை இராணுவத்தில் சேர்த்துக் கொள்வது, அதற்காகக் கட்டாய யுத்தப் பணிமுறையை ஏற்படுத்துவது என்பன பற்றியும் உயர் மட்டக் கலந்துரையாடல் நடைபெறுவதாகத் தெரிவருகிறது.
(யுக்திய-19960204)

ரத்னா

## போட்டி

மார்ச் 8 சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு ''பாதிப்புற்ற பெண்கள் அரங்கம்'' (Affected Womens Forum) கனேடிய சர்வதேச அபிவிருத்தி நிலையத்தின் அனுசரனையுடன் பெண்கள் தின நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளது.
இதன் ஓர் அங்கமாக அகில இலங்கை ரீதியில் சிறுகதைப் போட்டி ஒன்றை நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பெண்கள் பிரச்சினைகளை மையமாகக்கொண்ட, முன்னர் பிரசுரமாகாத சுய ஆக்கங்கள் சிறுகதையாளரிடமிருந்து கோரப்படுகிறது. இப் போட்டிக்கான முடிவுத்திகதி 1996 - 02- 20 ஆகும்.
போட்டியில் வெற்றிபெரும் படைப்புக்களுக்கு முறையே 2000, 1500, 1000 பணப்பரிசில்கள் வழங்கப்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இப்போட்டியில் பங்குபெற விரும்புகிறவர்கள் தங்கள் படைப்புகளை முடிவுத்திகதிக்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

---

சர்வதேச மகளிர் தின சிறுகதை போட்டி
பாதிப்புற்ற பெண்கள் அரங்கம்
சாகாமம் வீதி,
அக்கரைப்பற்று

தொகுப்பு : சி. விவேக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## இருண்ட சிறைக் கூடம்!

வடகிழக்கிலுள்ள இரண்டு கல்விக்கல்லூரிகளான வவுனியா கல்விக் கல்லூரியும் அட்டாளைச் சேனை கல்விக் கல்லூரியும் தெற்கில் உள்ள ஏனைய கல்விக் கல்லூரிகளுடன் ஒப்பிடும்போது. மிகவும் பின் தங்கிய நிலையிலேயே உள்ளன. அட்டாளைச் சேனை கல்விக் கல்லூரியைப் பொறுத்தவரை -அது அட்டாளைச் சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக் கட்டிடத்தில்; இப்போது- தென் கிழக்கு பல்கலைக் கழகம், கல்விக் கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையென மூன்று வகை கல்வி நிலையங்கள் அமையப்பெற்றதாக இருக்கின்றது.

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு வசதிகள் போதாத நிலை தென் கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு வசதிகள் போதாத நிலை. கல்விக் கல்லூரிக்கு வசதிகள் போதாத நிலையென குறைபாடுகளுடன் மாணவர்கள் தங்கள் கல்வியைத் தொடர்கின்றன. இங்கு மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அதிகம். அட்டாளைச் சேனைக் கல்விக் கல்லூரியைப் பொறுத்தவரை -இக்கல்விக் கல்லூரி அதிபர் மாணவர்களை சிறைக் கூடங்களில் நடாத்தும் கைதிகளின் போக்குக்கு நடாத்திக் கொண்டிருக்கிறார் என்று மாணவர்கள் குற்றம் சாட்டுகிறார்கள். தங்களது கருத்துக்களை நிர்வாகத்திற்கு எடுத்துக்கூற ஏதும் வழி இருப்பதாகவும் தெரியவில்லை என்கிறார்கள் அவர்கள்.

அட்டாளைச்சேனை கல்விக் கல்லூரி தொடங்கி இன்றுவரை, அங்கு மாணவர் சங்கம் அமைப்பதற்கு இன்னும் அனுமதி வழங்கப்படவில்லை- மாணவர்கள் இது சம்பந்தமாகக் கேட்டால் ஏன் நாங்கள் இருக்கிறோம் தானே எதற்கு மாணவர் சங்கம் என்கிறார் அதிபர்.

மாணவர் சங்கமொன்றை சுதந்திரமாக அமைக்கமுடியாத அப் பரிதாப மாணவர்கள், தங்களது குறைகளை கருத்துக்களை எவ்வாறு எடுத்துச் சொல்ல முடியும்? விரிவுரையாளர்களில் ஓரிருவரைத் தவிர மற்றவர்கள் தங்களுடைய பதவிகளைக் காப்பாற்றிக் கொள்ள அதிபரின் பக்கம். மாணவர்கள் எதிர்த்துக் கதைத்தால் ''இறுதிப் பரீட்சையில் நீ கவனிக்கப்படுவாய்'' என்ற எச்சரிக்கை வேறு வருகிறதாம்.

வருடாவருடம் கொழும்பில் நடைபெறும் கல்விக் கல்லூரிகளின் பிரச்சினைகளை ஆராயும் கூட்டத்தில் இவ் அதிபர் எத்தனை தரம் கலந்து கொண்டிருக்கிறார்? அட்டாளைச் சேனை கல்விக் கல்லூரியில் எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லையென அதிபர் காட்ட நினைக்கிறார். அதிபர் அஸிஸ் நல்ல நிர்வாகி -அவர் நிர்வகித்தால் பிரச்சினைகளுமே இல்லையென உயர் அதிகாரிகளிடம் ''சபாஷ்'' வாங்கும் மனோபாவத்தில் அதிபர் தொடர்ந்தும் செயற்படுகிறார் என்கின்றனர் மாணவர்கள்.

கல்வி, உயர் கல்வி அமைச்சினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிகளில் எவ்வளவு தொகையை இவர் இக்கல்லூரியின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தியுள்ளார்? எவ்வளவு நிதியை திருப்பி அனுப்பி உள்ளார். அப்படி கல்லூரி நிர்வாகத்தினால், ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம் திருப்பி அனுப்பப்பட்டிருப்பின் -தேவைகள், குறைகளற்ற சம்பூரணமான கல்விக் கல்லூரியா இது? என்பன போன்ற கேள்விகளுக்கு அதிபர் பதிலிறுப்பாரா? என்ற கேள்வி மாணவர்களிடம் உரத்து ஓங்கியிருக்கிறது.

அபிவிருத்தியையும் வளர்ச்சியையும் வேண்டி நிற்கும் இக்கல்விக் கல்லூரி - நியாயமான அபிப்பிராயங்களுக்கும் மாற்றுக் கருத்துக்களுக்கும் செவி சாய்க்காமல் இயங்குவதால் என்ன நன்மைகளை கண்டு விடப் போகிறது?

இவைகளுக்கு பதில் தரின்; அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும்.

அம்ரிதா

## மூதூர் : வெளியிணை மோட்டார் அபகரிப்பு!

மூதூர் கட்டைப்பறிச்சான் இராணுவ முகாமில் சோதனைகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன. கட்டைப்பறிச்சான், சேனையூர் கடற்கரைச்சேனை, சம்பூர், கூனித்தீவு ஆகிய கிராம மக்கள் இந்தச் சோதனைச் சாவடியை கடந்தே போக்குவரத்துச் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

இவர்கள் மூதூரிலிருந்து வீட்டுத்தேவைக்காக வாங்கிவரும் பொருட்கள் அத்தனையும் சோதனைச்சாவடியில் நிலத்தில் கொட்டிக் காட்டுமாறுப் பணிக்கப்படுகிறார்கள். பொருட்களுக்கான சோதனை முடிவடைந்ததும் ஒவ்வொருவராக தனியே அழைத்து மறைவிடத்தில் வைத்து கடும் சோதனை செய்யப்படுகிறார்கள். பெண்களை பெண் இராணுவத்தினரே சோதனையிடுகின்றனர். எனினும் இந்த மறைவிடச் சோதனைக்குச் செல்லும் ஆணோ, பெண்ணோ மனவேதனையுடன்தான் வெளியே வருகிறார்களாம். சோதனை செய்யும் சிலர் சோதனை என்ற பெயரில் பயணிகளின் பாலுறுப்புக்களை சோதனை செய்து மகிழுவதாகப் அவர்கள் வேதனையுடன் தெரிவிக்கின்றனர்.

துப்பாக்கிச் சூட்டுச்சம்பவங்கள் அதிகரித்து வருவதால் திருகோணமலையில் சுற்றிவளைப்புக்கள் அதிகரித்துள்ளன. ஜன.20ம் திகதி உவர் மலைப்பகுதி சுற்றிவளைக்கப்பட்டபோது கைதுசெய்யப்பட்டவர்களில் விடுதி ஒன்றில் தேனிலவு அனுபவிக்க வந்த மணமகனும் ஒருவர். சில மணிநேர விசாரணைகளின் பின் பலர் தலையீட்டால் இவர் விடுவிக்கப்பட்டார்.

இதற்கு முந்திய இரவு கிண்ணியா - திருகோணமலையை இணைக்கும் மோட்டார் பாதைச் சேவைக்குப் பயன்படுத்தப்பட்டு வந்த சக்திமிக்க ''வெளியிணை மோட்டார்'' இனந் தெரியாதவர்களால் அபகரித்துச் செல்லப்பட்டிருக்கிறது. இரண்டு பாதைகளில் ஒன்றின் மோட்டார் அபகரிக்கப்பட்டதால் ஒரு பாதையே தற்போது சேவையிலீடுபடுகிறது. இதனால் கிண்ணியா மக்கள் பெரிதும் சிரமமடைய வேண்டியிருக்கிறது.

விவேகி

## இப்படி ஒரு வகுப்பு நடத்தினால் என்ன?

திருகோணமலை நகரப்பாடசாலை அதிபர் ஒருவர் இடமாற்றம் செய்யப்பட வேண்டும் என்று மாகாணக் கல்விப் பணிப்பாளர் உத்தரவிட்டும் எவ்வித நடவடிக்கையும் பிராந்திய கல்விப்பணிப்பாளர் மேற்கொள்ளாமல் இருப்பது எப்படி? அரசியல் வாதி ஒருவர் தலையிட்டு இந்த இடமாற்றத்தை ரத்துச் செய்திருக்கிறாரா?

ஒழுக்காற்று விசாரணையின் அடிப்படையில் இந்த அதிபர் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளார். சரிநிகர் 84 ஜுன் 1-14 இதழில் ஆசிரியர்கள் பொறுப்பீனம் என்ற தலைப்பின் வெளியான செய்தியில் இந்த அதிபரது மர அன்பளிப்பு, ஆசிரியர் மாணவர்களுடன் சரியான உறவு பேணப்படாமை, கடமையைச் சரிவரச் செய்யாமை ஆகிய விடயங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன.

கல்வித்திணைக்களத்தாரால் முடுக்கி விடப்பட்ட விசாரணையின் முடிவு ரி/.எஸ்ஏ/01/212(பி) எண்ணிடப்பட்ட 4.7.95 திகதிக் கடிதமூலம் பிராந்தியக் கல்விப்பணிப்பாளரால் உறுதி செய்யப்பட்டிருந்தது. இதன்படி நான்கு விடயங்களில் மேற்படி அதிபர் குற்றவாளியாகக் காணப்பட்டதைத் தொடர்ந்து அவரை உடனடியாக இடமாற்றம் செய்து வேறு பொருத்தமான அதிபர் ஒருவரை மேற்படி பாடசாலைக்கு நியமிக்கும்படி மாகாணக் கல்விப்பணிப்பாளர் செல்வி. தி. பெரியதம்பியால் 11.07.1995ல் உத்தரவு வழங்கப்பட்டிருந்தது.

எனினும் இடைக்காலத்தில் இடமாற்றம் வழங்கப்பட்டால் அது தண்டனை இடமாற்றம் என்பதை வெளிப்படுத்தி விடும் என அரசியல்வாதி ஒருவர் விழுந்தடித்துக் கொண்டு தலையிட்டு இடமாற்றத்தை வருடாந்த இடமாற்றத்துடன் அமுல் நடத்தும்படி பிராந்தியக் கல்விப் பணிப்பாளரைக் கேட்டிருக்கிறார்.

பலன் அதிபர் இன்னமும் அதே பாடசாலையில் கடமையாற்றுகிறார். வருடாந்த இடமாற்றம் தானும் கிடைக்குமோ என்பது சந்தேகம்.

குற்றம் செய்தால் தனது ஆதரவாளர்களுக்குத் தண்டனை கிடைத்துவிடாதபடி செய்வதில் கவனமெடுக்கும் இந்த அரசியல்வாதி தனது ஆதரவாளர்களை அழைத்து ''குற்றம் செய்யாமல் இருப்பது எப்படி? அல்லது அப்படிச் செய்தாலும் அது வெளியில் வராமல் மறைப்பது எப்படி?'' என்று ஒரு வகுப்பு நடத்தினால் என்ன?

விவேகி

## தவிசாளர் கொழும்பில் : சிற்றூழியர் பட்டினி!

ஓட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளர் மொகைதீன் அப்துல்காதர் கொழும்பில் தங்களது மாஜி அமைச்சர் மன்சூருடன் சீமெந்து வியாபாரம் செய்வதால் பிரதேச சபை ஊழியர்கள் அனைவரும் பெரும் கஷ்டத்தினை எதிர்நோக்கியுள்ளனர். அதாவது நவம்பர் மாதம் வழங்கப்பட வேண்டிய சம்பளம் இன்னும் வழங்கப்படாததால் ஊழியர்கள் அனைவரும் தவிசாளர் மீது கடும் அதிருப்தி கொண்டுள்ளதாக தெரியவருகின்றது. இதனால் இரண்டு பிரதேச சபை ஊழியர்கள் காசோலைகளை எடுத்துக் கொண்டு கையொப்பம் பெறுவதற்காக கொழும்பு நோக்கிச் சென்றுள்ளனர்.

ஆனாலும் தவிசாளர் அரசியல் தந்திரமும், அரசியல் ஞானமும் மிக்கவர். இதனால் தான் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெறும் என்ற நம்பிக்கையுடன் முஸ்லிம் காங்கிரஸிலிருந்து பாய்ந்தார். அண்மையில் தவிசாளர் அரசியல் முதிர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக ஒரு சம்பவத்தைக் கூறலாம். அதாவது ஓட்டமாவடியில் உள்ளூர் வீதிகளை இம்முறை வீதி அபிவிருத்தி அதிகார சபையே (RDA)திருத்தி கிரவலும் பரவியது. ஆனால் தவிசாளர் தான்தான் திருத்தியதாக தவறான உரிமை கோரி துவிச்சக்கர வண்டியில் வலம் வந்தார். வாழ்க தவிசாளர், ஒழிக முஸ்லிம் சமுதாயம்.

**நௌபல்**
**ஓட்டமாவடி**

## சுய விமர்சனம்

அவர் ஓய்வு பெற்ற அரச ஊழியர் நல்லூர் பகுதியில் வசித்து வந்தது அவரது குடும்பம். 30 ஒக்டோபர் 1995இல் நிகழ்ந்த யாழ்ப்பாண இடப் பெயர்வுடன் அவரது குடும்பமும் இடம் மாறி வடமராட்சிப் பகுதிக்குச் சென்றது. அங்கு தங்கிஇருக்கும் நண்பரின் வீட்டில் இருந்து கதைத்துக் கொண்டிருக்கும்போது சொன்னார். ''யாழ்ப்பாணத்தில இருந்த முஸ்லிம் சனத்த நாங்கள் வெளியேத்தினம். அதுகளும் இப்படித்தானே அப்ப மன வேதனைப் பட்டிருக்குங்கள். அவலங்களைச் சந்திச்சு இருக்குங்கள். இப்ப நாங்கள் வெளியேறக்குள்ள அது புரியுது. அனுபவிக்கிறம். இனி எங்கள வெளியேத்தின பாவத்தை சிங்கள மக்கள் அனுபவிக்கப் போகினம். அப்ப அவைக்கு பலதும் புரியும்.''

-மூசூ

## வேதாளம் எப்போதும் முருங்கையில் தான்!

இந்த ஆண்டின் ஒரு மாத முடிவிற்குள் பல கடத்தல் சம்பவங்கள் புலிகளினால் இடம் பெற்றிருப்பதை அறியமுடிகிறது. குறிப்பாக இக்கடத்தல் சம்பவங்கள் கிழக்கின் முஸ்லிம்களை குறிவைத்துள்ளமையையும் வெளிப்படுத்துகிறது.

முன்பு நிகழ்ந்தது போன்று பணயக்கைதிகளாகப் பிடித்து கப்பம் கோருகிற நிலைமை மீண்டும் உருவாகிவருவதாக அஞ்சப்படுகிறது. இன உறவுகளின் நீண்ட விரிசல் அண்மையில்தான் ஓரளவு புரிந்துணர்வு நிலைக்கு வந்தது. இது போன்ற கடத்தல் சம்பவங்கள் இன உறவுகளை விரிவுபடுத்தி இனச் சிக்கல்களை ஏற்படுத்திவிடுமோ என்ற அச்ச நிலைக்கு அப்பாவி மக்களைத் தள்ளியுள்ளது.

ஜனவரி 13ம் திகதி வாழைச்சேனைப் பாசிக்குடாக்கடலில் வைத்து மஹ்மூத் லெப்பை, அப்துர்ரஹ்மான், புஹாரி, அப்துல் ஹமீத் ஆகிய மீனவர்கள் புலிகளால் கடத்திச்செல்லப்பட்டனர். இவர்களையும், படகுகளையும் விடுவிப்பதற்கு கப்பப் பணம் தருமாறு கோரி, அவர்களில் ஒருவரை விடுதலை செய்திருந்தனர். விடுதலை செய்யப்பட்டவர் ஏனைய தன் சகாக்களை விடுவிக்கக் கோரி உண்ணாவிரதமிருந்ததாலும், அப்பிரதேச வாசிகளின் ஆர்ப்பாட்டங்கள் கோரிக்கைகளின் பின்னரும் ஏனைய மீனவர்களும் விடுவிக்கப்பட்டனர். எனினும், அவர்களின் 15 லட்சத்திற்கும் மேல் பெறுமதியுடைய படகுகள் மீள ஒப்படைக்கப்படவில்லை. கடத்திச் செல்லப்பட்டவர்கள் பத்து நாட்கள் வரை புலிகளின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டிருந்தனரென்பதும் குறிப்பிடத்தக்கது.

அக்கரைப்பற்று பகுதியில் வைத்து 16 முஸ்லிம் கூலித் தொழிலாளர்களின் துவிச்சக்கர வண்டிகளும் புலிகளால் எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றன. அத்துடன் வாழைச் சேனை நாவலடிச் சந்தையில் வைத்து 800க்கு மேற்பட்ட மாடுகள் கடத்திச் செல்லப்பட்டதாகவும், அவைகளை விடுவிப்பதாயின் கப்பம் தரப்படவேண்டும் என்று கோரப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

காத்தான்குடியில் இடம் பெற்ற மோதலொன்றின் போதும் மூன்று முஸ்லிம் மீனவர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர். இவர்களுடன் இரு தமிழ் மீனவர்களும் கொல்லப்பட்டுள்ளனர். புலிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையே இடம் பெற்ற துப்பாக்கிச்சமரில் அகப்பட்டே இவர்கள் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இப்பகுதிக்குள் தற்கொலைப்படைப்பிரிவினர் புகுந்துள்ளதாகவும் தகவல் கிடைத்துள்ளது. இதனால் பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் கலந்து கொள்ளவிருந்த பல நிகழ்ச்சிகள் ரத்துச் செய்யப்பட்டதாகவும், பலத்த பாதுகாப்புப் போடப்பட்டதாகவும் அறிய முடிகிறது.

இன்னும் சில தகவல்களின் படி முஸ்லிம்களின் 50க்கு மேற்பட்ட மாட்டுவண்டிகளும் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டிருப்பதாக அறியமுடிகிறது. இதுவரை காணாமல் போன கால்நடைகள் பல ஆயிரங்களைத் தாண்டியிருக்கிறது. ஏறாவூரில் முச்சக்கர வண்டியொன்று கடத்தப்பட்டுள்ளது.

புனானை ஜெயந்தியாய கிராமத்தில் மாத்திரம் ஒரு முஸ்லிம் புலிகளால் கொல்லப்பட்டிருக்கிறார் என்பதை அறியமுடிகிறது. குளத்தில் மீன்பிடிக்கச் சென்ற உசனார் முஸ்தபா, முஹம்மத் புஹாரி ஆகிய இருவரில் முஸ்தபா என்பவரே கொல்லப்பட்டுள்ளார். மற்றவர் காயத்துடன் தப்பியிருப்பதாக அறிய முடிகிறது. இறந்தவரின் சடலத்தை காட்டுக்குள் சென்று எடுக்க அஞ்சுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மக்களிடையே ஒரு பதட்ட நிலையை மீண்டும் உருவாக்கி இனவன்செயல்களைத் தோன்றச் செய்யும் தான் தோன்றித்தனமான செயற்பாடுகளில் புலிகள் மீண்டும் இறங்குவது எவர்க்கும் நல்லதாக அமையாது.

**ஷகீப்.**

## அடையாள அட்டைக்குள் ஆயிரம் கண்டுபிடிப்பு

ஜனவரி 19 அதிகாலையில் பாதுகாப்புப் படையினரால் சிவன்கோவிலடி, கணேசன் சந்தி, அரசடி ஆகிய பகுதிகள் சுற்றிவளைக்கப்பட்டன. ''பெண்கள் வீட்டில் இருக்க ஆண்கள் அனைவரும் உடனடியாக சிவன் கோவில் வீதியில் கூட வேண்டும். 6.30 மணிக்குப்பின் வீட்டில் ஆண்கள் இருந்தால் கைது செய்யப்படுவார்கள்'' என்று அறிவிக்கப்பட்டது. தமிழுக்கு சமஉரிமை கேட்பவர்கள் இந்த ஒலிபெருக்கி அறிவித்தலினால் நாணிப்போவார்கள். ''தமிழ்மட்டும்'' சட்டம் கடுமையாக அமுல் நடத்தப்படுகிறது.

சகல சிங்களவர்களும் வீட்டில் இருக்க அடிமைத் தமிழர்கள் மாத்திரம் சிவன்கோவிலடியில் அவசர அவசரமாக கூடினர். தமிழர்கள் வீடுகள் கவனமாக சோதனையிடப்பட்ட பின் ஆண்களை வெளியில் விட ஆரம்பித்தார்கள். சீருடைதரித்திருந்தோருடன் சீருடைதரிக்காத எடுபிடிகளும் காணப்பட்டனர். எடுபிடிகளின் பார்வையில் ஒவ்வொருவர் புலியாகவே தென்பட்டனர். அடையாள அட்டைக்குள்ளேயே ஆயிரம் கண்டுபிடிப்புகள்.

ஓர் பொறுப்பான நடுத்தரமனிதரிடம் கேட்கப்பட்ட கேள்வி ''எத்தனை வருடம் திருகோணமலைக்கு வந்து?'', ''நாற்பத்தைந்து வருடம்'' - இதுபதில். ''அப்படியா?'' உமது வயது எத்தனை? ''நாற்பத்தைந்து'' பொறுமையாக கூறி அடையாள அட்டையைப் பெற்றுக்கொண்டு வந்த அவர் தம்நண்பரிடம் கூறி என்னிலும் பாதி வயதுகூட இல்லாத பயல் என்னைப்பார்த்துக் கேள்விக் கேட்கிறான்.

இன்னொரு இளைஞரிடம் கேள்வி?

''சொந்த இடம் எது?''

''கந்தளாய்''

கந்தளாய் எவ்விடம்?

இளைஞன் இடத்தை சொன்னான்.

''அடேய்... உன்ரவீட்டுக்கு பக்கத்தில இருந்துதானே இரண்டு பேர் புலிக்கு போனார்கள்?''

''தெரியாது!''

''என்னடா பொய்சொல்கிறாய்?''

சேட்டில் பிடித்து இழுத்து பயமுறுத்திய பிறகுதான் அவன் அதே எடுபிடியால் விடுவிக்கப்பட்டான்.

இந்த எடுபிடிகள் தங்களது நடவடிக்கைகள் மூலம் போராட்டத்துக்கு செல்லுமாறு மறைமுகமாக இளைஞர்களைத் தூண்டுகிறார்களோ என்னவோ?

சுற்றிவளைப்பை ஏற்பாடு செய்தவர்களுக்கு இவை சமர்ப்பணம்.

ப

## ஊர்காவல் படையும் நகர் காவல் படையும்

## யாருக்கு காவல்

திருகோணமலை நகரத்துக்கு அருகில் இருக்கும் லிங்கநகர் கிராமத்தில் இடம் பெயர்ந்த தமிழ் மக்கள் மீண்டும் அங்கு வசிக்க வந்தபொழுது ஊர்க்காவல் படையினர் அம்மக்களை வெளியேறுமாறு எச்சரித்துள்ளனர்.

அவர்களின் எச்சரிக்கையை கவனத்தில் எடுக்காத கிராமத்தினர் அங்கு தங்கியதால் கோபமுற்ற ஊர்க்காவல் படையினர் சென்ற மாதம் 13ம் திகதி அக்கிராமத்திற்குள் புகுந்து, 250பேருக்கு தண்ணீர் வழங்க இருந்த தண்ணீர் குழாய்களை அடித்து நொறுக்கியுள்ளனர். இதைப்பற்றி பொலிசுக்கு புகார் செய்தும் அது கவனத்தில் எடுக்கப்படவில்லை.

இத்தண்ணீர் குழாய் ஈ.பி.டி.பி.யினரால் இரண்டு லட்ச ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டது.

யுக்திய280196

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# முஸ்லிம் காங்கிரஸ் எங்கே போய்க் கொண்டிருக்கிறது?

**நமது சகல தவறுகளையும் கீழ்மைகளையும் மறைத்துக்கொண்டு காலம் தள்ளும் மனோபாவமே நம்மிடம் உறைந்து கிடக்கிறது. நியாயமான கருத்துக்களுக்கும் விமர்சனங்களுக்கும் ஆளாகாத நமது அரசியல் தலைமைத்துவம் போகும் போக்கினை நாம்; என்றும் விமர்சிக்கத் தயங்கும் சுயபரிசீலனைக்கு உட்படுத்தத் தயங்கும் நிலையானது நமது வளர்ச்சிக்கு நன்மை பயக்கும் என்பது ஒரு கெட்ட கனவாகும்! அப்போக்கானது இன்று விசக்கிருமிகள் போல் நமது எதிர்காலத்தை அரித்துக் கொண்டிருப்பதை நாம் காண்கிறோம்.**

**உள்ளும் புறமும் வெவ்வேறு முஸ்லிம்களாக முஸ்லிம் அரசியல் தலைமைகள் காலம் தள்ளிக்கொண்டிருப்பதானது; இந்த நாட்டில் சிறுபான்மையினங்களின் அரசியல் போராட்டத்தை பலவீனப்படுத்தும் தற்கொலைக்கு ஒப்பான கைங்கரியமாகும். நமது அரசியல் தலைமைகள் தமிழர்களிடம் ஒன்று; முஸ்லிம்களிடம் ஒன்று; சிங்கள அரசியல் தலைமைகளிடம் ஒன்றென புறத்திற்கு ஒரு வேஷமும் அகத்துக்கு ஒரு வேஷமுமாக சந்தர்ப்பவாதமாக நடந்து கொண்டிருப்பதை நாம் காணவில்லையா?**

**இந்த துரதிருஷ்ட நிலைபற்றி சொல்வதற்காக தயங்குவதற்கோ வெட்கப்படுவதற்கோ எந்தக் காரணமும் இருப்பதாக நான் எண்ணவில்லை!**

**சிறுபான்மையினரின் உரிமைகள் தொடர்பான மௌனமும், அரசாங்கத்திற்கு முஸ்லிம் காங்கிரசின் கண்மூடித்தனமான ஆதரவும் எதிர்காலத்தில் நம்மை நாம் , பார்த்து வெட்கித்துக்கொள்ள வேண்டிய வரலாற்றுத் துரோகத்திற்கே இட்டுச் செல்லும்.**

**ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சிறுபான்மை மக்களின் போராட்டத்தை பின் தள்ளியது என்ற குற்றச்சாட்டும், பௌத்த மேலாதிக்கத்தின் ஸ்திரத்திற்கு முஸ்லிம் காங்கிரஸ் தனது பூரண ஒத்துழைப்பை வழங்கியது என்ற குற்றச்சாட்டுமே, முஸ்லிம் காங்கிரசின் சாதனைகளாக எதிர்காலத்தில் கொள்ளப்படும்.**



அரசாங்கத்தினால் இப்போது சட்ட நகல் வடிவத்தில் தயாரிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ள தீர்வு யோசனைகளில் முஸ்லிம்களுக்கான அரசியல் அமைப்பு ரீதியான உத்தரவாதம் தான் என்ன என்பதுபற்றி நாம் அதிக அக்கறை கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம்.

''சந்திரிகாவை நாங்களே பிரதம மந்திரியாக்கினோம்; நாங்களே ஜனாதிபதியாக்கினோம்'' என கம்பீரமாக மார்தட்டும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இந்த மார்தட்டலின் ஊடாக முஸ்லிம்களுக்கு முஸ்லிம் காங்கிரஸினால் பிரதம மந்திரியாக்கப்பட்ட, அதிஉத்தம ஜனாதிபதி ஆக்கப்பட்ட சந்திரிகா இப்போது வைத்துள்ள தீர்வுயோசனையில் முஸ்லிம்களின் அரசியல் நலன்களை பாதுகாப்பதற்கான ஏதாவதொரு ஏற்பாடொன்றை முன்வைத்துள்ளாரா என நாம் அனைவரும் சிந்திக்க வேண்டும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேர்தல் காலங்களின் போது கிண்ணியா தொடக்கம் பொத்துவில் வரை அரசியல் மேடைகளில் உரத்து முழங்கிய சந்திரிகா - அஷ்ரஃப் வரலாற்று புகழ்மிக்க உடன்பாட்டில் சந்திரிகாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட புனைகதை சொன்ன தென்கிழக்கு முஸ்லிம் மாகாணக் கோரிக்கை அல்லது முஸ்லிம்களுக்கான முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்ட அரசியல் அலகு பற்றி இன்றைய சட்ட நகல் வடிவத்தில் தயாரிக்கப்பட்ட யோசனைகளில் ஏன் ஒரு வரிதானும் வரவில்லை என்பது முக்கிய கேள்வியில்லையா? இது பற்றி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைமைகளிடம் முஸ்லிம்களின் அரசியல் உரிமைகளை வெற்றி கொள்ள வேண்டுமென அவாக் கொண்ட ஒரு மனிதன் கேள்வி எழுப்பினால் முஸ்லிம்காங்கிரஸ் தலைமை என்ன பதிலைத்தான் சொல்லும்?

முஸ்லிம்களின் அரசியல் தலைமைத்துவம் பேரினவாத ஆதிக்கம்கொண்ட ஐக்கியதேசியக்கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிகளின் முஸ்லிம் ஏஜென்டுகளால் நிர்வகிக்கப்பட்ட காலத்தில் முஸ்லிம் சமூகம் என்ன நிலையில் இருந்ததோ அதைவிட உசத்தியாக இங்கு இப்போது ஒன்றுமேயில்லை. அந்த முகவர்களும் முஸ்லிம்பகுதிகளில் கல்விக் கல்லூரிகளைத் திறந்தார்கள்தான், பாதைகள் போட்டார்கள் தான், பாடசாலைக் கட்டிடங்கள் கட்டினார்கள்தான், தொழில் வழங்கினார்கள்தான், அமைச்சர்களாக பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்தார்கள்தான், ஆனால் குரல்கள் எழுப்பவில்லை. தங்களது கண்டனங்களை வெளிப்படுத்தவில்லை. பதவிகளில் தொங்கிக்கொண்டிருப்பதற்காக சிங்கள அரசியல் தலைமைகளுக்கு தங்களின் விசுவாசங்களை தெரிவித்துக்கொண்டிருந்தனர். இப்போது முஸ்லிம் காங்கிரசும் அவர்களைப் போல்தான் நடந்துகொள்கிறது.

சந்திரிகாவிற்கு முஸ்லிம் காங்கிரஸ் எதற்காக ஆதரவு வழங்கியது? அமைச்சர் பதவிகளுக்காகவா அல்லது முஸ்லிம் சமூகத்தின் அரசியல் உரிமைகளுக்கான உத்தரவாதத்திற்காகவா? அமைச்சர் பதவிகளுக்காக இல்லை. முஸ்லிம்களின் அரசியல் உரிமைகளை உத்தரவாதப்படுத்தவே வழங்கினோம் என்றால் இப்போது முஸ்லிம் காங்கிரஸ் தலைமை என்னதான் செய்து கொண்டிருக்கிறது?

பாராளுமன்றத் தெரிவுக்குழு முன் முஸ்லிம் காங்கிரஸ் தனது கோரிக்கைகளை முன்வைக்கும் எனச் சொல்வதற்கு முஸ்லிம் காங்கிரஸ் எதிர்க்கட்சியில் இருந்து கொண்டும் தெரிவுக்குழுவின் முன், தனது கோரிக்கைகளை முன் வைக்கலாம். எதிர்க்கட்சியில் இருந்திருப்பின் பலமாக தங்களது கோரிக்கைகளை முஸ்லிம் காங்கிரஸ் முன்வைக்க வாய்ப்பிருந்திருக்கும்.

தெரிவுக்குழுவின் ஊடாக பிரச்சினைகளுக்கு தீர்வு காணலாம் என முஸ்லிம் காங்கிரஸ் நம்புகிறதா? இன்றைய நிலையில் பேரினவாதிகள், பௌத்த பிக்குகள், ஐக்கிய தேசியக்கட்சியினர், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலுள்ள இனவாதிகள் சிறுபான்மையினருக்கு அதிகாரத்தின் சிறுபகுதியைத்தானும் பகிர்ந்தளிப்பதற்கு மூர்க்கம் கொண்டு எதிர்க்கும் நிலையில் தெரிவுக்குழு சிறுபான்மை மக்களின் அபிலாசைகளை ஓரளவேனும் பாதுகாக்கும் ஒரு பொது இணக்கத்திற்கு வருவது நூறுவீதமும் சாத்தியமற்றதொரு நிலையாகும். பிரேமதாச காலத்தின் மங்கள முனசிங்க தெரிவுக்குழுவிற்கு என்ன நடந்தது என்பது முஸ்லிம் காங்கிரசுக்கு தெரியாமல் இருப்பது வியப்பைத்தருகிறது. தெரிவுக்குழுவின் முன் பிரச்சினைகளை முன்வைப்பதல்ல விடயம். முஸ்லிம் காங்கிரஸ் தனது முழு ஆதரவினையும் வழங்கும் இன்றைய அரசு ஏன் தெளிவாக முஸ்லிம்களின் பிரச்சினைகளை இனம் கண்டு; முஸ்லிம்களுக்கும் இந்நாட்டில் பிரச்சினைகள் இருக்கிறது என்பதை உணர்ந்து தங்களால் முன்வைக்கப்பட்ட தீர்வு யோசனைகளில் முஸ்லிம்களின் அதிகார அலகு; அல்லது அவர்களுக்கான தனித்துவமான ஏற்பாடுபற்றி விதந்துரைக்கவில்லை என்பதுதான் கேள்வி. அப்படியானால் அஷ்ரஃப் அவர்கள் முஸ்லிம்களுக்கு பிரச்சினைகள் இருக்கிறது என்பதை சந்திரிகாவுக்கு இடித்துரைக்க வில்லையா? முஸ்லிம்களுக்கும் தனித்துவமான தீர்வு தேவை என்பதை சந்திரிகாவிடம் வலியுறுத்தவில்லையா?

அரசினால் வைக்கப்பட்ட தீர்வுயோசனைகள் தமிழ் மக்களை திருப்திப்படுத்தவில்லை. முஸ்லிம்கள் பற்றி சொல்லவே இல்லை. ஆனால் அமைச்சர் அஷ்ரஃப் அவர்கள் கடந்த 28/01/96இல் ரூபவாஹினிக்கு வழங்கியுள்ள பேட்டியொன்றில்; இத்தீர்வு யோசனைகளை பாராட்டுகிறார். அப்படி அவர் பாராட்டுவதற்கு முஸ்லிம்களுக்கு இத்தீர்வு யோசனையில் என்னதான் நன்மையிருக்கிறது என்பது தெரியவில்லை. தமிழ் கட்சிகள் ஏகோபித்த குரலில் சந்திரகாவால் முன்வைக்கப்பட்ட இத்தீர்வு யோசனைகளை காரசாரமாக விமர்சிக்கும் போது; மற்றொரு சிறுபான்மை இனத்தை பிரதிநிதித்துவப்படுத்தும், அதன் அரசியல் உரிமைகளுக்காக போராடுகிறோம் என வெறுமனே மார்தட்டும் முஸ்லிம் காங்கிரஸ்; தனது மனமார்ந்த பாராட்டுதல்களை தெரிவித்திருப்பதானது அமைச்சர் பதவிகளுடன் திருப்திப்பட்டுப் போகும் ஒரு மனோபாவம் தான் என்பது தெளிவாகிறது.

பாராளுமன்ற உறுப்பினர் யூ.எல். முகிதீன் அவர்கள் அண்மையில் சம்மாந்துறையில் பேசியதாக தினகரன் பத்திரிகையில் வந்த செய்தியொன்று விசேட கவனிப்புக்குரியது. ''சமாதானத்திற்காகவே வடக்கில் சூரியக்கதிர் நடவடிக்கை சமாதானத்திற்காகவே இப்போது கிழக்கில் சூரியக்கிரகண 'நடவடிக்கை'' என்கிறார். ஆகவே யுத்தத்தின் மூலம் தமிழர்களை அடக்கிவிடலாம்; அமைச்சர் பதவிகள் மூலம் முஸ்லிம்களை அடக்கிவிடலாம். பிறகு எதற்கு அதிகாரப்பரவலாக்கம்; அதில் என்ன இருந்தால் நமக்கென்ன என இவர்கள் எண்ணுகிறார்கள் போல தெரிகிறது.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபோது; அன்று பதவியில் இருந்த ஐக்கியதேசியக்கட்சி முஸ்லிம் தலைமைகளிடம் முஸ்லிம் காங்கிரசினர் கேட்ட கேள்விகளை ஞாபகப்படுத்திப்பாருங்கள். ''இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் போது இவர்கள் என்ன செய்துகொண்டிருந்தார்கள்? எங்களை அனுப்புங்கள் நாங்கள் பேசுகிறோம்'' (மன்னிக்கவும், வசவுகளை எழுத முடியவில்லை, நாகரீகம் கருதி) என்றார்கள். இப்போது இவர்கள் என்னதான் செய்துகொண்டிருக்கிறார்கள்? மன்சூர், மஜீத், மஃரூப் முஸ்லிம்களை விற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்றவர்கள்; இப்போது அமைச்சர் அஷ்ரஃப்பாக, பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாவாக, அபூபக்கராக மாறி முஸ்லிம்களின் 'வாக்குகளை வியாபாரம்' செய்பவர்களாக மாறிவிட்டிருப்பதை என்னவென்பது.

முஸ்லிம் காங்கிரஸ் தனது அரசியல் வழியில் சொல்வதொன்று, செய்வதொன்றாகவே நடந்துகொண்டிருக்கிறது. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் முஸ்லிம்கள் பற்றி ஒரு வரிதானும் இல்லை. முஸ்லிம் தலைமைகளை கலந்து ஆலோசிக்காமல் இவ் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இவ் ஒப்பந்தத்தை நாங்கள் முற்றுமுழுதாக எதிர்க்கிறோம் என சொன்ன முஸ்லிம் காங்கிரஸ் இந்திய அரசு நடத்திய மாகாண சபைத்தேர்தலில் பங்கு கொண்டதும் அதனூடாக இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டதும் இந்திய அரசின் பண, ஹெலிகொப்டர் உதவிகளைப் பெற்றுக்கொண்டு தேர்தல் பிரச்சாரம் செய்ததும் அதனூடாக 17 மாகாண சபை உறுப்பினர்களை பெற்றதையும் யாரும் மறந்திருக்க மாட்டார்கள்.

காரைதீவில் தொண்டர் படையில் இருந்த 40 முஸ்லிம் இளைஞர்கள் முஸ்லிம் என்ற ஒரே காரணத்துக்காக வேறுபடுத்தப்பட்டு வீதியில் வைத்து படுகொலை செய்யப்பட்ட போது அம்மாகாண அரசில் முஸ்லிம் காங்கிரஸ் என்ன செய்து கொண்டிருந்தது? இந்தியப் படைகளின் காலத்தில் சம்மாந்துறை, கல்முனைக்கிராமங்கள் பற்றி எரியும் போது முஸ்லிம் காங்கிரஸ் என்ன செய்துகொண்டிருந்தது? அக்கரைப்பற்றில் முஸ்லிம் காங்கிரஸ் மாகாணசபை உறுப்பினர் அலி உதுமான் ENDLF னால் படுகொலைசெய்யப்பட்டபோது 17 மாகாண சபை உறுப்பினர்களும் முஸ்லிம் காங்கிரசில் இருந்த பாராளுமன்ற உறுப்பினர்களும் தங்களது பதவிகளை ராஜினாமா செய்து தங்களது எதிர்ப்பைக் காட்ட முன்வரவில்லை. மாறாக அவ் அராஜக மாகாண அரசுக்கு பக்கபலமாகவே இருந்தார்கள்.

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களிலுள்ள வாழைச்சேனை, ஓட்டமாவடி, காத்தான்குடி, கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, பொத்துவில் முஸ்லிம் கிராமங்கள் இவர்கள் ஆதரவுடனான வடக்கு கிழக்கின் மாகாண அரசின் தமிழ்த் தேசிய இராணுவத்தால் துவம்சம் செய்யப்பட்டுக் கொண்டிருந்தபோது இவர்கள் மட்டும் தங்களது பதவிகளை காப்பாற்றிக்கொள்ள எடுத்த முயற்சிகளைத் தவிர - முஸ்லிம் சமூகத்திற்கு இவர்கள் ஒன்றுமே செய்யவில்லை. இது 1988, 89, 90 களில்! அப்போதுதான் ஒன்றுமே செய்யமுடியவில்லை - இப்போதாவது?

இன்று புத்தமதத்திற்கு அதிக இடம் வழங்கி; ஆராதனை செய்துகொண்டு வரப்படும் இப்புதிய அரசியலமைப்பின் விளைவால் முஸ்லிம்கள் இந்த நாட்டில் பாதிக்கப்படுவார்கள் என முஸ்லிம் காங்கிரஸ் உணரவில்லையா? பௌத்த பிக்குகள் மேலும் மேலும் தேசிய அரசியலில் ஆதிக்கம் செலுத்தும் நிலைமையானது தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஒரு சிறுவிடயத்தை இந்நாட்டில் செய்துகொள்ள தடையாக இருக்கும் என்பதை நாம் அனுபவ வாயிலாக உணர்ந்திருக்கிறோம்.

அண்மையில் அஷ்ரஃப் அவர்களுக்கு ஏற்பட்ட இக்கட்டான நிலையொன்றைச் சொல்லலாம் என நினைக்கிறேன். ஒலுவில் துறைமுகம் (?) அமைப்பதற்கு அமைச்சர் அஷ்ரஃப் அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்ற பின்; அதன் பின்எழுந்த பௌத்த மகாநாயக்க தேரர்களின் கடும் எதிர்ப்பை தணிப்பதற்காக கண்டி தலதா மாளிகைக்குப் போய் மகாநாயக்கர்களை சந்தித்து இது முஸ்லிம்களுக்கு மட்டுமான துறைமுகம் அல்ல, மொனறாகலையில் உள்ள, பதுளையில் உள்ள சிங்கள மக்களுக்குமான துறைமுகம்தான். நீங்கள் சந்தேகம் கொள்ளத்தேவையில்லை என அடித்து சத்தியம் பண்ண வேண்டி இருந்ததை அமைச்சர் அஷ்ரஃப் மறந்திருக்கமாட்டார் என எண்ணுகிறேன்.

உடனடியாக இன்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசினர் தன்து அனைத்து பிற நோக்கங்களையும் மறந்து; அல்லது ஒரு பக்கம் வீசிக்கடாசிவிட்டு செய்ய வேண்டிய பணிகள் ஏராளம் உள்ளன. அதில் மிகவும் பிரதானமானது. சிறுபான்மை மக்களின் உரிமைகளை சிங்கள அரசியல் தலைமைகளிடமிருந்து வென்றெடுப்பதற்காக முன் வருதல்தான். இந்தப் பணியை தமிழர்கள் மட்டும்செய்ய முடியாது! முஸ்லிம் காங்கிரசுக்கும் முஸ்லிம்களுக்கும் இந்தபபணியில் முக்கிய பங்கு இருக்கிறது.

பாராளுமன்றத்திற்குள்ளேயும் பாராளுமன்றத்திற்கு வெளியேயும் சிறுபான்மை இனங்களின் அதிகாரங்களை வென்றெடுப்பதற்கு மிகவும் உறுதியான கருத்துக்களை முஸ்லிம் காங்கிரஸ் தெரிவிப்பதன் ஊடாக போராடுவதன் மூலமே இது சாத்தியப்படும். மாறாக அமைச்சர் அஷ்ரஃப் அவர்கள் பாராட்டுதல்களை மட்டும் தெரிவித்து விட்டு சுட்டிக்காட்ட வேண்டிய அடிப்படை விடயங்களில் மௌனமாக இருப்பாரேயானால்; இன்று தமிழ் மக்கள் சிங்கள மக்களிடமிருந்து ஜனநாயக ரீதியாக தீர்வைத் தருவார்கள் என்ற நம்பிக்கையில் விரக்தியுற்றிருக்கும் நிலைமை நாளை முஸ்லிம் சமூகத்திற்கும் ஏற்படலாம்.

சிறுபான்மையினரின் உரிமைகள் தொடர்பான மௌனமும், அரசாங்கத்திற்கு முஸ்லிம் காங்கிரசின் கண்மூடித்தனமான ஆதரவும் எதிர்காலத்தில் நம்மை நாம் , பார்த்து வெட்கித்துக்கொள்ள வேண்டிய வரலாற்றுத் துரோகத்திற்கே இட்டுச் செல்லும்.


ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சிறுபான்மை மக்களின் போராட்டத்தை பின் தள்ளியது என்ற குற்றச்சாட்டும், பௌத்த மேலாதிக்கத்தின் ஸ்திரத்திற்கு முஸ்லிம் காங்கிரஸ் தனது பூரண ஒத்துழைப்பை வழங்கியது என்ற குற்றச்சாட்டுமே, முஸ்லிம் காங்கிரசின் சாதனைகளாக எதிர்காலத்தில் கொள்ளப்படும்.

அபூநிதால்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net







# மத்திய வங்கி குண்டு வெடிப்பு:

# புதிய சிந்தனைகளுக்கு வழிவகுக்குமா?

மத்திய வங்கி தலைமையகம் மீதான குண்டுத்தாக்குதல், புலிகளை வடக்கு கிழக்கில் அடக்கி விடுவதால் நிலைமையை சுமுகமாக்கிவிட முடியாதென்பதை தெளிவு படுத்துகின்றது என்கிறது யுக்திய பத்திரிகை. ஆம், ரிவிரச நடவடிக்கை மூலமாக புலிகளின் இடுப்பை முறித்துவிட்டதாக அரசாங்கத் தரப்பு அபிப்பிராயங்கள் இருந்த போதும், இந்த நிகழ்வு இடுப்பு முறிந்த நிலையிலும் கூட புலிகள் அரசுக்கு ஆபத்தானவர்களே என்பதைக் காட்டியுள்ளது உண்மைதான்.

மத்திய வங்கித் தாக்குதல், உண்மையில் பெருமளவுக்கு பொதுமக்களைப் பலி கொண்டதும், பலரைப் படுகாயங்களுக்குள்ளாக்கியதுமான ஒரு ஈவிரக்கமற்ற செயல் என்பதில் யாருக்குமே சந்தேகம் இருக்க முடியாது. மூவாயிரம் அடி உயரத்தில் பறந்தபடி பீப்பாய் குண்டுகளை வீசும் போதும் சரி, இலக்குகள் ஏதும் இன்றி இராணுவ முகாமில் இருந்து எறிகணைகளை கண்மூடித்தனமாக வீசும் போதும் சரி, இவ்வாறுதான் வடக்கு - கிழக்கில் குழந்தைகள் முதியோர் கொல்லப்பட்டனர். வீடுவாசல்கள் உடைந்து தரைமட்டமாகின்றன. கையிழந்த, காலிழந்த, அங்கவீனர்களாக பலநூறுபேர் உருவாகின்றனர். இவையெல்லாம் அரசாங்கப் படைகளின் காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகள் என்று புலிகள் உட்பட, மக்களின் நலனில் அக்கறையுள்ள சகலராலும் கண்டிக்கப்பட்டுள்ளன. புலிகளின் நிலைகளைத் தாக்குகிறோம் என்று கூறியபடி அரசாங்கப் படைகள் நடாத்திய தாக்குதல்களுடன் ஒப்பிடக்கூடிய ஒரு நடவடிக்கைதான் இப்போது நடந்துள்ள மத்திய வங்கி கட்டிடத்தின் மீதான தாக்குதலும் கூட. இலங்கை அரசின் பொருளாதார நிலைகளை தாக்குவது மட்டும்தான் புலிகளின் நோக்கம் என்று இருந்தால், அவர்கள் பொதுமக்கள் பாதிப்பை தவிர்த்துக்கொள்ளும் விதத்தில் தமது நடவடிக்கைகளைச் செய்திருக்க முடியாதா என்ற கேள்வி இவ்விடத்தில் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை. பொதுமக்கள் பெருமளவில் கூடுகின்ற இடத்தில், அவ்வாறு கூடுகின்ற ஒரு நேரத்தில் இத்தகைய ஒரு செயலைச் செய்யப் புலிகள் துணிந்தது, தமது வழிமுறைபற்றியோ, அதன் பக்க விளைவுகள் பற்றியோ அவர்கள் அக்கறைப்படவில்லை என்பதையே காட்டுகின்றன. இந்த விடயத்தில் புலிகள் தாம் ஒன்றும் அரசாங்கப் படைகட்குச் சற்றும் வேறுபட்டவர்கள் அல்ல என்று நிரூபித்து விட்டிருக்கிறார்கள்.

ஆனால், விடயம் இவ்வளவுடன் முடிவடைந்து விடவில்லை. இது வெறும் பொருளாதார நிலைகள் மீதான தாக்குதல், அதன் பக்கவிளைவாக பொதுமக்கள் கொல்லப்படல் போன்ற விடயங்களுடன் மட்டுப்படுத்தப்படக்கூடிய ஒன்றல்ல. ஏனென்றால், இவை அரசாங்கத்தினதும் புலிகள் என்ற அமைப்பினதும் எதிர்காலம் குறித்த கேள்வியுடனும் சம்பந்தப்பட்டவையாகவும் உள்ள ஒரு அரசியல் விடயமாகும்.

இந்தத் தாக்குதலை ஒரு வெறும் வெறிபிடித்த நடவடிக்கையாக அரசாங்கம் கருதுவதோ அல்லது இத்தகைய நடவடிக்கைகளால் தமிழ் மக்களது உரிமைகளைப் பெற்றுவிடமுடியும் என்று புலிகள் கருதுவதோ ஒருபோதும் சரியானதல்ல. மாறாக இருவரும் கூறும் சமாதானம், விடுதலை என்ற நோக்கங்கட்கு நேரெதிரான நிலைக்கே இது இட்டுச் செல்லும்.

புலிகளை மிலேச்சத்தனமான, காட்டுமிராண்டித்தனமான போக்காளர்கள் என்று கண்டிப்பவர்களில் பலர், புலிகளும் சரி, அரச படைகளும் சரி பொதுமக்களது உயிர் சம்பந்தப்பட்ட, அவர்களது பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விடயங்களில் ஒரே விதமான போக்கையே கொண்டுள்ளார்கள் என்பதை கவனிக்கத் தவறிவிடுகின்றனர். இதனால், இதன் பின்னாலுள்ள அரசியல் முக்கியத்துவத்தைக் காணமுடியாத நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டு விடுகின்றனர். அவ்வாறே புலிகளும் பொருளாதார ரீதியில் அரசு பலவீனப்பட்டுவிட்டால், அது தமக்கு வாய்ப்பாகும்

வீனமாக்கி வருகிறார்கள்.

வலிகாமத்தினை எப்படியாவது கைப்பற்றி விடவேண்டும் என்ற வேகம் அல்லது வெறி எவ்வளவு தூரம் அரசாங்கத்திடம் இருந்ததோ அதேயளவு வேகமும் வெறியும் புலிகளிடமும் இருந்ததும் உண்மைதான். இது வலிகாமம் மக்களை முற்று முழுதாகவே தமது பிரதேசங்களை விட்டு வெளியேற்றி அகதிகளாக வாழும் நிலைக்கு தள்ளி விட்டுள்ளது. விடுதலைக்கான யுத்தத்தின் பெயரால் எத்தகைய துன்பங்களுக்கும் தம்மை ஆளாக்கிக் கொள்ள அங்குள்ள மக்கள் தயாராக இருந்தாலும் கூட விடுதலைக்கான யுத்தம் தானா இது என்ற சந்தேகமும் அவர்கள் மத்தியில் எழுமானால், இந்தத் துன்பங்களை ஏன் தாங்கிக்கொள்ள வேண்டும் என்ற கேள்வி அவர்களிடம் எழுவது இயல்பே. ஏற்கெனவே வலிகாமத்தில் தோன்றியுள்ள நிலைமை இதுதான். மக்களுக்கு ஏன் இவ்வாறு இழுத்துச் செல்லப்படுகிறோம் என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையின் போது அரசியல் விவகாரங்கள் பேசப்படாததும், அது நின்று போனதற்கு எந்த அரசியல் முரண்பாடுகளும் வெளிவராமல், வெறும் இராணுவ நலன்களே வெளிவந்ததும், தாம் இந்த அரசியல் சதுரங்கத்தில் வெறும் பகடைக்காய்கள் தானா என்ற கேள்வியை அவர்கள் மத்தியில் எழுப்பியுள்ளது. இது புலிகளுக்கு மிகவும் ஆபத்தான ஒன்றாகும். ஏற்கெனவே புலிகளை எதிர்த்த மக்களது எதிர்ப்பு நடவடிக்கைகள் ஆங்காங்கே நடந்துள்ளதாகத் தெரியவருகிறது.

யுத்தசூழல், எல்லா மனிதாபிமான விழுமியங்களையும் காலில் போட்டு மிதித்து விட்டுள்ளது. இதனால் தற்காலிக நன்மைகள், சில வேளைகளில் புலிகளுக்கும் சரி, அரசுக்கும் சரி, கிடைத்தாலும் கூட நீண்ட கால நோக்கில் இவை உருவாக்கவல்ல அரசியற் சிக்கல்கள் மிகவும் பெரியவை என்பதை இருதரப்பும் விளங்கிக்கொண்டதாகத் தெரியவில்லை. மனிதாபிமான விழுமியங்களைப் பலவீனப்படுத்தி அரசியல் வெற்றி காண்பது என்பது ஒரு நீண்ட காலத்துக் கனவாக மட்டுமே இருக்கமுடியும்.

அண்மையில், அரசாங்கம் முன்வைத்துள்ள அரசியற் தீர்வை நடைமுறைக்கு கொண்டு செல்வதில் புலிகளும் சிங்கள தீவிரவாதிகளும் மட்டுமே எதிர்க்கின்றார்கள் என்று கூட கூறியுள்ளார் ஜனாதிபதி அவர்கள். யுத்தத்தின் மூலமாக தீர்வை நடைமுறைப்படுத்த விரும்பும் அவர்களுக்கு, இன்னும் மூன்றுமடங்கான நிதியைப் பாதுகாப்புச் செலவீனமாக பெருக்கவும், இன்னும் பலமடங்கு படையினரைச் சேர்க்கவும் வேண்டிய நிலைமை ஏற்படும் எனக் குறிப்பிட்ட அவர், சமாதானப் பொதியை எவ்வாறாயினும் தாம் நடைமுறைக்கு கொண்டுவருவோம் என்று சூளுரைத்துள்ளார்.

ஆயினும், அதற்கான நடைமுறையில் அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகள் மூலமாக அதற்கெதிரான நிலைமைகளையே தோற்றுவித்து வருகிறது.

உதாரணமாக, அரசியற் தீர்வுப் பொதியின் சட்டவரைவு இப்போது வெளிவந்துள்ள போதும் அது பிராந்திய அரசாங்கங்கள் பற்றிய தெளிவான விடயங்களை முன்வைக்கத் தவறிவிடுகிறது. அதிகார அலகுகள் பற்றி இப்போது பேச்செடுப்பதும், தேசியக் கொடி பௌத்த மதம் போன்றவற்றைப் பற்றிப் பேசுவதும், புதிய கோரிக்கைகளை முன்வைப்பதும் சிங்களத் தீவிரவாத சக்திகளை மேலும் பலமூட்டி விடும் என்கிறார் அமைச்சர் லலித் பீரிஸ். தேசியக்கொடி மற்றும் பௌத்த மதம் குறித்த விவகாரங்களால் எந்தச் சிக்கலும் இருக்கவில்லை என்று அவர் சொல்வதைக் கேட்கும்போது, இலங்கையின் இவ்வளவு கால அரசியற் சிக்கல்களை அவர் எவ்வளவு மேலோட்டமாக நோக்குகிறார் என்று தெரிகிறது. சிங்கக் கொடி மட்டுமல்ல, தேசியகீதம் கூட பிரச்சினைக்குரிய ஒரு அடிமைத்தனத்தின் குறியீடாக கருதப்பட்டதும், பௌத்த மதம் சிங்கள பௌத்த பேரினவாத அரசின் குறியீடாக அர்த்தப்படுவதும் என்ற நிலை இங்குள்ள சிறுபான்மை மக்கள் மத்தியில் நிலவுவதை அவர் கவனித்ததாகத் தெரியவில்லை. இதில் வேடிக்கை என்னவென்றால், இந்த விடயம் குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கூட அவருக்கு சொல்லிக் கொடுக்காததுதான்.

இப்போது வெளிவந்துள்ள தீர்வு அரசாங்க - கூட்டணி கூட்டுத்தயாரிப்பு என்பது நாடறிந்த இரகசியம். அப்படியிருக்க, இப்படி ஒரு நிலைமை நிலவுவது சமாதானத்தில் அக்கறையுள்ள அனைவருக்கும் கவலைதரும் விடயமாகும் என்பதில் சந்தேகமில்லை.

சமாதானத்திற்கான தீர்வுயோசனைகளையோ சட்டவரைவுகளையோ புலிகளுக்கு அனுப்ப மாட்டோம் என்பதில் விடாப்பிடியாக இருப்பதும், த.வி.கூ. தவிர்ந்த ஏனைய தமிழ்க் கட்சிகள் கூட கூட்டாக ஒத்துக்கொள்ளாத நிலைமையில் உள்ள ஒரு தீர்வை நடைமுறைப்படுத்த முயல்வதும், இந்த விவகாரம் குறித்த அரசின் பொறுப்பற்ற தனத்தையே காட்டுகின்றன.

உண்மை. அமைச்சர் பீரிஸ் அவர்கள் சொல்வது போலவே சிங்களப் பெரும்பான்மை மக்களது ஆதரவை வென்றெடுக்க வேண்டும், ஐ.தே.கவின் ஆதரவைப் பெறவேண்டும் என்பதெல்லாம் இன்றைய 2/3 பெரும்பான்மை அற்ற அரசுக்கு அவசியமானவைகள்தான் ஆனால் அதற்காக முன்வைக்கப்படுகின்ற தீர்வுகளின் சாரத்தையே மறந்துவிடுகிறது எந்த வகையில் நியாயமானது? அவர் சொல்வதுபோல ஓகஸ்ட் மாதத்தில் வைக்கப்பட்ட யோசனைகட்கும் இப்போது வைக்கப்பட்டுள்ள சட்ட வரைவுக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் இல்லாமல் இருக்கலாம். ஆனால் அன்றைய யோசனைகளின் குறைபாடுகள் நீக்கப்படுவது எப்போது?

நாட்டின் அரசியல் தீர்வு முயற்சி வெற்றி பெறுவது சமாதான தீர்வு திட்டம் நடைமுறைக்கு வருவதோடு சம்பந்தப்பட்ட ஒன்று என்றால், அதை நடைமுறைக்குக் கொண்டு வருவதில் அரசாங்கத்திற்கு முக்கியமான பங்கு உண்டு. ஐ.தே.கவுடன் பேசி அதனையும் இந்தத் தீர்வுத்திட்டத்திற்கு உடன்படவைக்கும் முயற்சியை அமைச்சர் அவர்கள் இப்போது தமிழ்க் கட்சிகளிடம் கையளித்துள்ளார். ஆனால் தமிழ்க் கட்சிகளோ இந்த வரைபு போதாது என்கின்றன. இந்த நிலையில் அவர்களால் எப்படி ஐ.தே.கவை உடன்பாடு காணுமாறு கோரமுடியும்? தீர்வை நடைமுறைப்படுத்த, அதற்கு ஆதரவாக பிற சக்திகளை திரட்ட முயல்வதற்குப் பதில் அந்த முயற்சியிலிருந்து ஒதுங்கிக் கொள்ள முயல்வதாகவே தோன்றுகிறது.

இவ்வாறானதொரு நிலையில் சமாதான முயற்சிகள், அமைச்சரவர்கள் சொல்வது போல எந்தத் தடங்கலும் இன்றி முன்கொண்டு செல்லப்படல் சாத்தியமா என்ற சந்தேகம் பெரிதாக எழுந்து நிற்கிறது. சிறுபான்மை மக்கள் தீர்வை ஆதரிப்பது என்பது அது அவர்களது உரிமைகளுக்கு போதிய அதிகாரங்களை வழங்குகிறதா என்பதுடன் சம்பந்தப்பட்ட ஒன்று என்பதை அரசாங்கம் கணக்கில் எடுக்கவேண்டும். புலிகளை வெறுமனே மனநோய் பிடித்த கொலைகாரர்களாகக் காணுவதை அரசாங்கம் நிறுத்தி அரசியல் சட்ட நகல்கள் தொடர்பாகப் பேசத்தயாராக வேண்டும். தெற்கில் உள்ள சிங்களத் தீவிரவாத போக்காளர்களது சந்தேகங்கள் நியாயமற்றது என்று நிரூபிக்கும் பொறுப்பை இப்பேச்சுவார்த்தையின் போது புலிகளிடம் கையளிக்கவேண்டும்.

சிறுபான்மை இனங்களின் பாதுகாப்பும் பெரும்பான்மை இனங்களின் பாதுகாப்பும் உத்தரவாதப்படுத்தப்படுவதற்குரிய தீர்வை இவ்வாறான ஒரு நடைமுறை மூலமாகவே சாத்தியப்படுத்த முடியும். பிரிந்து போதலுக்கு எதிரான சரத்தைக் கொண்டுவருவதன் மூலம் சிங்களத் தீவிரவாதிகளின் சந்தேகத்தை திருப்திப்படுத்தும் அதேவேளை, சிறுபான்மை இனங்களது சந்தேகங்கள் வலுக்கின்றன என்பதை மறந்து விடக்கூடாது. உதாரணமாக, பிராந்திய சபைகளை கலைப்பது என்பது மிகவும் மோசமானதொரு நிலைவரும் போது அதாவது ஆயுதக்கிளர்ச்சி, பிரிந்து போகும் நிகழ்ச்சி வரும் போது மட்டுமே செய்யப்படும் என்று கூறுகின்றபோதும், அண்மையில் மிகச்சாதாரணமான ஒரு குற்றச்சாட்டுக்காகவே மாகாண சபைகள் (வடமத்திய, சப்ரகமுவ மாகாணங்கள்) கலைக்கப்பட்டதை யாரும் மறந்துவிட முடியாது என்பதை அரசு சிந்திக்க வேண்டும்.

ஆக, மத்திய வங்கித் தாக்குதல், குறைந்தபட்சம் இத்தகைய புதிய சிந்தனைகளுக்காவது வழிகோலவேண்டும். அப்போதுதான் சமாதான முயற்சிகளில் ஆரோக்கியமான மாற்றங்கள் ஏதாவது ஏற்பட வாய்ப்பு உண்டு. இது பற்றிய மாற்றங்கட்கு காத்திருக்க மக்கள் தயார்.

அரசாங்கம்?

புலிகள்?

நிலாமுறுப்பான்:



"....மனிதாபிமான விழுமியங்களை பலவீனப்படுத்தி அரசியல்வெற்றி காண்பது என்பது ஒரு நீண்ட கால க னவாக மட்டுமே இருக்க முடியும்..."




படங்கள் - யுக்திய.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# கடவுச் சீட்டு பெற்றவர்களின் கதி !



இ. தொ.காவின் தூதுக்குழுவொன்றுடனான சந்திப்பின் போது இந்தியக் கடவுச் சீட்டு பெற்றுள்ள மலையகத் தமிழ் மக்களது பிரச்சினையைத் துரிதமாக தீர்ப்பதற்கு ஜனாதிபதியவர்கள் இணங்கிக்கொண்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்முடிவு மலையகத்தில் அந்நிய பிரஜைகளாக நடத்தப்படும் ''கடவுச்சீட்டுப் பெற்ற 84 ஆயிரம் மலையக தமிழரையும் கௌரவமான முறையில் நடாத்தவும், தேசிய, குடியியல், உரிமைகள் வழங்கவும்'' எடுக்கப்பட்ட முடிவானால் மனப்பூர்வமாக வரவேற்க முடியும்.

சகல மானிடப்பெறுமானங்களையும், மனித உரிமைகளையும், மனிதாபிமானத்தையும், மோதி மிதித்துவிட்டு மலையக தமிழினத்திற்கெதிராக இலங்கை இந்திய ஆட்சியாளர்களால் திணிக்கப்பட்ட ஒப்பந்தங்கள் நிச்சயமாகவும், திட்டவட்டமாகவும் மலையக மக்களுக்கெதிரான அடிமைச் சாசனங்களே. இவற்றுக்குக் கட்டுப்படவேண்டிய எவ்வித அரசியல், தார்மீக உரிமையும் மக்களுக்கில்லை. இந்நாட்டில் உழைக்கவும் சாகவும் மட்டுமல்ல வாழவும் பிறந்த மக்கள் கூட்டமாக மலையக தமிழ் மக்கள் நடாத்தப்படவில்லை.

காலனித்துவ ஆட்சியாளர்களால் காலனித்துவ பொருளாதாரமொன்றை நிறுவவென கொண்டுவரப்பட்ட மலையக மக்கள் இன்றைக்கு இருநூறாண்டுகளாக இந்நாட்டின் பொருளாதார ஊற்றுமூலமாக திகழ்ந்துவருகின்றமை வரலாற்று உண்மையாகும்.

காலனித்துவ ஆட்சியின் முடிவில் நிராதரவாக விடப்பட்ட இம்மக்களது எதிர்காலம் குறித்து உறுதிமிக்க குரல் தரவல்ல தலைமைகள் இல்லாத நிலையில்; இம்மக்களது எதிர்காலத்தை இலங்கை - இந்திய அரசுகள் பந்தாடிய வரலாற்றுத் துரோகத்தனத்தை இன்னும் இம்மக்கள் சுமக்க வேண்டியிருக்கிறது. பண்டச்சரக்கொன்றை பங்கிடும் கடன் பங்கீட்டுக்கு சமனான ஒப்பந்தங்களான....

1. நேரு - கொத்தலாவல ஒப்பந்தம் (1958)
2. சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் (1964)
3. சிறிமா - இந்திரா காந்தி ஒப்பந்தம் (1974)

என்பன எவ்விதமான மானிடவியல், சமூகவியல், பின்னணியும் கொண்டவை அல்ல. இவை உலக சமூக பொருளாதார நிகழ்வுப் போக்கையும், இந்தியாவின் பிராந்திய மேலாட்சிக்காக, அயல்நாடுகள் போடும் அனைத்து வியூகத்தையும் மையமாகக் கொண்டிருந்ததோடு, இன்னொருபுறம் இலங்கையின் சமூகப் பொருளாதார நெருக்கடிகளை வெற்றிகொள்ள சுயாதீன மிக்க கொள்கைத்திட்டத்தை முன்வைக்கமுடியாத பிற்போக்குத்தனமான, இனவெறிமிக்க தனது முதலாளித்துவ ஆட்சியாளருக்கு சிறந்த தற்காப்பு அஸ்திரமாக பயன்படுத்தப் பட்டுமுள்ளது.

''இந்தியா சுதந்திரம் பெற்றபோது இந்தியாவின் பிரஜைகள் உலகில் எம்மூலையிலும் துன்புறுத்தப்பட்டாலும் நாம் கைகட்டி பார்த்திருக்கமாட்டோம், எனவும் இந்திய வம்சாவளி குடிமக்கள் வாழும் நாடுகளில் தம் இருப்பை உறுதிசெய்யவேண்டும் இந்தியா பலம் பெற்றபின்னர் அவர்களை காப்பற்றும் '' என்வும் இந்தியாவின் முதல் பிரதமரான ஜவகர்லால் நேரு குறிப்பிட்டிருந்தார். ஆனால் பர்மாவில் பத்துலட்சம் தமிழர் நரவேட்டையாடப்பட்ட போதும், இலங்கையின் நாடற்றவராக்கப்பட்டபோதும், பிஜீத்தீவுகளில் நிராதரவாக்கப்பட்டபோதும், ஆபிரிக்கமுகாம்களில் அவமானப்படுத்தப்பட்ட போதும், இன்றைய வல்லமைபொருந்திய ''இந்திய ஆளும் நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ வர்க்கம்'' கைகட்டிப்பார்த்து இருந்ததனை காண்கிறோம்.

இவ்வாறான பின்னணியில் முன்வைக்கப்பட்ட நாடுகடத்தல் ஒப்பந்தங்கள் மலையக மக்களது இருப்பை சிதைத்தழித்ததோடு உறவுகளையும், நண்பர்களையும், ஒருதாய்மக்களையும் பிரித்தன. அதன் சோகச்சுமைகள், சமூகவழக்காடுகள் இன்றுவரை மீளமைக்க முடியாதனவாக உள்ளன.இலங்கை ஆட்சியாளர்களே ஒருபுறம் முதலாளித்துவ காலனியாதிக்க சக்திகளின் எடுபிடியாக செயற்படுவதோடு கிராமப்புற சிங்கள மக்களது காணி, வீடு, தொழில், பிரச்சினைகளுக்கு மலையக மக்கள் மூல காரணம் என காட்டுகின்ற போக்கு சுதந்திர இலங்கையின் அரசியல் சித்தாந்தமாகிப் போயுள்ளது. தற்போது நடைபெறும் யுத்தம் இதன் இன்னொரு சான்றாக காட்டப்படுகின்றது.

இந்நிலையில் மானிட விரோதமான மலையக தமிழ் தேச மக்கள் மீது திணிக்கப்பட்ட இலங்கை - இந்திய உடன்பாட்டின்படி (சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் 1964) இந்தியாவுக்கு திரும்பாத 84,000 கடவுச்சீட்டுப் பெற்றோரையும், அவர்தம் குடும்பங்களையும் (இவர்கள் கிட்டத்தட்ட ஐந்து லட்சம் பேர் என உத்தியோகபூர்வற்ற மதிப்பீடுகள் காட்டுகின்றன) நாடுகடத்துவதா? அல்லது அவர்களது இருப்பை அங்கீகரித்து நிபந்தனையற்ற குடியுரிமை வழங்குவதா என்ற பிரச்சினை எழுந்துள்ளது!'

இப்பிரச்சினையில் கடவுச்சீட்டு பெற்றோருக்கு மீண்டும் தமது விருப்பத்தை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டுமெனவும் இதுபற்றி இந்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்படவேண்டும் எனவும்'' இ.தொ.கா.கோருகின்றது.

இக்கட்டத்தில் நாடற்றவர் அல்லது இந்திய கடவுச்சீட்டு பெற்றோர் குறித்து பல்வேறுபட்ட நிலைப்பாடுகள் காணப்படுகின்றன.

முதலாவது மலையகத்தில் எழுச்சிபெறும் தேசிய இயக்கங்கள் ''மலையகம் தனியான தேசியம்'' எனவும் அங்கு வாழ் மலையக தமிழ் மக்களது தாயகம் மலையகமே எனவும், மலையக மக்களுக்கெதிரான சட்டங்களும் ஒப்பந்தங்களும் நீக்கப்படவேண்டுமெனவும் கோருகின்றனர். இதன் உச்சக்கட்ட வெளிப்பாடாகத்தான் மலையக மக்கள் முன்னணி கடவுச்சீட்டுகளை எரிக்குமாறு (1989-1990) கோரியமையேயாகும். இன்று இம்முன்னணியும் இதனைத்தீர்மானிக்க மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டுமெனக் கோருகின்றது.

இரண்டாவது தொழிற்சங்க, தொண்டர் ஸ்தாபன, மனிதாபிமான சக்திகள் இந்தியகடவுச்சீட்டு பெற்றோரில் இந்தியா திரும்ப விரும்புவோரை அனுப்பவேண்டுமெனவும், மற்றோருக்கு குடியுரிமை வழங்கப்படவேண்டுமெனவும் கோருகின்றனர்.

மூன்றாவதாக சிங்கள - பௌத்த பேரினவாத கருத்தியல்கொண்ட சக்திகள் மலையக தமிழ் மக்களை தொழில் தேடி வந்தவர்கள் என்றும் அவர்கள் திரும்பிச்செல்லவேண்டுமெனவும் கோருகின்றனர்.

இந்நிலைப்பாடுகளில் முதலாவது நிலைப்பாடு மலையக தேசிய உருவாக்கத்தையும் அதற்கான சமூகஇருப்பையும், உயிர்வாழ்வையும், வாழ்வாதார பிரதேசங்களைப் பாதுகாப்பதையும் அடிப்படையாகக் கொண்டதாகும்.

இரண்டாவது நிலைப்பாடு மதில்மேல் பூனைகள் போன்ற இரண்டும் கெட்ட நிலைப்பாடு.

மூன்றாவது சிங்கள மயப்படுத்தலையும், பேரினவாதச் சித்தாந்தத்தையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது.

எவ்வாறெனினும் மலையக மக்களில் மிகப் பெரும்பாலானோர், குடியுரிமை, வாக்குரிமை, காணி நில உரித்துடமை, வீட்டுரிமை, மனித உரிமை எதுவும் அற்ற நிலையில் மலையகத்தில் வாழ்வதையே விரும்புகிறார்கள் என்பதையே நிகழ்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. இவ்விடயம் அரசியல் சட்ட ரீதியாக என்றென்றைக்கும் தீர்க்கப்படவேண்டியது சரியானதேயாகும்.

எனினும் காலாவதியான ஒப்பந்தகாலத்தை நீடித்து, காலாவதியாகிப்போன ஒப்பந்தத்தின்படி கடவுச்சீட்டு பெற்றோரை ''நாடுகடத்த'' அரசாங்கம் முயல்கின்றதா? தோட்டத்துறையில் நிலவும் பாரதூரமான சமூக, பொருளாதார, அரசியல், நெருக்கடியை தீர்க்க அரசாங்கம் நாடுகடத்தலை ஆயுதமாகப் பயன்படுத்த முயல்கின்றதா?

நாட்டின் பரந்துபட்ட மக்களது தேவைகளையும், கோரிக்கைகளையும் நிறைவேற்ற முடியாத அரசாங்கம் தன் இயலாமையை மறைக்க இவ் அஸ்திரத்தை எடுக்கின்றதா? கிராமிய சிங்கள மக்களுக்கு தோட்டக்காணிகளைப் பகிர்ந்தளிக்கவும், தோட்டத்துறையை வினைதிறன் மிக்க இலாப மீட்டும் முயற்சியாகப் பயன்படுத்த முயல்கின்றதா? புதிய தேசியமாக எழுச்சியுறும் மலையக தேசியத்தை அழித்தொழிக்க கடவுச்சீட்டு பெற்றோர் விவகாரத்தை பயன்படுத்த முயல்கின்றதா?

கண்மூடித் தனமாக பொய்கூறி, தோட்டத்துறையை தனியார் மயப்படுத்த ஆதரவளித்த தொழிற்சங்க சக்திகள், தற்போது எழுந்துள்ள வேலையின்மை வாழ்க்கைச் செலவு, குடியிருப்பு பிரச்சினைகளை மூடிமறைக்க இவ் ஒப்பந்தத்தை மீண்டும் அமுலாக்க முயல்கின்றன.

மலையக மக்களது அரசியல் பலத்தையும் தேசிய அரசியலில் தாக்கத்தையும் (40 தேர்தல் தொகுதிகளில் தீர்மானசக்தி) மீண்டும் நிர்மூலமாக்க எத்தனிக்கப்படுகிறதா? என்ற கேள்விகளை எழுப்பாமல் இருக்க முடியவில்லை.

இந்நிலையில் கடவுச்சீட்டு பெற்றிருப்போரின் கருத்துக்கள் கூறப்பட்டால், தற்போதைய தோட்டத்துறை நெருக்கடிகளுக்கு மத்தியில் (ஏற்கெனவே தொழிலாளர் உள்ளக குடிப்பெயர்வு, புலம் பெயர்வு, ஆரம்பமாகி விட்டது) கடவுச்சீட்டுப் பெற்றவர்கள் இந்தியாவுக்குச் செல்ல விரும்பக்கூடும். அதே வேளை இன்னொருபுறம் வேலைநாள் குறைப்பு, சம்பள உயர்வு குறைப்பு, வேலை வாய்ப்பு மறுப்பு, சமூகநலன்வெட்டு என்ற ஆயுதங்கள் மூலம் தொழிலாளர்களை ஒடுக்கிவரும் கம்பனிகள், ஆகக்கூடிய செயற்கையான வறுமை, வேலையின்மை என்பனவற்றை ஏற்படுத்தி வெளியேற்ற முற்படக்கூடும். (ஏற்கெனவே 3 லட்சம் தொழிலாளர் அதிகம் இருப்பதாக புலம்பப்படுகிறது.) இவ்வாறான நெருக்கடி நிலையில் மலையக தமிழ் தேசிய மக்கள் இன்னொரு தடவை அலைக்கழிக்கப்பட்டு, சிதைக்கப்பட்டால் மலையகத்தில் தமிழினத்தின் இருப்பு என்பது என்றென்றைக்குமே நிர்மூலமாக்கப்படலாம்.

எனவே 'கடவுச்சீட்டுப் பெற்றோர் மலையகத்தின் குடிமக்கள். அவர்களை நாடுகடத்தும் எந்தவிதமான எத்தனத்தையும் தடுத்து நிறுத்தி நிபந்தனையற்ற குடியுரிமை கோருவதன் மூலம் மலையக தேசியத்தை, இருப்பை உறுதிப்படுத்த வேண்டியது மனித குலத்திற்கு ஆற்றும் மிகப்பெரிய பணியாக இருக்கும்.

மலையக மக்களில் ஒரு பகுதியினர் குறுகிய நலன்கள், அறியாமை காரணமாக கடவுச்சீட்டு பெறுவோரை நாடுகடத்தும் முடிவு நல்லதெனக் கருதக்கூடும். இதனால் கிடைக்கப் போவது சில ஆயிரம் லயன்காம்பராக்களும் வேலைவாய்ப்புக்களும் மட்டும் தான். மறுபக்கம் மலையக மக்களது முதுகெலும்பு முறிக்கப்படும் என்பதனை சுட்டிக்காட்ட வேண்டிய பொறுப்பு சகல முற்போக்கு சக்திகளுக்கும் இருக்கின்றது.

மலையக அரசியல், தொழிற்சங்க தலைவர்களே, தொண்டர் ஸ்தாபனங்களே, புத்திஜீவிகளே, மாணவர்களே உங்கள் நிலைப்பாடு என்ன?

பீனிக்ஸ்

## வெற்றுப் பேச்சு

முதலாளிமார் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் இ.எவ்.ஜீ. அமரசிங்க வெளியிட்டுள்ள பத்திரிகைச் செய்தியில் (வீரகேசரி- 31.01.96) தோட்ட நிர்வாகங்களை பொறுப்பு ஏற்றுள்ள தனியார் கம்பனிகள் இ.தொ.கா. உடனான முதல் சுற்றுப் பேச்சுவார்த்தையின் போது வருடத்தில் 300நாள் வேலை வழங்க இணங்கவில்லையென்றும், 300 நாள் வேலை விவகாரம் இன்னும் பேச்சுவார்த்தையில் உள்ளதெனவும் உறுதியாக தெரிவித்துள்ளார்.

மலையகம் வாழ் தோட்டத் தொழிலாளர்களின் ஏகோபித்த பெரும் தலைவர், ஆட்சிபீடம் ஏறியிருக்கும் முக்கிய அமைச்சர் எஸ். தொண்டமான் அவர்கள் மாத்தளையில் இடம் பெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் தோட்டங்களை பொறுப்பேற்றுள்ள தனியார் கம்பனிகள் வருடத்தில் 300நாள் வேலை வழங்குவதற்கு ஒத்துக்கொண்டுள்ளது எனக் கூறியுள்ளார்.

ஆனால் இவர் கம்பனிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையில் எந்தச் சந்தர்ப்பத்திலும் வருடத்தில் 300நாள் வேலை வழங்க கம்பனிகள் இணங்கவில்லை என்று முதலாளிமார் சம்மேளனத்தின் பொதுச்செயலாளர் பின்னர் அறிக்கை விடுத்திருக்கிறார். இவ்வாறு வெளிவருகின்ற செய்திகளைப் பார்க்கின்ற பொழுது தலைவர்தொண்டமானின் கூற்று உண்மையானதா? அல்லது முதலாளிமார் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் கூற்று உண்மையானதா என்று விளங்கவில்லை.

இதற்கு விடைகாணவே மலையக மக்கள் அல்லல் படுகின்றனர். ஒரு பொறுப்பு வாய்ந்த தலைவருக்கும், முதலாளிமார் சம்மேளனத்தின் பொதுச்செயலாளருக்கும் இடையேயான இந்த முரண்பாடான செய்திக்கு யார் பொறுப்பு?

கடந்த பலவருடமாக இப்படியான முரண்பாடான கருத்துக்களையும், செய்திகளையும், முன் வைத்ததன் காரணமாகவும் எமது மலையக மக்களினது பிரச்சினைகளை வென்றெடுப்பதற்கு இன்றும் கூட இழுபறி நிலைமை ஏற்படுகிறது.

அத்தோடு எதிரணி தொழிற்சங்கங்களின் ஒத்துழைப்பையும் வேண்ட முடியாதவராக திகழுகிறார் தலைவர். இனிமேலாவது காலம் காலமாக எம்மக்களுக்கு வாரிவழங்கி வந்த பொய்வாகுறுதிகளை தவிர்த்து எமது மலையக மக்களின் எதிர்காலம் சுபீட்சமாக அமைய உழைப்பாரா?

## ஓர வஞ்சனை


தோட்டத்துறை வீடமைப்பு திட்டமென்ற பெயரில் உரித்துடமையில்லாத காணியில் கட்டப்படும் நவீன கொட்டில்கள் மலையக மக்களது லயத்து வாழ்வை முடித்து வைப்பதற்கு பதிலாக இன்னொரு அடிமைச் சேற்றில் அமிழ்த்தி வருவதாய் இருக்கிறது. லங்கா சமசமாஜ கட்சியின் அத்தாவுட செனவிரட்ன தோட்டத்துறை பிரதியமைச்சர் என்ற கௌரவ முகவராக அரசாங்கத்தின் தூர நோக்கற்ற திட்டமிடப் படாத ஒரு கேடுகெட்ட திட்டத்தைச் செயற்படுத்தி வருகின்றார். மாத்தளை மாவட்டத்தில் இவரால் திறந்து வைக்கப்பட்ட வீடுகள் விழா முடியுமுன்பே இடிந்து விழுந்து போயின. இவ்வீடமைப்புக்கான 20,000 ரூபா கடனுக்கு 58,000 ரூபா அறவிடுவதும் தோட்டத் தொழிலாளரின் திரட்டிய சேமிப்பான ஊழியர் சேமலாப நிதியை ஏப்பம் விடுவதுமாக இத்திட்டம் இருக்கிறது.

மாத்தளை மாவட்டத்தில் 60 ஆண்டுகளாக மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கும், அரசபெருந்தோட்டக்கூட்டுதாபனத்திற்கும் சொந்தமான காணியில் விவசாயம் செய்து வந்த சிங்கள கிராமவாசிகளுக்கு காணி உறுதி வழங்க நடவடிக்கை எடுத்துவரும் அத்தாவுட செனவிரட்ன அவர்கள் இருநூறாண்டுகளாக இந்நாட்டின் பொருளாதார உயிர் நாடியாக விளங்கும் மக்கள் கூட்டமான மலையக தமிழ் மக்களுக்கு காணியுறுதியோ, வீட்டுறுதியோ கொடுப்பதுப்பற்றிப் பேசவில்லையே ஏன்?

இது தானோ இந்தப் போலி இடதுசாரிகளின் இனசமத்துவக் கொள்கை?

www.tamilarangam.net





# 'தீர்வுப் பொதியில் குறை காண்பது நியாயம் இல்லை'

– ஜி.எல்.பீரிஸ்

தொகுப்பு: மூவர்

''நாம் இப்போது செய்யவிருக்கும் விடயம் மிகவும் கடினமானதும் முக்கியமானதுமான ஒன்று ஆகும். இந்த நாட்டின் நலனைப் பொறுத்தளவில் மிகவும் அவசியமான ஒன்றாக, இந்த சமாதான தீர்வு முயற்சியை எத்தகைய தடையுமின்றி முன் கொண்டு செல்வதுடன் இது வெற்றி பெறுவதற்கான நிலைமைகளை நாம் உறுதி செய்தாகவும் வேண்டும்''

இவ்வாறு கூறுகின்றார் நீதி அமைச்சர் லலித் பீரிஸ் அவர்கள். தமிழ் பத்திரிகையாளர்களுடனான ஒழுங்கு செய்யப்பட்ட சந்திப்பொன்றின்போது தமிழர் விடுதலைக்கூட்டணி தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் நீலன் திருச்செல்வம், நீதியமைச்சர் லலித் பீரிஸ் ஆகியோர்கள் கலந்து கொண்டு இப்போது வெளியிடப்பட்ட தீர்வுக்கான சட்டஆவணம் குறித்து கருத்து வெளியிட்ட போதே அமைச்சர் அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தமது பேச்சின் போது மேலும் தெரிவித்ததாவது:

''தமிழ்க்கட்சிகள், மேலும், மேலும் சிக்கலான கோரிக்கைகளை முன்வைப்பீர்களாயின் அவை, இங்குள்ள சிங்கள தீவிரவாதிகள், தீர்வு முயற்சிகளை எதிர்க்கும் ஒரு நிலையை ஏற்படுத்திவிடும். இதனால்தான் தேசியக்கொடி, பௌத்தமதம் என்பன குறித்த பிரச்சினைகள் எழுப்பட்டமை மிகவும் கவலைக்குரிய விடயமாகும் என்கிறோம். இவையெல்லாம் பிரச்சினைகளா என்ன? தேசியக்கொடி கடந்த 50 ஆண்டுகளாக இருந்து வரும் ஒன்று. இதையிட்டு இதுவரைகாலமும் எந்தப் பிரச்சினைகளும் எழவில்லையே? 1978இலிருந்து பௌத்த மதத்திற்கு விசேட அந்தஸ்து வழங்கப்பட்டு வருகிறது. அதேவேளை மற்றைய மதங்களுக்கும் உரிய கவனிப்பு இருக்கின்றது. இவற்றில் எந்த நடைமுறைசார்ந்த அநீதியான போக்குகளும் இருந்ததில்லை. எனவே இது தொடர்பான பிரச்சினைகளை ஆரம்பத்திலேயே கிளப்புவது நியாயமானதல்ல. இது உணர்வுகளுடன் சம்பந்தப்பட்ட ஒன்றாகும்.

இரண்டாவதாக, நான் குறிப்பிட விரும்புவது என்னவென்றால், தமிழ் கட்சிகள் அதிகாரப் பரவலாக்கல் அலகுகள் குறித்து உடனடியாகப் பேசவேண்டுமென வலியுறுத்துவதை தவிர்க்க வேண்டும. அது நிச்சயமாகப் பேசப்படவேண்டிய ஒன்றுதான். அதை எடுத்துப் பேசாமல் இந்தப்பிரச்சினைக்கு நிச்சயமான ஒரு தீர்வைக் காணமுடியாது. ஆனால் அதற்கு ஒரு ஒழுங்கு முறை இருக்கிறது. முதலில் நாம் மத்திய அரசாங்கத்திற்கும் இடையிலான வேலைகளையும் கடமைகளையும் பகிர்ந்து கொள்வதில் உடன்பாடு காணவேண்டும். அல்லாவிடில் நான்கு அலகுகளை கொண்டிருந்தாலென்ன 15 அலகுகளைக் கொண்டிருந்தால் என்ன எம்மால் எதையும் செய்யமுடியாது. அத்துடன், எந்தவொரு சமரசப் பேச்சுவார்த்தையின் போதும் ஒருபோதும் மிகவும் சிக்கலான விடயத்தில் ஆரம்பிக்கக் கூடாது. இது எல்லா முயற்சிகளையும் ஆரம்பத்திலேயே சிதறிப்போகச்செய்துவிடக்கூடும். இவை தொடர்பான விடயங்களை, தீர்வுதொடர்பாக ஒரளவாவது நம்பிக்கையாவது உருவாக்கப்பட்டுவிட்டால் நாம் ஆரம்பிக்கலாம்.

இந்த இரு விடயங்களும் மிகவும் முக்கியமானவையாகும்.

மூன்றாவது ஐ.தே.கட்சியுடன் பேசுவது, தமிழ்க்கட்சிகளின் முக்கிய கடமையாகும். ஏனென்றால் ஐ.தே.கவின் ஆதரவு இல்லாமல் நாம் மேலும் முன்னேற முடியாது. ஐ.தே.கவில் சில பிரிவினர் நாட்டின் ஒற்றையாட்சி முறையைப்பற்றி கேள்வி எழுப்புகின்றனர். அவர்கள் அதிகாரப் பரவலாக்கத்தை ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால், அதை நிலவும் அமைப்புக்குள்ளேயே செய்யவிரும்புகிறார்கள். அது ஒரு நடைமுறை விவகாரம் அல்ல. ஆனால் அது ஒரு கருத்தியல் விவகாரமாகும். உதாரணமாக 2வது சரத்து அப்படியே இருக்குமானால், நாம் ஒரு போதும் அதிகாரப் பரவலாக்கலை செய்ய முடியாது. இதை நாம் எமது பிரேரணைகளின் போது மாற்றியுள்ளோம். இது தமிழ்க்கட்சிகளுக்கும், ஐ.தே.கவுக்கும் இடையிலான கலந்துரையாடலின் போது பேச வேண்டிய ஒரு விடயமாகும். எனவே தமிழ்க் கட்சிகட்கு இந்த விடயத்தில் ஒரு முக்கியமான பங்கு இருக்கிறது என்று கூறுகிறேன்.

நான்காவதாக, தமிழ்க்கட்சிகள் ஒகஸ்ட் மாதத்தில் நாம் முன்வைத்த தீர்வுயோசனைகளில் எந்த அடிப்படை மாற்றங்களையும் நாம் ஏற்படுத்தவில்லை என்பதை ஏற்றுக் கொள்ளவேண்டும். அதில் செய்யப்பட்ட மாற்றங்கள் 'பிரிக்கப்பட முடியாத பிராந்தியங்களில் கூட்டமைப்பு' பிராந்தியங்களைக் கலைப்பதற்கான அதிகாரம் என்பவை மிகவும் மோசமான நிலைமைகளில் பயன்படுத்தப்படவுள்ள விடயங்களாகும். ஆயுத கிளர்ச்சி போன்ற விடயங்களின்போது, அல்லது ஒரு பிராந்தியம் தனியாக பிரிந்து போக முயலும் போது அல்லது இது போன்ற நிலைமைகளில் மட்டும் பயன்படுத்தப்படவுள்ள அதிகாரங்கள் இவை. உண்மையில் இவ்வாறான நிலைமைகளில் அதிகாரம் அவசியம் தான். எனவே எந்தவொரு சட்டபூர்வ தமிழ் அரசியற்கட்சியும், பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகராரத்தை பிரிந்து செல்லும் நோக்கத்திற்கு பயன்படுத்த முடியாது. எனவேதான் பிரிவினையை நோக்கமாகக்கொண்ட எந்தவொரு இயக்கங்களும் ஆரம்பிக்கப்பட முடியாது என்ற மாதிரியான சில விடயங்களை நாம் சேர்த்துள்ளோம். பிராந்திய எல்லைகள் வகுக்கப்பட்ட பின் அவற்றை மாற்றும் அதிகாரம் எந்தப் பிராந்திய சபைக்கும் கிடையாது. அத்துடன் ஆயுதக்கிளர்ச்சியோ அதுபோன்ற விடயங்களோ வரும் போது பிராந்தியத்தில் தலையிடும் அதிகாரம் மத்திய அரசுக்கு உள்ளது. அதாவது எல்லைகள் என்பது , ஒரு நாட்டுக்குள்ளேயே பிராந்தியங்களுக்கு போதுமானளவுக்கு எல்லைகளை பகுத்துக்கொடுக்கப்படும். ஆனால் இவற்றிலிருந்து உடைத்துச் செல்லும் பிரிவுகள் தோன்றக்கூடிய நிலைமைகளில்தான் கலைப்பு அதிகாரம் நடைமுறைப்படுத்தப்படும். எனவே இவ்விடயத்தில் எந்தவிதமான சட்டபூர்வமான குறைகாண்பது நியாயமில்லை.

நாம் கடந்த 18 மாதங்களாக செய்துவந்த விடயங்கள் காரணமாகவும் எமது முயற்சிகள் காரணமாகவும் தமிழ் மக்கள் எமக்கு ஆதரவு தரவேண்டும் என்று நாம் கோருகிறோம்.

இது ஒரு நடைமுறை விவகாரம் என்பதால் இதற்கு எமக்குப் பெரும்பான்மை மக்களது ஆதரவும் தேவை. முதலாவதாக பாராளுமன்றத்தில் 2/3பங்கு பெரும்பான்மை அவசியம். அத்துடன் எமக்கு பிரதான எதிர்க்கட்சியின் ஆதரவும் தேவை. அடுத்ததாக எமக்கு கருத்துக்கணிப்பின் போது மக்களது ஆதரவும் தேவை.

எனவே இவற்றைக் கணக்கிலெடுத்து, சிறுபான்மை மக்களது நம்பிக்கையைச் சிதைக்கா வண்ணம் எமது முயற்றசிகளை செய்துள்ளோம்.

எனவே சிறுபான்மை மக்கள் எம்மை புரிந்து கொண்டு இதை ஆதரிக்கவேண்டும் என்று கோருகிறோம். சிலவேளை இதுவே ஒரு சமரசப் பேச்சுவார்த்தைக்கான கடைசிச் சந்தர்ப்பமாகவும் இருக்கக்கூடும்.

ஒரு வேளை இது தோல்வியடைந்தால் இன்னொரு தசாப்தத்திற்கு இவ்வாறான ஒரு முயற்சி வெற்றிகரமாக வருமோ என்பது கூட சந்தேகமே. எனவே சிறுபான்மை மக்களிடமிருந்து எமக்கு ஆதரவு அவசியமாக உள்ளது.

இதேவேளை, சிங்களப் பேரினவாதிகளிடமிருந்து ஏற்பட்ட நெருக்குவாரம் காரணமாக எமது தீர்வு யோசனைகளில் மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளதா என்று சிலர் கேட்கிறார்கள். ஆனால் அப்படி எதுவும் இல்லை. உண்மையில் பலத்த நெருக்கடிகள் இருந்தது உண்மைதான். ஆனால் நாம் உண்மையான பிரச்சினைகளில் எத்தகைய விட்டுக்கொடுப்பும் செய்ய முன்வரவில்லை. முன்னைய ஒகஸ்ட் மாத பிரதியில் எது இருந்ததோ அதுவே இப்போதும் இருக்கிறது. எத்தகைய மாற்றமும் இல்லை. முன்னையதிலிருந்து எந்தவிதத்திலும் நாம் பின்வாங்கவும் இல்லை.எனவே உண்மையில் ஒரு அரசியல் அர்ப்பணிப்புடன் நாம் இதைச் செய்துள்ளோம். உண்மையில் இது தொடர்பாக நாம் உறுதியாக உள்ளோம். புலிகளும், சிங்கள தீவிரவாதிகளும் மட்டுமே இதை எதிர்க்கிறார்கள்.

இவ்வாறு குறிப்பிட்ட அமைச்சர் அவர்கள் சிக்கலான மேலதிக கோரிக்கைகளை முதலிலேயே முன்வைப்பதை தமிழ்க் கட்சிகள் தவிர்ப்பதும், எதிர்க்கட்சியுடன் பேசுவதும் இந்த முயற்சியின் வெற்றிக்கு அவசியமான ஒன்றாகும் என்று திரும்பவும் வலியுறுத்தினார். ●

# மத்திய வங்கி தாக்குதல் : உணர்த்தும் உண்மைகள்

சஞ்சீ





மத்திய வங்கி தலைமை அலுவலகம் மீதான குண்டுத்தாக்குதல் இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஒரு முக்கியமான நிகழ்வாகும் என்று அறிவித்திருக்கிறது புலிகளின் அறிக்கை ஒன்று. இலங்கையின் பொருளாதார நிலைகள் மீதான தாக்குதல்கள் என்ற அடிப்படையில் நடந்த இரண்டாவது முக்கிய தாக்குதல் இதுவாகும். கடந்த ஒக்டோபர் மாதம் நடைபெற்ற கொலன்னாவை எண்ணெய்த் தாங்கிகள் மீதான தாக்குதலுக்கு பிறகு நடந்த இரண்டாவது முக்கியமான தாக்குதலாக இதைக் கொள்ளலாம். இத்தாக்குதலின் போது அரசாங்க கணிப்புகளின்படி 78 பேர் உயிரிழந்துள்ளதாகவும் ஐந்நூறுக்கும் மேற்பட்டோர் கடும் காயங்களுக் குள்ளாகியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. வங்கியின் கட்டிடத்தொகுதி முற்றாக சேதமடைந்துள்ளதாயும், அதன் இடிபாடு கட்கிடையில் சடலங்களை தேடும் முயற்சி முழுக்கட்டிடத் தொகுதியையுமே வீழ்த்திவிடுமோ என்பதால் அது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பெருமளவு சனநெரிசலும் அதிகளவிலான அலுவலகங்களைக் கொண்டதும், ஜனாதிபதியின் இல்லம், பழைய பாராளுமன்றம் போன்ற கேந்திர நிலையங்கள் இருப்பதுமான ஜனாதிபதி மாவத்தையில் நடந்த இந்தத் தாக்குதல், நிச்சயமாக பலர் மத்தியிலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை..

வழமைபோல 'பல முக்கிய தகவல்கள் கிடைத்துள்ளன','தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட லொறி வவுனியாவிலிருந்து வந்துள்ளது','இரு தாக்குதல் சந்தேக நபர்கள் கைது','மேலும் பலர் பொலிசார் வலையில்' என்று செய்திகள் வந்து குவிந்துள்ளன. பொலிசாரின் தீவிர விசாரணைகளும் பலமாக நடந்து வருகிறது. ஆயினும் ஒவ்வொரு சம்பவங்களின் பின்னும், இத்தகைய செய்திகள் வெளிவருவதும், பின் அவைக்கு என்ன நடந்தது என்பதே தெரியாமல் போய் விடுவதும் வழமையானபடியால், இந்தச் செய்திகள் குறித்து அவ்வளவாகப் பரபரப்பு நிலவுவதாகத் தெரியவில்லை.

வங்கிக்கு, சம்பவம் நடந்த அன்று (31-01-1996) வேலைக்கு சமூகமளிக்காதோர் முதல், குண்டுவெடிப்பு அதிர்ச்சியில் கையிலிருந்த பொருட்களைப் போட்டுவிட்டு ஓடியவர்களின் (விசேடமாக அடையாள அட்டையைத் தொலைத்தவர்கள்) என்று பெரும்பாலானோர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகிறார்கள். பொலிசாரின் விசாரணைகள் மூலம் சம்பந்தப்பட்ட நபர்கள், இனியும் இவ்வாறான வேலைகளுக்கு திட்டமிடப்பட்டு புலிகளால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளோர் போன்றோரை கைது செய்துவிடலாம் என்ற எதிர்பார்ப்பு இருந்த போதும், இவையெல்லாம் நம்பிக்கை தருபனவாக இல்லை என்கிறார் காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் தனியார் துறைஊழியர் ஒருவர். அவர் தனக்கு ஏற்பட்ட திகில் நிறைந்த அனுபவம் பற்றி சொல்கையில், ''முதலில் வெடித்த இரு சிறுகுண்டுகளும், துப்பாக்கி ஓசையும், அந்த வீதியில் நின்றபல பேரை ஏற்கெனவே அப்புறப்படுத்தி விட்டிருந்தது. குண்டு எறிந்து துப்பாக்கியால் சுட்டவர்கள் ஓடியபின்னர்தான் லொறிவந்து சேர்ந்ததாக நான் கேள்விப்பட்டேன். லொறிக்குண்டு வெடித்த சில கணங்களில் இருபுறமும் தீ பற்றிக்கொண்டுவிட்டதாக எல்லோரும் ஓலமிட்டபோதுதான் என்ன நடக்கிறது என்பதை கிரகித்துக்கொள்ள முடிந்தது. அவ்வளவு வேகம். என்னைப் பொறுத்தளவில் அவ்விடத்திற்கு பொலிஸ் அதிகாரிகள் வர கிட்டத்தட்ட அரைமணிநேரமாவது ஆகியிருக்கும். அதற்கிடையில் முதலில் குண்டு எறிந்தவர்கள் நிச்சயமாக தப்பிஓடிவிட வாய்ப்பு இருந்தது.

''அவசரத்தில் எனது மோட்டார் சைக்கிளுக்கு என்ன நடந்தது என்பது கூட எனக்குத் தெரியவில்லை. காயத்துடன் நான் ஓடி வந்து இன்னொரு காயமுற்றவருடன் சேர்ந்து ஒரு ஓட்டோவில் ஆஸ்பத்திரிக்கு போனபோது ஏற்கெனவே அங்கு காயப்பட்ட பலரை கொண்டு வந்திருந்தார்கள். எனது காயம் கண்ணாடி வெட்டிய சிறிய காயம்தான் என்பதை மருந்திட்டவர் சொன்னபோதுதான் தெரிந்து கொண்டேன்....

''அவசரத்தில் அடையாள அட்டை தொலைத்த எமது நிறுவன ஊழியர் ஒருவர் (அவர் ஒரு தமிழர்) கைதுசெய்யப்பட்டு பிறகு கொம்பனித்தெரு பொலிஸில் ஒப்படைக்கப்பட்டதாக கேள்விப்பட்டேன். அவ்வாறு அட்டைகளை தொலைத்தவர்கள் தமிழர்களாக இருக்கும் பட்சத்தில் பெரிய சிக்கல்களை எதிர்கொள்வார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால் என்ன செய்வது?

''பாதுகாப்புப் பற்றி சொல்வதானால், நான் எனது அலுவலகத்திலிருந்து இறங்கி ஓடி வந்து ஆஸ்பத்திரிக்கு வரும்வரை (நான் சிங்கள இனத்தைச் சேர்ந்தவன் என்றாலும் கூட) என்னை யாருமே சோதிக்கவில்லை என்பது இப்போது நினைக்கும் போது ஆச்சரியமாக இருக்கிறது!''

சம்பவம் நடந்த இடத்தில் நின்று காயம்பட்டவர்களுக்கு உதவிய இன்னொருவரை நாம்

→15

www.tamilarangam.net

# தீர்வுப்பெ

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அரசியல் தீர்வுத்திட்டத்தின் சட்டநகலை ஸ்ரீலங்கா அரசு முன்வைத்துள்ளது. இப்பொதி பாராளுமன்றத் தெரிவுக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படுமென்றும் அது தெரிவித்துள்ளது.

பேரினவாதத்துக்குப் பயந்து ஒழிந்து, தயங்கியபடியே சென்ற வருட ஓகஸ்ட்டில் அரசாங்கம் தனது தீர்வுத்திட்டத்தை முன்வைத்தது. அத்தீர்வுத் திட்டத்தை வெளியிடுவதற்கு முன்னரே உத்தியோகப் பற்றற்ற முறையில் வேறு வழிகளினூடாக கசிய விட்டு பரீட்சித்துப் பார்த்ததன் பின்னரே மொத்தமாக சிலதிருத்தங்களுடன் இதை வெளியிட்டது. இன்றோ, ஓகஸ்ட் தீர்வுத்திட்டத்தையும் மேலும் பல திருத்தங்களுடன் முன்வைத்துள்ளது.

சரி, ஓகஸ்ட் தீர்வுத்திட்டம் உண்மையில் திருத்தப்படத்தான் வேண்டுமென்பதில் தமிழ் மக்களும் உடன்பட்டிருந்தார்கள். ஆனால் திருத்தவேண்டியவை என்னென்ன என்பது, தமிழர் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. சிங்களப் பேரினவாதம் வேண்டி நின்ற திருத்தங்களை அது சுட்டிக்காட்டியிருந்தது.

'95'ஓகஸ்ட் தீர்வுப்பொதி முன்வைக்கப்பட்டதிலிருந்து · தென்னிலங்கை சிங்கள பௌத்த பேரினவாத தரப்பில் 'தீர்வுப் பொதி நாட்டைப் பிளக்கப்போகும் தீர்வே இது என நாடு முழுவதும் பிரச்சாரம் செய்யப்பட்டிருந்தது. அதேபோல் பௌத்த மகா சங்கத்தினர், பிக்குகள் அமைப்புகள் போன்ற நிறுவனங்களும் தீர்வுப் பொதிக்கெதிரான தீவிர பிரச்சாரத்தையும் மேற்கொண்டதோடு மறுபக்கம் அரசாங்கத்துடனும் பேச்சுவார்த்தையை நடத்தியிருந்தனர். இம்முயற்சிகளுக்கு ஆதரவாக 'திவயின' போன்ற பத்திரிகைகளும் ஊக்கமளித்திருந்தன.

### தீர்வுப்பொதியா அரசியலமைப்பா?

இத்தீர்வுத்திட்டத்தில் முக்கியமாக அவதானிக்க வேண்டியவற்றுள் ஒன்று இனப்பிரச்சினைத் தீர்வுத்திட்டதையும், அரசியலமைப்பு சீர்திருத்தத்தையும் ஒன்றுசேர குழப்பியுள்ளமை. எந்தத் தீர்வுத்திட்டமாயிருந்தாலும் அரசியலமைப்பில் அது இடம் பெறுதல் வேண்டும் என்பது உண்மை. ஆனால் அது எடுகோளாக இருந்தால் மொத்த அரசியலமைப்பும் - தீர்வுத்திட்டத்துடன் - முன்வைக்கப்பட்டிருக்கவேண்டும். அப்படிச் செய்யாமல் அரசியலமைப்பில் சொல்லவேண்டிய விடயங்களை (குறிப்பாக 'இலங்கை குடியரசு' எனப் பெயர் மாற்றம் செய்வது, 'பௌத்த மதம்' தொடர்பான விடயங்கள்) இதிலும் கொண்டுவந்து திணித்ததைப் பார்க்கையில் சிங்கள பௌத்த பேரினவாதத்தை ஆசுவாசப்படுத்தவே இவை கொண்டுவந்து செருகப்பட்டது போல் தோன்றுகிறது. இன்னும் சொல்லப்போனால் 13வது திருத்தச்சட்டத்தின் போதோ அல்லது '95' ஓகஸ்ட் தீர்வுப் பொதி'யின் போதோ இவை சேர்க்கப்பட்டிருக்கவில்லை. இவையெல்லாவற்றையும் விட 'தீர்வுப் பொதியில்' சொல்லப்பட வேண்டிய முக்கியமானவை எதுவும் சொல்லப்படவில்லை. குறிப்பாக பிராந்தியங்களின் பெயர்கள், எல்லைகள் போன்றவை.

### பௌத்தம்- சோஷலிசம்

1970ஆம் ஆண்டு இடதுசாரிக்கட்சிகள் - ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கூட்டுமுன்னணி அரசாங்கம் 1972ஆம் ஆண்டு ஏற்படுத்திய அரசியலமைப்பிலேயே இலங்கையின் பெயர் 'இலங்கை சோஷலிச ஜனநாயக குடியரசு' என மாற்றப்பட்டது. இடதுசாரிகட்சிகளின் வற்புறுத்தல்களினாலும் அரசியலமைப்பை வரைந்தவரான (கொம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த) கொல்வின் ஆர் டி சில்வாவினது ஏற்பாட்டின் பேரிலுமேயே 'சோஷலிசம்' எனும் பதம் பிரயோகிக்கப்பட்டது.

1977ம் ஆண்டு பதவிக்கு வந்த ஐக்கிய தேசியக்கட்சி, தான் பின்பற்றப்போகும் திறந்த பொருளாதாரக் கொள்கைக்கு இந்த 'சோஷலிசம்' எனும் பதம் நெருக்கடியைத் தரலாம் என்ற நினைப்பில் 1978ம் ஆண்டு கொண்டு வந்த அரசியலமைப்பில் 'சோஷலிசம்' (எனும் பதம்) இடம் மாற்றம் செய்யப்பட்டது. அதன்பிரகாரம் 'இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு' என மாறியது.

இப்போது அதே இடதுசாரிக் கட்சிகளின் கூட்டமைப்பின் தலைமையில் கொண்டுவரப்போகும் அரசியலமைப்பின் 'சோஷலிசம்', 'ஜனநாயகம்' ஆகிய இரண்டு பதங்களும் தூக்கியெறிப்பட்டு விட்டன. (அது சரி! அவ்விரண்டும் இருந்தாலல்லவா அப்பதங்களும் இருப்பதற்கு)

சில மாதங்களுக்கு முன் அரசாங்கத்தின் அரசியலமைப்பு · சீர்திருத்தக்குழுவுக்கு ஸ்ரீலங்கா தேசப்பிரேமி பெரமுன (ஸ்ரீலங்கா தேசபிமான முன்னணி) எனும் அமைப்பு 'இலங்கை ஜனநாயக சோஷலிச பௌத்த குடியரசு' எனும் பெயரை முன்மொழிந்து குறிப்பிடத்தக்கது.

### பௌத்தம்

இலங்கையில் பௌத்தமதத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் ஏற்பாடு கூட 1972ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட அரசியலமைப்பிலேயே முதற்தடவையாக உட்படுத்தப்பட்டது. பல்வேறுமதங்களைச் சார்ந்த சமூகக் குழுமங்கள் வாழும் நாட்டில் தனியொரு மதத்திற்கு விஷேட செல்வாக்கு அளிப்பதன் மூலம் எதிர்காலத்தில் சமூகங்களிக்கிடையே முரண்பாடுகளை வளர்க்கும் என்ற கருத்து தமிழர் தரப்பில் முன்வைக்கப்பட்ட போதும் அவை அன்று கருத்திற் கொள்ளப்படவில்லை.

'பௌத்த மதத்திற்கு முதன்மையளித்தல், அதனை பேணிப்பாதுகாத்தல் அரசின் கடமை' எனும் ஏற்பாடு 1978ம் ஆண்டு அரசியலமைப்பிலும் தொடர்ச்சியாக சேர்க்கப்பட்டது.

இனப்பிரச்சினை இத்தனை தூரம் உக்கிரம் பெற்றதன் பின்னும் இனங்களுக்கிடையேயான புரிந்துணர்வு நம்பிக்கைத்தன்மை வீழ்ந்துள்ள இன்றைய நிலையிலும் கூட இனப்பிரச்சினை தீர்வுப் பொதியொன்றில் பௌத்த மதத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் அதேவழிமுறைகளே இன்றைய தீர்வுத் திட்டத்திலும் தொடர்கிறது.

இம்முறையோ இன்னும் ஒரு படிமேலே சென்று பௌத்த மதத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் ஏற்பாட்டை விட அந்நோக்கத்திற்கென 'பௌத்த மீயுயர் பேரவை' ஒன்றை ஏற்படுத்தியிருப்பதுடன் 'புத்த சாசனத்தைப் பாதுகாத்தலும் அதனை பேணிவளர்த்தலும் பற்றிய எல்லா கருமங்களையும் அரசானது மீயுயர் பேரவையைக் கலந்தாலோசித்தே செய்தல் வேண்டும்' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் சொல்லப்பட்ட இடம், காலம், சொல்லும் தரப்பு என்பவை கருத்திற் கொள்ளப்பட வேண்டியவை.

மேலும் வழமைபோல் 'ஏனைய மதங்களும் பாதுகாக்கப்படும் ' எனறும கூறபபடடுள ளது. இதில் ஒன்றைக் கவனிக்கவேண்டும். பௌத்த மதத்திற்கு ஏலவே உள்ள அந்தஸ்தை பேணுவதுடன் அதனை உயர்த்திய அதேநேரம் ஏனைய மதத்தவர்களது உரிமைகள் நடைமுறையில் பறித்தெடுக்கப்பட்டுமுள்ளன. பொ.து.ஜ.மு அரசாங்கம் பதவிக்கு வந்தவுடனேயே இந்து, கலாசார அமைச்சு ஆகிய பாதி அமைச்சுக்களைக் கூட (இவை அது வரை காலம் கலாசார அமைச்சின் கீழ் இராஜாங்க அமைச்சுக்களாக இருந்து வந்தது.) இல்லாது செய்துள்ளது. அவற்றை திணைக்களங்களாக மாற்றியுள்ளது. இதே வேளை புத்தசாசன அமைச்சு முழு அமைச்சு என்பதையும் அதன் அமைச்சர் கூட ஜனாதிபதி சந்திரிகாவே என்பதையும் கருத்திற் கொள்க.

### பொதியும் குறையும்

'95'ஓகஸ்ட் 3ல் தீர்வுப்பொதி முன்வைக்கப்பட்ட போது எதிர்ப்பார்க்கப்பட்டபடியே மேலும் வெட்டிக் கொத்தப்பட்ட தீர்வுத்திட்டம் இம்முறையும் முன்வைக்கப்பட்டுள்ளமை அறிந்ததே.

தீர்வுத்திட்டத்தில் கவனிக்கப்பட வேண்டியவற்றுள் இன்னுமொரு முக்கிய விடயம் இத்தீர்வுத்திட்டம் எவருக்காக முன்வைக்கப்பட்டுள்ளது எனும் கேள்வி. தமிழ் மக்களுக்கான அதிகாரப்பரவலாக்கல் பிரச்சினையையும் சிங்கள கிராமீய மக்களுக்கான பரவலாக்கல் பிரச்சினையும் ஒரு சேர நோக்கப்பட்டுள்ளது. அமுல்படுத்தப்பட்ட 13ம் திருத்தச்சட்டமும் இவ்வாறே முன்வைக்கப்பட்டிருந்தது. இன்று மாகாண சபை எந்த

| | 13வது திருத் |
|---|---|
| பிரதேச அலகின் பெயர் | மாகாண (Provincia |
| பௌத்தம் பற்றி | குறிப்பிட |
| வட - கிழக்கு இணைப்பு | வடக்கு கிழ வாக்கெடுப்பு தீர்மானிக்கப்படும் |
| ஆளுநர் நியமனம் | ஜனாதிபதியி |
| ஆளுநர் நீக்கம் | 1.சொந்த இராஜின 2.சபையின் முழு எ க்கு கு[illegible] தோரி நிறைவேற்றப்படல் |
| பிராந்திய அரசை கலைக்கும் அதிகாரம் | ஜனாதிபதியின் நியமிக்கப்படும் மாகாணசபையை |
| நாட்டின் பெயர் | தனியாக குறிப் |
| பிராந்திய எல்லைகள் அவற்றின் பெயர் | குறிப்பிட |



## ஈழக்கோரிக்கை வரலாற்று ரீதியானது!

**கலாநிதி சுனில் விஜயசிறிவர்த்தனா**

இலங்கையின் தேசிய அரசமைப்பு முறையானது தமிழ் மக்கள் அந்நியப்படுத்தப்பட்ட, ஜனநாயக - விரோதமான ஒன்றாக இருத்தல் இனப்பிரச்சினையின் கருவாகும். தங்களது உரிமைக்காக தமிழ் மக்கள் நடத்தும் போராட்டத்தில் வரலாற்று ரீதியான 3 அம்சங்களை நான் இனங்காண்கிறேன். ஆரம்பத்தில், நேரடியாகவே மத்திய அலகிலிருந்து இனங்களுக்கிடையே அதிகாரங்களை நியாயபூர்வமாக பரவலாக்கி நேர்மையாக அமுல்படுத்தலாம் என தமிழ் தலைவர்கள் நம்பினர். ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்களின் ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கையின் நோக்கமும் அதுவே. அது இலகுவாக தோல்வியடைய நேரிட்டதற்கான காரணம் அந்த யோசனையிலுள்ள அடிப்படையான முரண்பாடுகள் அல்ல. மாறாக அதில் அடங்கியிருந்த ஜனநாயக அடிப்படை அடக்கங்களை சிங்கள தலைவர்கள் ஏற்றுக்கொள்ளாததே என்பது தெரிகிறது. சமஷ்டி எனப்படும் சுயாட்சிக் கோரிக்கையானது, மேற்படி எதிர்பார்ப்பு வீழ்ந்ததைத் தொடர்ந்து நியாயபூர்வமாக எழுந்தது. அவ்வாறான ஒரு சட்டத்திற்குள் பேரம் பேசும் சக்தியை (Bargaining Power) இயலுமானவரை உறுதிசெய்வதாக தாங்கள் பெரும்பான்மையாக வசிக்கும் பிரதேசத்தை முடியுமானவரை ஒன்றிணைத்த அலகை நோக்கி சிந்திப்பது இயல்பானது. வடக்கு - கிழக்கு மாகாணங்களை இணைப்பதன் அவசியத்தை வலியுறுத்திய தமிழ் மக்களது இந்த இரண்டாவது வரலாற்று ரீதியான கோரிக்கையும் தோல்வியடையவே தமிழ் மக்கள் ஈழக்கோரிக்கையை முன்வைக்கிறார்கள்.

நாடு பிளவுபடுவதற்கு எதிராக ஐக்கிய தேசம் ஒன்றைக் கற்பனை செய்யும் விழிப்புணர்வு பெற்ற சிங்கள சக்திகள் எடுக்க வேண்டிய நிலைப்பாடு, தமிழர் போராட்டத்தின் முற்சொன்ன முதலாவது மற்றும் இரண்டாவது வரலாற்று ரீதியான கோரிக்கைகளுக்கு ஆதரவளிப்பதே.

அரசாங்கம் யோசனைகளை முன்வைத்தால் தமிழ் மக்களின் வரலாற்றுக் கோரிக்கைக்கு செவிசாய்த்துள்ளது எனக் கூறலாம். ஆனால் அவர்களின் அடிப்படைக் கோரிக்கைகளை அது நிராகரித்துள்ளது. அப்படிப் பார்க்கும் போது புதிய யோசனைகள் அபிவிருத்தியை மேலும் பின்னடையச் செய்துள்ளன. குறிப்பாகப் பிராந்திய அலகுகளின் சுயாதிபத்தியத்தியத்திற்கு குறிப்பிட்ட அதிகாரங்களைத் தடை செய்யக்கூடியளவிற்கு மத்திய அரசுக்கு அதிகாரங்கள் குவிக்கப்பட்டுள்ளதோ என்ற சந்தேகம் எழுகின்றது. அதேபோல் இத்தீர்வுப் பொதியிலும் சாத்தியமான அளவிற்கு நிறைவேற்றுவதற்கு தடையாக பல அம்சங்கள் உள்ளன. முதலில் யுத்தமும் சமாதானமும் பற்றிய பிரச்சினையும் அதில் அரசு தொடர்ந்து கடைபிடிக்கும் முரண்பாட்டுக்குரிய நடவடிக்கைகளும். இரண்டாவது, யோசனைகளை சமூகமயப்படுத்துதல் தொடர்பாக அரசாங்கம் நலிவுடனேயே செயற்படுவதுமாகும். அடுத்ததாக வடக்கு-கிழக்கு இணைத்தல் அல்லது பிரித்தல் தொடர்பாக அப்பிரதேசத்தை சேர்ந்த தமிழ் சிங்கள முஸ்லிம் சமூகங்களிடையே முரண்பாடான எண்ணங்களே தொக்கி நிற்கின்றன. இறுதியாக தென்னிலங்கை இனவாத சக்திகளின் செயற்பாடுகளுக்கு பாரியளவு இடம் ஏற்பட்டுள்ளது.

இதில் மூன்றாவது, நான்காவது தடைகளை வெற்றிகொள்ளச் செய்யக்கூடிய முற்போக்கான வழி தமிழர் போராட்டத்தில் ஆரம்ப கால வரலாற்று கோரிக்கைக்கு பிரச்சாரம் வழங்குவதே. அதாவது சமஷ்டி அலகொன்றை ஏற்கும் அதேநேரம் மத்திய அரசாங்கம் எனும் பிரதான பலம் பெற்ற நிறுவனத்தை இனங்கள் தொடர்பான் ஜனநாயக அமைப்பாக்கல். இப்போது கலந்துரையாடப்படும் யோசனையில் இந்த நோக்கம் ஈடு செய்யப்படவில்லை. பிராந்திய அலகில் பிரதிநிதித்துவம் வகித்துக்கொண்டே தமிழ் பிரதிநிதிகள் சபையொன்றை மத்திய நிறுனவத்திற்கு கொண்டு சென்றால் பிரிவினைவாதம் பற்றியுள்ள சிங்கள பீதியை தோற்கடிக்க முடியும். தமிழ் மக்கள் மத்தியில் பிரதிநிதித்துவம் வகிக்கும் அரசியலமைப்பின் முறை, இனத்துவத்திற்கூடாக வெளிவர இடமுண்டு. அதேபோல் சிங்கள முஸ்லிம் மக்கள் விரும்பும் பட்சத்தில் அவர்களது எண்ணங்களுக்கு செவிசாய்த்து வட -கிழக்கு மாகாணங்களை பிரிப்பதற்கு வாய்ப்பாக யோசனை முன்வைக்கமுடியும். தாம் பிரதிநிதித்துவம் வகிக்கும் பிராந்திய அலகுகள் இரண்டு இருக்கும் போது மத்திய அரசியல் நிறுவனத்திற்குள் தமது பிரதிநிதித்துவத்தை மேலும் விரிவாக்குவதற்கு தமிழ் மக்களுக்கு இயலும்.

தற்போதைய நடைமுறையில் உள்ள முரண்பாடுகளை வெற்றி கொள்வதற்காக தமிழ்க் குழுக்களையும் கட்சிகளையும், உறுதியான உடன்பாட்டுக்கும் குறிப்பிட்ட நோக்கத்திற்காக உள்ளடக்கவேண்டியது மிகவும் அவசியம். அதேபோல் அக்கூட்டு தமிழ் சக்திகளையம் சிங்கள ஜனநாயக சக்திகளையும் குறிப்பிட்ட அளவுக்காவது கூடிய விரைவில் வரச்செய்வதும் அவசியம்.

அமைச்சர் ஜீ.எல்.பீரிஸுடனான நேர்காணலொன்று. பகல் பதினொரு மணிக்கு.

மத்திய வங்கிக் குண்டு வெடிப்பின் இரண்டாம் நாள், தலைநகரின் இறுகிய பாதுகாப்பு.... பாதைகள் பல மூடப்பட்டிருந்தன. 15 நிமிட பயணத்தூரத்துக்கு, 90 நிமிடங்களைச் செலவழித்து அமைச்சரின் அலுவலகம் சென்றோம்.

பத்திரிகையாளர் அடையாள அட்டைகளை வாயில்காப்பாளர்களிடம் காட்டி அனுமதி பெற்று செயலகக் கட்டிடத்தின் வரவேற்புப்பீடம் சென்றோம்.

பாதுகாப்பு ஊழியர்களிடம் விடயத்தைக் கூறினோம். இரண்டாம் மாடியிலுள்ள அமைச்சரின் அலுவலகத்தோடு தொடர்பு கொண்டு அவர்களும் உறுதிப்படுத்தினர். மேலிருந்து வந்து அழைத்துச் செல்லும்வரை அமரச் செய்தனர். பின்னர் இருவர் எமது கமரா, ரெக்கோடர் உட்பட அனைத்தையும் மிக நுணுக்கமாய்ச் சோதித்தனர்.

''கோபிக்கவேண்டாம். நிலைமை தெரியும் தானே...'' என புன்முறுவலோடு சோதனையிட்டனர். 'கமரா'வை சுவரைப்பார்த்து இயக்கிக் காட்டுமாறு வேண்டினர். ஒரு 'ஷொட்'டை வீண்செய்ய விரும்பாமல் சுவரில் தொங்கிய கடவுள்களைக் 'கிளிக்' செய்து கொண்டோம்.

மேலிருந்து ஒருவர் வந்தார் எங்களைக் கூட்டிச்செல்ல. அதற்கிடையில் கொழும்பை வசிப்பிடமாக் கொண்ட எம்முடைய ஒருவரை மிகப் பவ்யமாய் கதைத்து விசாரித்தார் பாதுகாப்பு ஊழியர்களில் ஒருவர்.

வந்தவரும் பாதுகாப்பை உறுதிப்படுத்தி அழைத்துச் சென்றார். அமைச்சரின் அலுவலகப் பாதுகாப்பாளர்கள் மீண்டுமொரு முறை சோதனையிட்டனர். கமராவை வெற்றுக் 'கிளிக்' பண்ணக் கோரினர். ''இப்போது

தான் கீழே 'கிளிக்'
என்றோம்....
கழுத்திலிருந்து பாத
அதிகாரிகளின் கூச்ச
பின்.... உ[illegible] சென்
நேரம் இன்னமும் 11
மதிக்க வேண்டினர்.
னொரு பத்திரிகையா
தார். உரையாடினோ
யின் பிரதம ஆசிரிய
அவர், சற்று நேரத்தி
வர் வந்தார் அவரும்
யாளர் (Daily News,
றும் சபாரத்தினம்)
வீரகேசரியிலிருந்தும்
கள். இறுதி வரை வர
அமைச்சர் எங்களை
வரவையோ பார்
சற்று நேரத்திலெல்லா
நீலன் திருச்செல்வம்
இவர்தான் தமிழ்ப் ப
இந்தத் தீர்வுத்திட்டத்
செயற்படவேண்டும்
ஏற்பாடுகளை செய
தெரிந்தது.
தினகரன் இரண்டு,
மொத்தம் நால்வர்தா
டுபோன கேள்விகளு
அமைச்சர் 'நாம்
யம்...' என்று தொ
உரையின் விபரம் 7
நேர்காணலுக்குப் ப
யைக் கேட்டுக்கொண
இது தொடர்பாக ஏத
நீர்களா..? என்றார்.
தமிழ்க் கட்சிகள் இ
போன்றவற்றை வெ
செய்யலாம்? என்று

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பாத்திரி



தொகுப்பு: என். சரவணன்

| ...ட்டம் | ஒகஸ்ட் 3 தீர்வுத் திட்டம் | ஜனவரி 16 தீர்வுத் திட்டம் |
|---|---|---|
| ...பை ...uncil) | பிராந்திய சபை | பிராந்திய சபை (Regional Council) |
| ...வில்லை | குறிப்பிடப்படவில்லை | பௌத்தம் அரச மதம். பௌத்த மதத்தை காப்பதற்கென மீயுயர் பேரவையும் அமைக்கப்படும். |
| ...ல் சர்வஜன ...று நடத்தி | சிங்கள தமிழ் முஸ்லிம் மக்களுடன் கலந்தாலோசிக்கப்பட்ட பின் தீர்மானிக்கப்படும் | சொல்லப்படவில்லை. ஆனால் வடகிழக்கு இணைப்பில்லையென அரசியலமைப்பு பற்றி மகாசங்கத்தினருக்கு தொடங்கொட அறிவிப்பு. |
| ...ற்றுணிவில் | பிரதான அமைச்சரின் ஆலோசனையின் பேரில் ஜனாதிபதியால் நியமனம் | பிரதான அமைச்சரின் ஆலோசனையின் பேரில் ஜனாதிபதியால் நியமனம் |
| ...ிக்கையில் 2/... தீர்மா... | 1.ஜனாதிபதியின் நீக்கம் 2.சொந்த இராஜினாமா 3.சபையில் 2/3 பெரும்பான்மையினரால் அகற்றும் தீர்மானம் நிறைவேற்றப்படல் | 1.இராஜினாமா 2.சபையின் முழு எண்ணிக்கையில்2/3க்கு குறையாதோரினால் அகற்றும் தீர்மானம் நிறைவேற்றப்படல். |
| ...தற்றுணிவில் ஆளுநரால் ...க்கலாம். | குறிப்பிடப்படவில்லை | ஆளுநரால் கலைக்கலாம். (மத்திய அரசாங்கத்திற்கு நினைத்த பொழுதில் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருப்பதாக நீதித்துறை அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.) |
| ...டவில்லை | குறிப்பிடப்படவில்லை | 'இலங்கை குடியரசு' ('இலங்கை ஜனநாயக சோஸலிஸ குடியரசு' எனும் பெயரே இவ்வாறு சுருக்கப்பட்டது.) |
| ...ருந்தது | எதுவும் குறிப்பிடப்படவில்லை | எதுவும் குறிப்பிடப்படவில்லை |

மக்களின் பிரச்சினையைத் தீர்க்க கொண்டு வரப்பட்டதோ அம்மக்கள் அனுபவிக்கவே முடியாது செய்த அதே நேரம் எந்தமக்கள் கேட்கவில்லையோ அம்மக்கள் மீது பலாத்காரமாக திணிக்கப்பட்டுள்ளதையும் நடைமுறையில் காணலாம். அதே போன்ற நிலைமையே இன்றும்.

ஏனெனில் தீர்வுப்பொதியிலுள்ள போதாமை பற்றி குரலெலுப்பும் தமிழ் மக்களுக்கு நேர்மையாக பதில் கூறாது சிங்களத்தரப்பிடம் போய் அரசு மன்றாடுவதை காண முடிகிறது. அண்மையில் (ஜன.22) மகாவலி கேந்திர நிலையத்தில் அமைச்சர் பீரிஸ் ஆற்றிய உரை கவனிக்கத்தக்கது.

''....நான் கடந்த காலங்களில் ஹம்பாந்தோட்டை மற்றும் ஊவா பிரதேசங்களுக்கு விஜயம் செய்திருந்தபோது கவனித்த ஒன்று; ஹம்பாந்தோட்டை மக்களுக்கு நீர்ப்பிரச்சினை, ஊவா பிரதேச மக்களுக்கு தங்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்தல், மற்றும் காணிதொடர்பான பிரச்சினைகளை காணமுடிந்தது. இப்பிரதேசங்களில் காணப்படும் பிரச்சினைகளுக்கெல்லாம், தீர்வுகாண கொழும்பு கேந்திரமாக்கப்பட்டுள்ளது. இது அவ்வளவு உசிதமானதல்ல. இக்கருமங்களை ஆற்றும் போது ஏற்படும் சிரமங்களை நாம் கவனத்திற்கொள்ள வேண்டும். இதன் காரணமாக அதிகாரம், பரவலாக்கப்படல் வேண்டும். இதில் நாம் ஒன்றைக் கவனிக்க வேண்டும். நாம் பகிர்வது அதிகாரத்தையே ஒழிய நிலத்தையல்ல. எந்த ஒரு கட்டத்திலேயேயும் நாட்டின் ஒற்றையாட்சித் தத்துவத்திற்கும், இறைமைக்கும் பங்கம் விளைவிக்க முயலும் எந்த மாகாணத்தையும் எந்த தடையுமில்லாமல் கலைக்குமதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு...''(லங்காதீப- 19960126)

நாட்டின் மொத்த அபிவிருத்திக்கும் நிர்வாகப்பரவலாக்கல், ஊக்கமளிக்குமென்பதில் சந்தேகமில்லை.ஆனால் அதே பார்வையில் தமிழ் மக்களின் பிர்ச்சினையை அணுகுவது கையாலாகாத்தனத்தையே காட்டுகிறது.

தமிழ் மக்களது பிரச்சினையையும் சிங்கள மக்களின் பிரச்சினையையும் ஒரே தளத்தில் வைத்து அணுக முயன்றால் விளைவு என்னவாகும் என்பதை ஏற்கெனவே அனுபவித்தும் கூட அதே அணுகுமுறையைப் பிரயோகிப்பது எதனை காட்டுகிறது?

மேலும் இப்பொதியில் பிராந்தியங்களின் எல்லைகள் எதுவுமே குறிப்பிடப்படவில்லை. ஆனால் 'தீர்வுப்பொதியில் வடக்கு- கிழக்கு இணைப்பு இல்லை' என்பதை அண்மையில் அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்துள்ளார். அதிகாரப் பரவலாக்கம் பற்றி பௌத்த மகாசங்கத்தினருக்கு விளக்கமளிப்பதற்காக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டவரென்பதால் 'இணைப்பு இல்லை' எனும் இவரது கூற்று கவனிக்கத்தக்கது.

இதைவிட பிராந்திய சபைகளை எந்த வித தடையுமில்லால் மத்திய அரசாங்கத்தால் கலைக்கப்படலாம் என்பதும் குறிப்பிடத்தக்கது. கலைக்கும் அதிகாரம் பற்றியும் தெளிவாக தீர்வுப்பொதியில்' குறிப்பிடப்படாவிட்டாலும் கூட அமைச்சர் ஜீ. எல்.பீரிஸ் தொடக்கம் ஏனைய ஆளும் கட்சியில் பிரமுகர்களது உரைகளின் போதெல்லாம் தெளிவுப்படுத்தப்பட்டன.

இது எவ்வாறிருந்தபோதும் நடைமுறைச் சாத்தியமான ஒன்றாக இது இருக்குமோ என்பது சந்தேகமே. ஒரு பக்கம் புலிகளுக்கு இத்தீர்வுத்திட்டத்தைக்கூட அனுப்பி வைக்க மாட்டோம் என அரசு அறிவித்திருக்கிற அதே நேரம் தீர்வுத்திட்டத்தை தமிழ் கட்சிகள் கூட ஏற்கவில்லை. (கூட்டணி தவிர்ந்த) தமிழ் அமைப்புக்கள் ஒன்று கூடி இத்தீர்வுத் திட்டத்தை எதிர்த்திருப்பது தமிழ் மக்கள் தரப்பில் நல்ல சகுனமாகவே உணரப்படுகிறது. கூட்டணி இத்தீர்வுத்திட்டத்தை அமுல் படுத்துவதற்காக ஓடித்திரிவதை காணமுடிறது. இவ்விடயத்தில் அரசாங்கத்துக்கும் கூட்டணிக்கும் பாலமாக நின்று செயல்படுபவர் நீலன் திருச்செல்வம் அவர்கள். தமிழ் மக்களின் ஆகக்குறைந்த பட்ச நான்கம்சக் கோரிக்கையில் வடக்கு-கிழக்கு இணைப்பு பிரதானமாக இருந்ததென்பதை கூட்டணி அறியாதா? இதைவிட மங்கள முனசிங்கவின் தலைமையிலான தெரிவுக்குழுவின் தீர். வைவிட் மோசமான தற்போதைய தீர்வுத் திட்டத்தை கூட்டணி ஆதரிப்பது தமிழ் மக்களின் உரிமைகளை காட்டிக்கொடுக்கும் பிழைப்புவாதச் செயல் என்பதைத்தவிர வேறென்ன? 'மங்கள முனசிங்கவின் தெரிவுக்குழு' காலப்பகுதியில் வீரகேசரிக்கு கூட்டணித் தலைவர் சிவசிதம்பரம் அளித்த பேட்டியில் இங்கு நினைவூட்டற்தகும்.

''வடக்கு - -கிழக்குமாகாணம் இணைந்திருக்க வேண்டும் என்பதுதான் நம்முடைய அடிப்படையான கோரிக்கை. நாம் இதனைக் கேட்பது ஒரு வீம்புக்காகவோ அல்லது ஒரு அரசியல் பெருமைக்காகவோ அல்ல. தமிழ் பேசும் மக்களுடைய பாதுகாப்பு, சுபீட்சத்திற்கு இந்த இணைப்பு மிகவும் அவசியம். இல்லாவிட்டால் இத்தனை இழப்புக்களுக்கும் எந்தவித பயனுமில்லாமல் போய்விடும்.

...இரு பெரிய கட்சிகளும் தமது நிலைப்பாட்டை தெளிவாச் சொல்ல வேண்டும்.... ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரங்கள் பரவலாக்கப்படுகின்ற ஒரு தீர்வை காணமுடியாது''

(வீரகேசரி - 1992-07-12)

அன்றைய தெரிவுக்குழுவில் 'வட கிழக்கு இணைப்பில்லாத 9 மாகாண சமஷ்டித் தீர்வை முன்வைத்து ஸ்ரீநிவாசன் எம்.பி. செய்த துரோகத்தனத்திலும் கூட்டணியின் தற்போதைய நிலைப்பாடு குறைந்ததல்ல.

எப்படியேனும் தீர்வுத்திட்டத்தை திணித்து விடுவதில் அரசு காட்டிவரும் முயற்சிகளுக்கு ஒரு உதாரணம் அண்மையில் தமிழ்ப் பத்திரிகையாளர்களை அழைத்து தீர்வுப் பொதிக்கு ஆதரவாக பிரச்சாரம் மேற்கொண்டமை (பார்க்க பெட்டிச் செய்தி)

எனவே வழமைபோல் இனப்பிரச்சினை தீர்வு, சர்வக்கட்சி மகாநாடு, தீர்வுப்பொதி, தெரிவுக்குழு என்று தமது பதவிக்காலத்தை இழுத்தடித்துக்கொண்டே சென்று தேர்தல் வரும் போது ஐக்கியம், சமாதானம், சக வாழ்வு என மீண்டும் மீண்டும் பழைய குருடி கதவைத்திறடி கதையாய் போகட்டும் எமது கதை.

---

...து காட்டினோம்'

...ரை, பாதுகாப்பு

...ம் தடவல்களின்

...ல்லை. சற்றுத்தா ...ருந்தோம். இன் ...அருகே வந்தமர்ந் ...கரன் பத்திரிகை ...அருளானந்தம் ...பின் இன்னொரு ...றவுஸ் பத்திரிகை ...ரனில் பணியாற்

...வார்கள் என்றார் ...ல.

...செய்து யாரின் ...காண்டிருந்தார்.

யாளர்.

இதற்கு அமைச்சர் தந்த விளக்கம், தமிழ்க் கட்சிகளுக்கு பதிலளிப்பதற்கான கொள்கை விளக்கமாக அமைந்தது.

அது சரி, இது பற்றி ஏன் இவர் அமைச்சரிடம் கேட்கிறார் என்று தோன்றியது முதலில். பிறகு தான் அவர் லேக் ஹவுசை சேர்ந்தவர் என்பது எமக்கு உறைத்தது.

பிறகும் அதே பத்திகையாளர் கேட்டார்:

''நீங்கள் பேசியதிலிருந்து ஒரு சில பகுதிகளை நேர்காணல் வடிவில் நாம் வெளியிடலாமா?''

அவர் கேட்ட பவ்வியம் உண்மையில் எந்த பத்திரிகையாளருக்கும் எரிச்சல் ஊட்டக்கூடியது.

அதைத் தினகர்னில் மட்டும் போடும்படி சொன்னார் நீலன். (ஆங்கிலப் பத்திரிகைகளில் போடவேண்டாம்!)

போடும் போது, சிங்களத்தில் மொழிபெ...

...னைகளையும் தீர்க்கின்ற பேப்பர்,

தாய்நாடு- அது டெலோ பேப்பர்...

சங்கமம் - முஸ்லிம் காங்கிரஸ் பேப்பர்...

புதியகாற்று, புதிய கண்ணோட்டம்,புதிய பூமி, சூடாமணி, ஜனனி, போன்ற பத்திரிகைகளை நாங்கள் சொல்லவில்லை. அவர்கள் தான் அவற்றைத் தவிர்க்க காரணங்கள் வைத்திருந்தனரே.

எது எவ்வாறிருந்தாலும் முதலில் அவைகள் அனைத்தும் பத்திரிகைகள்.. என்பதை அவர்கள் கருத்திற் கொண்டதாகத் தெரியவில்லை.

அது சரி.. சரிநிகருக்கு என்ன சொல்லப்பட்டது என்கிறீர்களா?

கலாநிதி அவர்களே செப்பினார்; எமக்கு மட்டுமல்ல வீரகேசரிக்கும் சேர்த்துத்தான் ''இவர்கள் சில வேளைகளில் தீவிரவாதிகளின் நிலையை(Militant View) எடுக்கிறார்கள்... தமிழ் மக்களது துன்பங்களைச் சொல்...

## ...பாதி' சுமக்கிற...

...த நபர்- கலாநிதி ...ர்.

...கைகள் எவ்வாறு ...ழத்துழைப்பாய்ச் ...சொல்வதற்கான ...கிறார் என்பது

...ள் இரண்டென ...ாரித்துக்கொண் ...பக்கம் இருக்க, ...விருக்கும் விட ...னார். (அவரது ...த்திலுள்ளது...) ...அவரின் உரை ...தோம். முடிவில் ...கேட்க விரும்புகி

...றிஅறிக்கைகள் ...ால் நாம் என்ன ...ஒரு பத்திரிகை

...யர்க்கப்படும் போது தவறான அபிப்பிராயம் ஏற்படுத்தக்கூடிய விடயங்களை தவிர்க்குமாறு சொன்னார் அமைச்சர்.

ஓமோம்... நான் அதைக் கவனமாக எழுதுவேன் என்றார் பத்திரிகையாளர்.

மத்தியவங்கிக் குண்டுவெடிப்பின் பின்னர் சிங்கள மக்கள் எதுவித வன்முறைகளிலும் ஈடுபடாது நல்லமுறையில் நடந்து கொண்டார்கள் என்பது சிலாகிக்கப்பட்டது.

உண்மையில் இவர்கள் அவ்வாறு நடக்க வேண்டும் என்று எதிர்பார்த்திருந்தார்களா? 'பிரச்சினைக்கு வன்முறை' (இது பரந்த கருத்தில் பாவிக்கப்படுகிறது)க்கு அப்பாலான தீர்வுகளை மக்கள் ஏற்றிருக்கிறார்கள் என்று கூட எடுத்துக் கொள்ளலாமே!

''வேறு ஏதாவது தமிழ்ப் பத்திரிகைகள்....? என்று கலாநிதி நீலன் திருச்செல்வம் கேட்டார்...

ஒவ்வொன்றாய், முதலில் 'தினமுரசு..' என்றோம். அது ஈ.பி.டி.பி. சகல மட்டத்து ரச...

...லும் போது அப்படிச் சொன்னால பரவாயில்லை. ஆனால்...ஒரு சமநிலை தேவை.''

''ஆம், இது எமக்கு பெரிய சிக்கலாக உள்ளது. அவர்கள் கடுமையாக எழுதுகையில் நாம் மெதுமையாக எழுதும்போது எமக்குப் பல நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படுகின்றன... -இது லேக்ஹவுஸ். ஆனால் அமைச்சர் இந்த விடயங்களால் அவ்வளவாக ஈர்க்கப்பட்டதாகத் தெரியவில்லை.

தமிழ்க் கட்சிகளின் ஏழு கோரிக்கைகள் பற்றிப் பேச்செழுந்தது.

நீங்கள் த.வி.கூ.இது தொடர்பாக இன்னும் பேசவில்லையா என நீலனிடம் வினவப்பட்டது.

'விரைவில் பேசுவோம்' என்றார்.

உரையாடலின் முடிவில் அமைச்சருடன் தனியான ஒரு நேர்காணலுக்கு அனுமதி பெற்றுக்கொண்டு விடை பெற்றோம்.

எம் கே எம் எஸ்

---



## முஸ்லிம்களுக்கான அலகு மாகாணமா?

இலங்கையில் கூர்மை அடைந்துள்ள தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக நிகழும் அரசாங்கம் முன்வைத்துள்ள அரசியல் தீர்வு யோசனைகளினை ஒரு அரசியல் மாணவன் என்ற நிலையில் நோக்குமிடத்து நல்ல சில அம்சங்களை உள்ளடக்கிய தீர்வுப் பொதியாக வெளிப்படையாக நோக்கினால் புலனாகலாம். ஆயினும் இது தமிழ்த் தேசியத்தின் தேவைகளை நிறைவேற்ற போதுமானவையா என்று நோக்கும் போது பல சிக்கலான கேள்விகளையே மிஞ்சவைக்கின்றது. அடிப்படையிலேயே இத்தீர்வுப் பொதியானது சிக்கல்களைக்கொண்டுள்ளது. ஏனென்றால் இத்தீர்வுப் பொதி தமிழ் மக்களின் பாரம்பரியதாயக தொடர்பான கேள்விக்கு எந்தப் பதிலையும் தரவில்லை. தமிழ் மக்கள் தமது தேசத்தை இழந்து விட்டு எச்ச சொச்ச நல்ல அம்சங்களை ஏற்றுக்கொள்வார்கள் என்று என்னால் எதிர்பார்க்க முடியாது. இது முக்கியமான விடயமாகும்.

இத்தீர்வுப்பொதியானது வடகிழக்கு இணைப்புத் தொடர்பாக எதையும் பேசாதுள்ளது. வடகிழக்கு இணைப்பு ஒரு முக்கியமான முன்நிபந்தனையாகும். இது குறித்து தீர்வுப்பொதி ஆலோசகர்கள் சிந்திக்காதது வேடிக்கையாகவுள்ளது. இணைப்பில்லாத ஒரு தீர்வுத்திட்டம் தமிழ்மக்களுக்கான ஒரு தற்கொலைக்கயிறாகவே வந்து முடியும் என்று அபிப்பிராயப்படுகிறேன்.

அரசின் தீர்வுயோசனைகளில் அமுலாகும் அலகு தொடர்பாக இதுவரை தெளிவில்லாது உள்ளது. ஒரு முழுமையான சமஷ்டி மட்டுமே தமிழ் தேசிய இனப்பிரச்சினைக்கு சரியான தீர்வாக அமையும் என்றுதான் நான் கருதுகிறேன். முழுமையான சமஷ்டியை விதந்துரைக்காது தமிழ் ஈழம் தொடர்பான கோரிகையினை நிராகரிப்பது கேலிக்கூத்தாகும்.

முஸ்லிம்களின் நலன்களில் இருந்து இத்தீர்வு யோசனைகளை நோக்கினால் இது பொதுவாக இலங்கை முஸ்லிம்களுக்கும் குறிப்பாக வட-கிழக்கு முஸ்லிம்களுக்கும் எதையும் தரவில்லையென்றே கூறமுடியும். இத்தீர்வுயோசனைகள் தமிழர்களுக்கு ஒன்றுமே கொடுக்காததனால் முஸ்லிம்களுக்கும் எதையும் கொடுக்கத்தவறியது ஆச்சரியமானதல்ல. இனப்பிரச்சினையால் முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதன் காரணமாக முஸ்லிம்கள் தம்மை ஒரு தேசத்து மக்களாக அடையாளம் காணத் தலைப்பட்டுள்ளார்கள். இந்நிலையில் இத்தீர்வு யோசனைகள் முஸ்லிம்கள் தொடர்பாக எதையும் பேசாதது கவலைதரக்கூடியது. முஸ்லிம்களது அபிலாசைகளுக்கு சாதகமாக நிலத்தொடர்பற்ற முஸ்லிம் பிராந்திய அலகினை சிபாரிசு செய்தல் வேண்டும். இப்பிராந்திய அலகு சுயாதீனமாக செயற்படும் வகையில் அதிகாரங்கள் வழங்கப்படல் வேண்டும். இவ்விடயங்கள் அரசின் நகல் திட்டத்தின் காணப்படாததால் இது முஸ்லிம்களுக்கான அடிமைச் சாசனமோ என்று ஐயுறவேண்டியுள்ளது.

அத்துடன் பிராந்தியத்தை கலைக்கும் அதிகாரம், பௌத்தத்திற்கு இதுவரை இல்லாத அரசியலமைப்பு பாதுகாப்பு, குறைவான பிராந்தியப் பட்டியல் அதிகாரம், கூடியபட்சம் மத்திய அரசு தலையீடுகள் யாவுமே அரசின் யோசனைகளை சந்தேகத்திற்கு உட்படுத்தியே உள்ளது. சிறுபான்மை மக்களுக்கு என்ன தேவையென்பதை சிறுபான்மை மக்களே தீர்மானிக்கவேண்டும். அதனையே பொறுப்பான ஜனநாயகம் என்பேன். இது பௌத்த சிங்களப் பேரினவாத அரசியல் முறைமையில் சாத்தியமில்லை என்பதனை இத்தீர்வு யோசனைகள் கட்டியம் கூறுகின்றன

ஆர். எம்.இம்தியாஸ்

www.tamilarangam.net



# ஓவியமும் தேசிய தனித்துவத்தின் வெளிப்பாடும்

—கொன்சன்ஸ்லரன்





அந்நியராட்சி கீழைத்தேய கலைகளில் நிறையவே தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. கீழைத்தேய வாழ்நிலையில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியதோடு மட்டுமல்லாது பாரம்பரியங்களிலும் கலைபண்பாட்டு இலக்கிய நிலையிலும் தேக்கம் கண்டது. மேலைத்தேய கல்விமுறையின் அறிமுகம் இதற்கு அடிப்படைக் காரணமாயமைந்து நிற்கிறது.

மேலைத்தேய சிந்தனைப்போக்குகள் விஞ்ஞான அணுகுமுறைகள் எம்மிடையே வேர்விடத்தொடங்கின. எமது புறவுலகப்பார்வையும் விஸ்தாரமடைந்தது.

இந்த அணுகுமுறைகளினால் நாம் கண்ட புற உலகு எம்மை பிரமிக்கவைத்தது.

மேலைத்தேயரின் வருகைக்கு முன் கீழைத் தேயத்தில் நமக்கென ஒரு மரபு ரீதியான கலைப்பாரம்பரியமிருந்தது. அக்காலத்தில் ஓவிய மரபு சிறப்பாக மதத்துடன் பரவியே வளர்ந்து வந்தது.

சிங்களவர் மத்தியில் ஓவியமானது பௌத்த ஓவிய மரபாக விகாரை சுவரோவியங்களாகவும் குகை ஓவிய்ங்களாகவும் வளர்ந்த ஒரு வரலாறு உடையது.

மேலைத் தேய ஓவிய முறைமையின் அறிமுகத்துடன் இக்கலை மரபு பெரும் பாதிப்புக்குள்ளாகியது. இப்பாதிப்பு பலராலும் ஆரம்பகாலங்களிலேயே உணரப்படத் தொடங்கியது.

குறிப்பாக ஆனந்த குமாரசாமியின் குரல் கீழைத்தேய கலைமரபின் தனித்துவத்தினையும் அதன் சிறப்பினையும் எடுத்தியம்பியது. இதன் தொடர்ச்சியாக இந்தியாவில் எச்.டபிள்யூ. ஹர்வெல், ரவீந்திரநாத் தாகூர் ஆகியோர் இந்திய ஓவிய மரபின் புத்துயிர்ப்பனை நோக்காகக் கொண்டு உழைக்கத்தொடங்கினர்.

இருப்பினும் அந்நிய வருகையின் பின் இந்தியா பல வழிகளிலும் ஆதி இந்தியாவிலிருந்து வேறுபட்டு நின்றது. ஆக இந்திய மரபின் புத்துயிர்ப்பு என்பது அடிப்படையில் ஒரு எதிர்வினை (Reactionary) முயற்சியே அன்றி ஒரு கலை வளர்ச்சியின் பரிணாமப்படியாக கருதப்பட முடியாது.

இவர்களின் பின் வந்த ஜெமினிராய் இந்திய மரபுமுறையான ஓவியத்தை சமகாலத்திற்கு ஏற்றவாறு பாவித்தவராக கருதப்படுகிறார். இவரைத் தொடர்ந்து வந்த பலரும் அதீதமாக மேலைத்தேய நவீன ஓவியத்தின் பாதிப்பினால் சர்வதேசிய பாணிகளை வரித்துக் கொள்ளத்தலைப்பட்டனரேயன்றி தேசிய தனித்துவத்தினை நிலைநாட்ட இவர்கள் பெருமளவில் தவறிவிட்டனர் என்ற கருத்து பரவலாக நிலவுகிறது.

ஓவிய விமர்சகரான ஏ.எஸ். ராமனின் கருத்துப்படி இந்திய மரபினை பிரதிபலிக்கும் அதேவேளை நவீன உத்திகளையும் கையாளும் சமகால ஓவியப்பாணி தமிழ் நாட்டிலேயே சிறப்பாக பிரதிபலிக்கப்படுகிறது.

இந்த தேசியவாத தனித்துவம் பற்றிய பிரக்ஞை இந்திய ஓவியர்களிடையேயும் ஓவியவிமர்சகர்களிடையேயும் முக்கியத்துவம் பெற்ற ஒரு விடயமாக இருந்து வருகிறது.

இருப்பினும் ஈழத்தமிழரிடையேயும், சிங்களவரிடையேயும் இந்த தேசியத்தனித்துவம் ஒரு பேசப்படாத விடயமாகவே இருந்து வருகிறது. ஈழத்தமிழரின் ஓவியப்பாரம் பரியங்கள் பற்றிய தேடல்களும் அதனை நோக்கிய செயல்பாடுகளும் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை என்றே கூறவேண்டும்.

சிங்களவரிடையே ஓவியக்கலை குறிப்பிடத்தக்களவு வளர்ச்சி கண்டுள்ளது. ஆகவே அவர்களது ஓவியக்கலையின் வளர்ச்சி அதன் போக்குகள் பற்றிய மேலோட்டமான விசாரணை இந்த ஓவியத்தில் தேசியதனித்துவத்தின் அவசியம் பற்றிச் சிந்திப்பதற்கு அடிப்படையாக நாம் கொள்ளலாம்.

சிங்களவரது ஓவியக்கலை 43குழுவினரது வருகையுடன் புதிய உத்வேகம் கண்டது. இவர்களது முதலாவது கண்காட்சி 43ம் ஆண்டு நிகழ்ந்திருந்தாலும் அதற்கு வெகு காலத்திற்கு முன்னரே நவீன ஓவிய ஈடுபாடு சிங்களவர் மத்தியில் இருக்கவே செய்தது.

43 குழுவிற்கு முன்னர் ஏ.சி.ஜி.எஸ். அமரசேகரா, சோலியாஸ் மெண்டிஸ் போன்றோர் விக்ரோரிய பாரம் பரியத்தில் வந்த மேலைத்தேய ஓவிய முறையின் சிறந்த கலைஞர்களாகத் திகழ்ந்தனர். இவர்களை அடுத்து வந்த 43 குழுவினர் சிங்களவர் மத்தியில் பிரெஞ்சு வழிவந்த நவீன ஓவியப்பாணியின் முக்கிய வாரிசுகளாகத் திகழ்ந்தனர்.

இவர்களது கலை ஆளுமையும் அறிவு விஸ்தாரமும் பலராலும் போற்றப்பட்டும் விமர்சிக்கப்பட்டும் வந்துள்ளது. இவர்களில் சிலர் சர்வதேச அளவில் தமது இருப்பினை பதிவு செய்தவர்கள். இருப்பினும் இவர்களது ஓவியங்களின் தேசியத்தனித்துவத் தன்மை கேள்விக்குரியதாகவே படுகிறது.

ஒரு ஓவியம் பல்வேறு தளங்களில் வைத்து ஆராயப்படலாம். ஒரு ஓவியரது படைப்புக்கள் குறித்து ஒரு தளத்தில் தனித்துவத்தன்மையினை வெளிக்காட்டுகையில் அவரது படைப்பு பலராலும் சிலாகித்துப் பேசப்படுகிறது. குறிப்பாக அத்தளத்தினை முக்கியமாகக் கருதும் ரசிகர் அவ்வோவியத்தினை சிறந்த ஓவியமாகக் கொள்வர்.

ஓவிய ரசனை ஒரு தன்னிலைப்பட்ட செயற்பாடு. அதில் ஒருவருக்கு சிறப்பாகத் தெரிவது மற்றவர்களுக்கும் சிறப்பாக தெரிய வேண்டும் என்ற நியதி இல்லை.

ஆக, தேசியவாத தனித்துவத்தின் வெளிப்பாடு என்ற தளத்தில் வைத்து இன்றைய சிங்கள ஓவியர்களது படைப்புகளை நோக்குமிடத்து பலரது படைப்புக்கள் அடிபட்டுச்செல்வது தவிர்க்கப்பட முடியாதது.

நவீன ஓவியம் சர்வதேசப் பொதுமையை நோக்கி நகரும் ஒரு ஓவியப் பாணியாக பலர் கருதுகிறார்கள். ஆனால் ஆழமாக நோக்குமிடத்து இந்த சர்வதேச பொதுமை அடையப்படமுடியாத ஒரு இலட்சிய நிலை என்பது புலப்படும்.

மேலைத்தேய ஓவியத்திடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு நிறையவே இருக்கிறது. அவற்றைப் பெற்றுக்கொள்ளும் அதே வேளை நாம் அவர்களுக்கு எதனை அளிக்க போகிறோம் என்பதனையும் நாம் கருத்திலெடுக்கவேண்டும்.

வெறுமனே மேலைத்தேய பாணிகளை பின்பற்றுவதென்பது ஒரு அர்த்தமற்ற செயல். அது ஏறக்குறைய ஒரு 'மேலைத்தேய உல்லாசப்பயணியின்' கீழைத்தேய அனுபவங்கள் போன்றே வெளிப்படும்.

உள்ளடக்கத்திலும் மனித உருவகங்களிலும் மண்வாசனையை கொண்டு வந்து விட முடியாது. 43 குழுவில் வந்த பலரும் மேலைத்தேய ஓவிய முறையினையே தங்குதடையின்றி வரித்துக்கொண்டமை அவர்களது ஓவியங்களில் வெளிப்படுகிறது.

இவர்கள் மத்தியில் சற்றுப்புறநடையினராக ஜோர்ஜ் கீட்டையும், ரிச்சர்ட் கேப்ரியலையும் குறிப்பிடலாம்.

கீட்டினது ஓவியங்களின் முக்கியத்துவம் பல தளங்களினூடாக வெளிப்படுகிறது. முக்கியமாக அவரது தத்துவார்த்த உள்ளடக்கங்களே அவரது ஓவியங்களது சிறப்பு. அவரது ஓவியப்பாணி பொதுவாக ஆரிய தனித்துவத்தையும் குறிப்பாக இந்தியப் பாணியினையும் அடிப்படையாக வரித்து நிற்பதனைக் காணலாம்.

ஆக கீட்டினது ஓவியங்கள் முற்கற்பிதங்களற்ற நடுநிலையான நுகர்வோனுக்கு இந்திய ஓவியம் போலவே தென்படும்.

சிங்கள ஓவியர் மத்தியில் இன்று தேசியதனித்துவம் மிக மிக அருகி வருகிறது. ஓவியத்தில் தேசிய அடையாளம் பற்றிய பிரக்ஞை ஏற்படுவது இன்றைய காலகட்டத்தின் தேவையாகும்.

மேலைத்தேசங்களில் நவீன விஞ்ஞான அறிவியல் புரட்சியுடன் ஓவியம் கிளப்பிய பெரும் சர்ச்சைகள் இன்று பெருமளவு தணிந்து நிதானம் வலுப்பெறத்தொடங்கி விட்டது.

20ம் நூற்றாண்டு தெளிவைவிட அதிக குழப்பத்தையே ஓவியத்தில் விளைவித்தது. 20ம் நூற்றாண்டு ஓவியத்திற்களித்த பங்களிப்பு அடிப்படையில் இரண்டே. ஒன்று கட்புலக் கூறுகளில் (Visual Elements) ) விவகாரங்களைப் புகுத்தி ஒரு புதிய வெளிப்பாட்டு உத்தியினை அறிமுகப்படுத்தியமை. மற்றையது ஓவியத்திலேயே தேவையற்ற நுணுக்கங்களை களைவதற்கான அடிப்படையாக கொண்ட அரூபவாதத்தினை புகுத்தியமையுமேயாகும்.

இந்த இரண்டுமே கீழைத்தேய ஓவியங்களுக்கு புதியனவல்ல. ஆனால் அவை 'மரபு' என்ற சிறைக்குள் வைத்துப்பார்க்கப்படுவதால் தக்க கவனம் பெறத்தவறிவிட்டன. இப்படிக் கூறுவதனால் மேலைத்தேய ஓவிய முறைமையினாலோ, நவீன ஓவியத்திலோ நாம் எதனையும் பெற்றுக்கொள்ளக்கூடாதென்றோ பெற்றுக்கொள்வதற்கு ஒன்றும் இல்லையென்றோ அர்த்தப்படுத்திக் கொள்ளக்கூடாது.

உதரணமாக பிரதிமை ஓவியம் (Portrait) நிலக்காட்சி ஓவியம் (Landscape Painting) ) என்பன மேலைத்தேய ஓவிய முறைமை தந்த புதிய பிரதேசங்களாக அமைகின்றன. அதேபோல பல்வேறுபட்ட நிறப்பாவனையும் ஓவியத்தில் முப்பரிமான உருவ அமைப்புகளும் மேலைத்தேயரிடம் இருந்து நாம் பெற்றுக்கொண்ட அரிய விடயங்கள்.

ஆனால் எமது பாரம்பரியத்தை முற்றாக கைவிட்டு எமது தனித்துவ அடையாளத்தை இழந்து மேலைத்தேய பாணிகளை வரித்துக் கொள்வது காலனித்துவம் தந்த ஒருவித கலாசார தாழ்வு மனப்பாங்கின் வெளிப்பாடே.

இந்த அடிப்படைகளில் நோக்கும் பொழுது சிங்கள ஓவியர்கள் மத்தியில் ஒரு சிலரையே தேசிய அடையாளத்தை ஓவியத்தில் பேணும் ஓவியர்களாகக் குறிப்பிடலாம். இந்த வகையில் வரும் ஓவ்யர்களில் ஸ்டான்லி கிரிந்தே (Stanly Kirinde) முக்கியமானவர். மேலைத்தேய ஓவியத்தில் சில உத்திகளையும் சிங்கள மரபு ஓவியத்தையும் ஓரளவிற்கு வெற்றிகரமாக இணைத்துள்ளார்கள் எனலாம்.

இத்தகைய ஓவியர்களது ஓவியங்களுக்கு தக்க முக்கியத்துவம் கொடுக்காமை சமகால சிங்கள ஓவிய வளர்ச்சியின் ஒரு முக்கிய குறைபாடாகும்.

அடிப்படையில் கலைவடிவங்கள் ஒரு சமூகத்தின் வாழ்வியலின் பல்வேறு பரிமாணங்களை பிரதிபலிக்கும் சாதனங்களாகத் திகழ்கின்றன. இச்செயற்பாட்டினை செவ்வனே செய்வதற்கு ஒரு சமூகத்தினது கலைவடிவங்கள் அச்சமூகத்திற்குரிய சில தனித்துவ சிறப்பியல்புகளைக் கொண்டிருத்தல் அவசியமாகிறது.

ஈழத்தமிழர் மத்தியில் இத்தகைய கருத்துக்கள் நாடகக் கலையின் தலைதூக்கி பல ஆண்டுகளாகின்றன. தேசிய அரங்கு பற்றிய சிந்தனைகள் பலராலும் முன்வைக்கப்பட்டுள்ளன. இக்கருத்துக்கள் மீண்டும் முனைப்புடன் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியம்.

அத்துடன் ஏனைய கலை இலக்கிய வெளிப்பாட்டு வடிவங்களிலும் இத்தனித்துவத் தன்மைகளின் தேடலும் அவற்றின் முக்கியத்துவமும் வலியுறுத்தப்பட வேண்டும். ●

## கிளரா உள்

ஆறு குளங்கடலெல்லாம் ஆவியாகி,
முகிலாகிப்பின்
மழையெனப் பெய்யுமாம்.

பெய்கிறது.

பெய்ய,
முன்னைப் போலன்றியவை
வெறுமனே
பயமூட்டுஞ் சடத்துவத்துளிகளாய் மட்டுமேயாக _ என்
வரையில்,
உள்ளே மெல்ல அதீதம் எழும்.

தகரத்தில் மழையடித்துப்பாடுகிற பாட்டில்
உழைச்சலுறும் மனமடங்கித் தானாய்க் கண்ணயர்ந்து
போகவும்,
பழையதொரு மழைநாளின் _
ஒரே குடையில்
அதுவுஞ் சின்னஞ் சிறியதொன்றுள்ளே,
அரைவாசி அவளும்
அரைவாசி நானுமாய் நனைந்து தொப்பாக
ஆளுக்குள் ஆள் புகுந்தே
அணைத்து நடக்கும் போதைய
அவ்விளஞ் சூட்டுக் கதகதப்பையுங்கூட
மழைநாளின் வழமை நிகழ்வுபோல, வேண்டிக்
கிளரவில்லை என் உள்.

பெரிதுஞ் சிறிதுமெனத் துளிகள் பட உடலில்
சிலிர்ப்பெழ
லேசாய்த்தலைதூக்கிய காமத்தில்
சில்மிசித்துச் சிரிப்பெழுப்பும்,
எழுப்பிக் குதூகலிக்கும்
நகரத்து அழகர், அழகிகள் உலகம்
அந்நியமாய்ப் புறத்தே விரிகின்றது.

நேற்றுக் கறுப்புக் கறுப்பாய்
மழை கலந்து புகைபெய்தது போல
அறுபட்டே செத்த அப்பாவிச் சனங்களின்
இரத்தமுங்கூட
மழையெனப் பெய்தல் கூடுமின்றிங்கு.

நான் தேய்ந்து,
இன்னுமின்னுந்தேய்ந்து
இரத்தக்கட்டியாயென் தாயின் கருவில் ஆகிப்
பின்
விந்தாயும் முட்டையுமாய்ப் பிரிந்து
* இல்லத்தே போக வேண்டும்
அதற்குள்ளாகவே.

○

* இல்லத்தே போதல் - இல்லாமல் போதல்

1995.10.20ந் திகதி இரவு கொலன்னாவை, ஒறுகொடவத்தை எண்ணெய்க்குதங்கள் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி தீப்பற்றி எரிந்ததில் வெளியேறிய புகையின்நிமித்தம் கொழும்பை அண்டிய பிரதேசங்களில் மழை கறுப்பாகப் பெய்தது.
தொடர்ந்து பொலன்னறுவை, அம்பாறை, அநுராதபுரம் போன்ற எல்லைப்புறக்கிராமங்களில் 67 சிங்கள பொதுமக்கள் புலிகளால் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





குழந்தைக்கு என்ன தெரியும்?
கை விரலையும், அகப்பட்டுக்கொண்டதையெல்லாம் வாய்க்குள் கொண்டு போகும்.
வாய் இன்பம்.
அதற்கென்ன தெரியும்?
புளுதிபற்றி!
சின்னக்கண்ணை காற்று தீண்டும் போது மூடும். தாயின் உள்ளங்கையில் அடங்கியிருக்கும் பிஞ்சு, விரல்கள் உள்ளங்கைக்குள் அடங்கியிருக்கும். சின்ன இதயம்.
குழந்தைக்கு என்ன புரியும்?
நாம் அல்லல்ப்பட்டோடுகிறோம் என்று!
வாழத்தூண்டும் சின்னக்குஞ்சு
சிறுநீரும், கழிவும் வெளியேற்றும்.
குத இன்பம்.
அதெப்படி விளங்கிக் கொள்ளும்?
புளுதியின் அட்டகாசம் பற்றி.
மென்மையின் மொத்த வடிவமாய் மிக அழகாய், கண் அயர்ந்து தூங்குகிறது, சிறுகண்கள். அன்னையின் கதகதப்பான அணைப்பில், பனியின் மென்மையென தூங்குகிறது.
'மெய்'யை உரசிவிடும் மென்சிரிப்பு.
குழந்தை எப்படி அறியும்?
புளுதியின் கொடூரமான வெறிபற்றி.
ஜீவராசிகளின் இன்னல் அலையலையாக எழ, வான முகம் கருகருவெனக் கறுத்து, பூமித்தாய்க்கு விம்மலெடுத்தது. சபிக்கப்பட்டது போல் அழும். தன்னலமல்லா சேவை செய்யும் சேவகன் கூனிக்குறுகி கதிர்க்கைகளை ஒழித்துக்கொண்டான்.
புளுதியையும், அதை எதிர்ப்பவர்களையும் நன்கறியும்!
புளுதி தன்சக்திக்கு உட்பட்டவற்றையெல்லாம் திரட்டிக்கொண்டு உக்கிர அட்டகாசத்துடன் வீசத்தொடங்கியது.
புளுதியை எதிர்ப்பவர்கள் தம் மாயைக்குள் இருந்து அட்டகாசத்துடன் எதிர்க்க முனைந்தார்கள்.
மண்ணின் மீதும், பிணங்களின் மீதும் அவைக்கு கொள்ளை ஆசை.
மிகப் பெரிய கொம்பு மானை விழுங்கியது மலைப்பாம்பு.
புளுதியின் குருதிப் புகைச்சலைக் கேட்டு நாய், பூனை, ஆடு, மாடு, அனைத்தும் அறுத்தும், மீறியும் ஓட்டம் பிடித்தன.
'தப்பிப் பிழைப்பது' என்ற ஓர் உணர்வு மட்டும் செயல்பட அவை ஓடின.
எங்கு ஓடும்?

புளுதி பாயும் போது- ஒடியும்.
புளுதிக்குமேல் பாயும் போது, - கை தட்டியும், கை கட்டியும் வாழும் ஜென்மங்கள்.
அஃறிணைகளான செயற்பாடாகியது.
இப்ப இதுவா நேரம்?
இப்ப நியாயம், அநியாயம் கதைத்துக் கொண்டிருக்க! அசைவற்றவை தவிர்ந்த, அசைவுள்ளவை அனைத்தும் அசைந்து கொண்டிருந்தன. ஒவ்வொரு சாண், சாணாக முன்னேறின.
குயில்களின் ஈனக் குரல் வளிமண்டலமெங்கும் நிரம்பியிருக்கிறது.
'தப்பிப் பிழைப்பது' என்ற உந்தல் உள்ளுக்குள் புகுந்து மனம் போனதிசைக்கு பறக்கிறன. காற்றுக் கூட அவைக்கு உதவாமல் ஸ்தம்பித்து நின்றது.
புளுதியை எதிர்த்தவர்கள் முழங்கினார்கள்.
''எங்கள் உறுத்தலை எவையும் அசட்டை செய்யக் கூடாது. நாம் இன்று பூதாகரமான புளுதியுடன் போராடுகிறோம்! (பாய்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.) அது எம்மை பல முனைகளிலும் வீசுகிறது நாமும் எதிர்த்து வீசுவோம். நாம் பிணத்தில் ஊறியுள்ள புளுதியை முழத்துக்கு, முழம் நின்று 'வீசப்போவதால், அனைத்தும் இரவோடிரவாக பாதுகாப்பான பெருநிலப் பகுதிக்கு இடம் பெயருமாறு உறுத்துகிறோம்''
பெருநிலப் பகுதியோ? என்னமோ?
புளுதியை எதிர்க்க அஃறிணைகள் தேவைப்பட்டன.
பாதுகாவலர்கள் என்ற போதிலும், பாதுகாக்கப்படவேண்டியவையை அழித்தொழித்தார்கள்.
கூடுகளை இழந்து, சுகங்களை சிதறடித்து, விழி உறைந்து எதனுடைய முகத்தையும் பார்க்க இயலாது!
தப்பிப் பிழைப்பதற்கான இருத்தலை நோக்கிய ஓட்டமாச்சே!
சிக்கினால் சின்னாபின்னம்.
புளுதி பாய்சலாய் வீசும்; புளுதிப் பந்து மடியில் விழுந்து வெடிக்கும். அகப்பட்டுக் கொண்டவை துண்டு துண்டாய், மண்ணிலும், விண்ணிலும்!
கணக்கிட யாரால் முடியும்?
அஃறிணை அனைத்தும் விட்டுச்செல்ல காற்று மட்டும் பயந்து, பயந்து மெல்ல, மெல்ல ஆடும். புளுதியை சுமப்பதால்! குற்ற உணர்வு காற்றுக்கு.
பகலும், இரவும் பேய் அறைந்து கிடக்கிறது. காற்றிருந்தும் மூச்சுத்திணறி செத்துப் போகும் பயங்கர அமைதி.
என்னை யாரும் இனங் கண்டுகொள்வது கடினம்!
தனித்த மண்ணில் இனியும் என்னால் இங்கிருக்க முடியாது. அஃறிணைகளுடன் ஓடினால் துன்பத்திலாவது பங்குகொள்ளலாமே.
தப்பிப்பிழைப்பதற்கான இருத்தலை நோக்கிய ஓட்டம் அல்ல எனது.
நான் இறந்து நாட்களல்ல, வருடங்கள்.
பள்ளத்தை நோக்கிய வெள்ளத்தின் பாய்ச்சல்.
மனதுக்குப் பட்டதை கையில், அகப்பட்டதை சுமந்து கொண்டு அஃறிண்ணகளின் ஓட்டம்.
வாழ்ந்த அனுபவத்தை சுகமாக படுத்திருந்து அசைபோடும் அந்திமங்களும், வயிறு கழுவ வாழப்பிறந்தவையும் ஓட்டம்.
அவலப்பட்டு சாவதைத் தவிர்த்து, அவலங்களுடன் வாழ!
உயிரின் பிரயத்தனம். சுற்றிச் சுற்றி கொல்லனின் சம்மட்டி, மண்டையினூடே இறங்க, வாழ;
புளுதியை எதிர்க்கும், அஃறிணை அல்லாதவைக்கு! காலம் காலடியில் விதிகூட விலகி வழிதேடியது.
ஓராயிரம் பலிகொண்டு தருசு நிலமென விம்மித்துக் கிடக்கிறது.
விதைக்கப்பட்டது அனைத்தும் அர்த்தமற்றுப் போனது.
அஃறிணை அல்லாதவை விதித்த விதி விதித்தவர்களுக்கு, அவ்வப்போது விலகும். வசதிக்கு ஏற்ப விலகும்.
எதையோ கண்டு வீரிட்டழுகிறது குழந்தை? எதைக்கண்டு அழுகிறது என்று யாருக்குப் புரியும்!
பசியால் தான் அழுகிறது என்ற நப்பாசையில் வாய்க்குள் முலையைத் திணித்தாள். பாலை வெளித்துப்பி வீரிட்டழுகிறது. சுற்றியிருந்த அஃறிணைகள் எல்லாம் ஒரு கணம் ஸ்தம்பித்தன.
அஃறிணை அல்லாதவையும் ஓடுகின்றன, புளுதியை எதிர்ப்பதற்காய்!
பெரிய ஆல மரத்தின் கீழ் அவை சற்றே இளைப்பாறின. ஒரு பகுதி இளைப்பாற, ஒரு பகுதி போக, ஒரு பகுதி வந்து கொண்டிருக்க சுற்றோட்டம்.
தப்பிப் பிழைப்பதற்கான இருத்தலை நோக்கிய சுற்றோட்டம்.
ஆலமரத்தின் கீழ், அதன் கண்கள் பிதுங்கியிருந்தன. வயிறு வீங்கி வெடிக்கும் அளவுக்கு பெருத்திருந்ததால் அப்படியோ! அல்லது புளுதியின் விபரீதத்தால் தான் அப்படியோ தெரியாது, விழிகள் விழுந்து விடுமளவுக்கு இமைகள் விரிந்திருந்தன.
பசியும், தாகமும் ஒன்றை ஒன்று போட்டி போட்டுக்கொண்டு, வயதானவர்களை சுருண்டு படுக்க வைத்தது. இயலாதவர்களை குழறி அழவைத்தது. இவற்றையெல்லாம் புரிந்து மனம் நொந்து செத்து செத்து அழும். ஆக எல்லா விழிகளும் வெந்நீரைச் சொரிந்தன. அஃறிணை அல்லாதவை ஓடுகின்றன புயலை எதிர்ப்பதற்காய்!
விம்மிக்கொண்டிருந்த வானம் பொறுமையிழந்து, அழத்தொடங்கியது. ஓவென அழுதது, கண்ணீரில் துன்பம் அழியுமென அழுதது, தலையிலடித்து அழுதது, வாயிலடித்து அழுதது, தான் கரைந்து போக அழுதது, அழுதது அழுதது!
விழி பிதுங்கி வெடிக்குமென வீங்கியிருந்த ஆலிலை அடிவயிறு குற்றெடுக்க, அம்...மா என்றாளே, என்னையும் ஒரு கணம் சாகடித்து.
ஈன்றது, வயிறு கழுவ புதிய வரவு.
கொவ்வைப் பழம் என சிவந்த குழந்தை.
அதன் பொக்குள் கொடியை வாயின் பலங் கொண்டு அறுத்தெறிந்தாள்.
எம் கொடியும் துண்டாடப்பட்டது.
புளுதியின் கொடூரத்தில் மறைந்தவர்களும், மறைக்கப்பட்டவர்களும், தாராளம். புளுதியை புனிதமாய் எதிர்ப்பதாயும், தாகம் தீரும் மட்டும் புளுதியை எதிர்ப்பதாயும் இவர்களால் மறைந்த, மறைக்கப்பட்ட அஃறிணைகள் ஏராளம்.
குருதியால், மண் வெறும் மண்ணாகியது.
மணி இலையான்கள் என் காதோரம் கிணுகிணுத்தது மொய்க்க போட்டியிட்டன.
இனியும் என்னால் முடியாது, வயதானவர்கள் சிலர் அவளுக்கு உதவினார்கள். அஃறிணை அல்லாதவர்களும் எட்டிப்பார்த்துவிட்டு ஓடினார்கள் புளுதியை எதிர்ப்பதற்காய்!
வானத்தைப் பார்த்து துப்பியதால், தான் இப்படி ஒரு விளைச்சல்.
'வானம் பார்த்தறியாதவரெல்லாம் கவிஞர் என வந்துவிட்டார்.' அதற்குள் பாரதி ஓடிவருகிறான்.
பருவ காலத்தில் சில பறவையினங்கள் இடம் பெயர்ந்து, நாடு கடந்து, கண்டம் கடந்து வந்து போகும். அவற்றுள் சிலதுகள் இனத்தை விருத்தி செய்ய முட்டைகளை ஈன்று செல்லும். அவைகளுக்கு கூட அவ்வளவு நம்பிக்கை, பாதுகாப்பு. என்ன செய்வது? புழுக்களுக்கு இருக்கும் பாதுகாப்புக் கூட இல்லாமல் அஃறிணைகள் ஓடுகின்றன. அஃறிணைகள் அல்லாதவையும் ஓடுகின்றன. புளுதியை எதிர்ப்பதற்காய்!
புளுதி விட்டெறிந்த, தீப் பந்தொன்று வீழ்ந்து வெடித்தது.
அதன் வீச்சுக்குள் அகப்பட்டவை எல்லாம் இறந்து போயிற்று. இல்லை. சின்னாபின்னமாக உருத்தெரியாதபடி கணக்கிட முடியாதபடி சிதறிப்போயின.
ஓடுபவர்கள் ஓட, என்கால்களும் ஓட்டத்தை நாடின.

ஆனாலும் அங்கிருந்தவர் மண்வெட்டியால் சிறுகுழிதோண்ட, நானும் சேர்ந்து கொண்டேன். இரண்டு கைகளையும் கோலியளவு இறைச்சித் துண்டங்களை ஒன்று சேர்க்க அவற்றுள் மூன்று கண்கள். அவர்கள் அதே மாதிரி கைகளுக்குள் அடங்கியிருந்தனர். ஒன்றாக குழியில் போட்டனர். மண்ணை வாரி இறைத்தனர்.
எல்லாமாக ஏழு கண்கள்?
எப்படி கணக்கிட? யாரை என்று கணக்கிட?
சிறுவனா? சிறுமியா?
பெண்ணா? ஆணா?
எப்படி? எப்படி?
நாம் காண!
காகம் ஒன்று பனையுச்சியில் உணவைக் கண்டு கத்தி அழைத்தது தன் இனத்தை.
எங்கள் ஓட்டத்தில் ஒருவரை ஒருவர் தவற விட்டோம்.
அஃறிணைகள் அல்லாதவை தவறவில்லை புளுதியை எதிர்ப்பதற்காய்.
பறவையினங்கள் கண்ணை மூடி பதுங்கியிருந்தன. எதிரியிடம் இருந்து தப்பிக்கும் நம்பிக்கையை அவை இழந்துவிடவில்லை போலும்.
கெலிபிடித்து பொன், மண், பொருள், பதவி, புகழ், என பறக்கும் புளுதியிலிருந்தும், எதிர்ப்பவர்களிலிருந்தும் எப்படி தப்பித்துக் கொள்வது? என அவை நம்பிக்கையிழந்துவிட்டன போலும்.
கண்ணைப் பொத்தி, பதுங்கி உயிரற்றுக் கிடந்தன.
சபிக்கப்பட்ட பூமிக்கு அகோரப்பசி, வானம் கண்ணீர் பொழிய விழுங்கிக்கொண்டிருந்தது.
பசி, அகோரப்பசி. சிறுகுடல் முக்கித்தக்கி பெருங்குடலை விழுங்கிக் கொண்டிருந்தது.
உணர்வுகளற்ற சோர்வு.
கண்கள் சொருகி அயரத் தொடங்கியது.
வயிற்றுக்குள் எதையாவது கொட்டிக் கொள்ள வேண்டும்?
எதை?
இறைச்சித் துண்டங்கள் தவிர எது கிடைக்கப் போகிறது!
மயக்கத்திலும் தப்பிப் பிழைப்பதற்கான ஓட்டம்.
அஃறிணை அல்லாதவையும் ஓடுகின்றன, புளுதியை எதிர்ப்பதற்காய்!
பாதையோரங்களில் ஆங்காங்கே அறிவிழந்து, அசைவற்று மல்லாக்கப் படுத்திருந்தன. தட்டுத் தடுமாறி உயிர்பிரிய அவை கிடந்தன.
தப்பிப்பிழைப்பதற்கான இருத்தலை நோக்கிய ஓட்டத்தில் அவை நம்பிக்கை இழந்தன.
அஃறிணை அல்லாதவை ஓடுகின்றன. புளுதியை எதிர்ப்பதற்காய்!'
வழிநெடுகிலும் சிறுசுகளும், பெரிசுகளும் இறந்து போயின. அவலப்பட்டுச் செத்துப் போயினவாம்.
நல்ல காலத்திற்கு என் கண்களில் படவில்லை, இல்லாட்டி எவ்வளவு கஷ்டமாயிருக்கும்?
எனக்கும்! உங்களுக்கும்!
நாங்கள் ஓடுவோம்!
புளுதியை நெருங்க, நெருங்க மனசு நொறுங்கவென இறுகின.
அமைதியான மயானம். உயிரினங்கள் அனைத்தும் ஓடிவிட்டன.
புளுதிக்கும், அதனை எதிர்ப்பவர்களுக்குமிடையில் மரம், செடிகளும் வாழத் துடித்தன. அவ்வைகள் சுமைகள் ஏற்றப்பட்டு மரணத்தோடு.....
தனித்த முனகல் காற்றோடு கலந்து வருகிறது. மெதுவாக எட்டிப்பார்ப்போம்!
குடிசையின் வாசல் திறந்திருக்கிறது. இருமியபடி கட்டிலில் நிமிர்ந்து இருக்கிறது முதுசு. துணை ஊன்று கோல். தலைமாட்டில் தண்ணீர்ப் பானை. அருகில் சிறிய கோப்பை. எந்த நிலையிலும் விட்டுப்பிரியேன் என்றிருக்கும் நண்பனாய் சுருட்டு. எடுத்து முரசால் நன்னி பதமாக பிடிக்கிறார். நீண்ட நேரமாக மௌனமாக வாசலை வெறித்துப் பார்க்கிறார். நெற்றி நரம்புகள் புடைக்கிறது. கீழுதடு மெல்லத்துடிக்கிறது. சுருட்டை கையிலெடுக்கிறார். அதனையும் இழக்க அவருக்கு பிடிப்பில்லை.
என்னை அவர் இனம் கண்டு இறுங்குப்பிடியாய் பிடித்துக் கொண்டு, 'நாயே, குரங்கே உன்னையொருத்தி போட்டாளே வேலையற்றுப் போய்' என்று காளமேகம் ஏசியது போல் ஏசமாட்டார், என்று என்ன நிச்சயம்.
எனக்கு என்ன உரிமை இருக்கிறது?
இவர் மூச்சை நிறுத்த!
புளுதியினதும், அதனை எதிர்ப்பதினதும் வேலையது!
என்னால் முடியாது.
சொல்லிக்கொள்ளாமல் பின்வாங்குவது புத்திசாலித்தனம். இரண்டு மாதங்கள் போனால் சகலதையும் மறந்திடும் இதுகள்.
புளுதியை எதிர்ப்பவர்களின் மனக்கனம். காரணமில்லாமல் சிணுங்கிக் கொண்டிருந்தது கடலேரி.
ஏரியை கடப்பவர்களை சுமப்பதால் சிணுங்குது போலும், எமக்கு இப்பிரச்சினை இல்லை. காற்றோடு காற்றாக கலந்திருக்கும் எனக்கும், மனதால் என்னைத் தொடரும் உங்களுக்கும் இப்பிரச்சினை இல்லை. வாருங்கள் இந்த ஏரியைக் கடப்போம்!
இவ்வளவு தூரம் என்னோடு வந்துவிட்டீர்கள், ஒரு முறையாவது நான் யார்? என்று ஓரளவேனும் அறிவிக்கவில்லையே!
நானும் புளுதியை எதிர்த்தவன் தான்! புளுதியை அடியோடு வேரோடு பிடுங்கியெறிய நினைத்தவன். வெறுமனே கிளைகளை வெட்டியோ, அடக்கி வைக்கவோ நாம் முனையவில்லை.
ஒன்று, இரண்டு என நண்பர்கள் இணைந்தோம். கூட்டல் விருத்தியில் இணைந்து கொண்டிருந்தோம்.
வாசிப்பும் பகுத்து அறிதலும், ஆய்வும், தேடலும், அனுபவமும், நடைமுறையும் எம்மை வேகமாக்கவில்லை. இலகுவில் துலங்கவில்லை. மிகவும் நிதானமாக எம் அடி!
புளுதியை எதிர்ப்பதாய் மார்பில் எழுதி ஒட்டிக்கொண்டு எதிர்த்தவர்கள், ஒன்றொன்றாகக் கடித்துக் குதறி கடைசியாக.....
எங்கள் கரங்கள் வெட்டப்பட்டு சிதறி வலுவிழந்து மூலைக்குள் முடங்கிப் போனோம்.

என்னை இழந்து தூங்கிக் கொண்டிருந்த சாமத்தில் எதிர்ப்பவர்களிடம் சிறைப்பட்டேன். என்னவளையும், எம்மோடு ஒட்டிக் கொண்ட ஒன்பது மாதங்களாகிய பிள்ளையையும் விட்டுப் பிரிக்கப்பட்டேன்.
எவ்வாறெல்லாம் நடத்தப்பட்டேன்?
எவ்வாறெல்லாம் சித்திரவதைப்பட்டேன்?
எவ்வாறெல்லாம் சித்திரவதைப்படுத்தப்பட்டேன்?
என்பதையெல்லாம் பிறிதொரு சந்தர்ப்பத்தில் தங்களோடு பகிர்ந்துகொள்ளலாம்.
எவ்வாறு கொல்லப்பட்டேன்?
இரண்டு காதுத்துவாரத்திலும் ஒரு சாண் நீட்டமான இரு கம்பித்துண்டங்களை வைத்து அவன் தன் இரண்டு கைகளையும் ஓங்கினது, இருகண்களையும் மூடினது, தான் எனக்குத் தெரியும்.
விழித்த போது, இறுக்கமற்று, மிக மிக, லேசாய் அந்தரத்தில்.... புளுதியை சார்ந்தவர்கள் எங்கள் சொத்தை முன்வைக்கிறார்களோ! இல்லையோ! புளுதி எதிர்ப்பாளர்கள் அதனை ஏற்பார்களோ! இல்லையோ! ஆனாலும் அஃறிணைகளுக்கு சவப்பெட்டிகளும் தேவையற்றுப் போனதே! ஓடங்கள் தரை தட்டிக்கொண்டன. எல்லோரும் முண்டியடித்துக்கொண்டு இறங்கி ஓடினார்கள்.
ஒரு ஓடத்தில், தாயின் அணைப்பில் வதங்கிடாத சிறுமொட்டு உறங்குகிறது. சின்னக் கண்கள் மூடிக்கிடந்தன. கைவிரல்கள் உள்ளங்கையில் அடங்கியிருந்தது, சின்ன இதயம்.
உப்புத் தண்ணி முகத்தில் எறிந்து விழுகிறது. எதுவுமற்று முகம் விறைத்துக் கிடக்கிறது. விழிமடல்கள் விரிந்திருக்க, கண்கள் நிலைத்திருந்தன.
ஓடுபவர்கள் ஓட, இருவர் காலால் பிறாண்டினார்கள்.
புளுதியும், எதிர்ப்பவர்களும் ஒன்றாய் கொன்ற அஃறிணைகள் பரவியிருக்க,
ஐயோ யாரைப் புதைக்க?
தம்மைத்தாமே அழித்துக்கொள்ள உரிமையில்லாத,
பிறந்தவை மரணிக்க!
மரணம் வாழுது!

www.tamilarangam.net



# பெண்கள் தொடர்பான 3 சிங்களத் திரைப்படங்கள்



செய்லம

நாம், நாள் முழுவதும் தொலைக்காட்சியிலும் திரையரங்குகளிலும் இமைமூடாமல் பார்ப்பது நல்ல திரைப்படங்களா? இக்கேள்விக்கான பதிலை இப்படித்தான் தர முடிகிறது; இவை மிகவும் கற்பனைகலந்தவை. பொழுது போக்குப் படங்கள் எனக் கூறப்படும் இவை, இலாபம் அடைவதை மட்டுமே நோக்கமாகக் கொண்ட வியாபார ரீதியான வர்த்தக படங்கள் மட்டுமல்ல, சமுதாயத்திலுள்ள பழமைவாத கருத்துக்களை மீண்டும், மீண்டும் கூறி அவற்றை திணிப்பதிலும், பிற்போக்கான கருத்துக்களை வலியுறுத்துவதிலும் கணிசமான பங்கை ஆற்றுகின்றன.

இந்தப் படங்களுக்கு ஒருவரையறையுண்டு. கொஞ்சம் காதல், கொஞ்சம் கவர்ச்சி (நீங்கள் இதை ஆபாசமென்றால் அவர்களென்ன செய்வார்கள்) இவற்றைக்கோர்க்க பாட்டுக்கள். இறுதியில் வாய்மை (?) யை வெல்ல வைப்பதற்கான சண்டை, (இதுவும் உங்களுக்கு வெறும் வன்முறையாக ப்படலாம்) இவையெல்லாம் சேர்த்து ஒரு படம் தயாராகும். அது எமது திரையரங்குகளில் நூறுநாள் தாண்டி வெற்றிநடை போடும். இதைப்பார்ப்பதற்கு ரசிகர்கள் அலைமோதுவார்கள்.

மீண்டும் இதே வரையறைக்குள் ஒரு திரைப்படம் வெளிவரும். மீண்டும் அலைமோதும் கூட்டம். இப்படங்களில் வரும் கதாநாயகன் அசாத்திய தன்மைகொண்டவனாக வெளிக்காட்டப்படுவதும், கதாநாயகி முதலில் மிடுக்குடன் இருப்பதும், காதலிக்க அல்ல திருமணம் செய்தபின் நல்ல குடும்பப்பெண்ணாக (?) மாறுவதும் என்று அசத்தியிருப்பார் தயாரிப்பாளர்/நெறியாளர்.

பெண்களை இவ்வாறு சித்திரிப்பது தமிழ் சினிமாக்கள் தான் என்றில்லை. காலதேசம் கடந்து எல்லா மொழிப்படங்களிலும் இது உண்டு; சில விதிவிலக்குகளைத்தவிர. இது போன்ற சிங்கள திரைப்படங்கள் உள்ளன. எனினும், சிங்கள திரைப்படங்களில் விதிவிலக்கான திரைப்படங்கள் ஒப்பீட்டளவில் தமிழ்ப்படங்களை விட அதிகம் உண்டு. மொத்த சிங்கள சினிமாவை ஒப்பிட்டு நோக்கும் போது ஒரு புறத்தில் வியாபாரப் படங்கள் இருந்தாலும் மறுபுறத்தில் யதார்த்தபூர்வமான சமூகப்பிரச்சினைகளைப் பற்றி ஆராயும், சிந்திக்கும் படங்கள் கணிசமானவை உண்டு. சிங்களத்திரைப்படங்கள் வெளியிடும் நடைமுறையில், இவ்விரு எதிர்வகையான படங்களும், அததற்குரிய திரையரங்குகளில் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டு வருகிறது.

அந்த வகையில் மிக அண்மையில் வெளியான மூன்று சிங்கள திரைப்படங்களான எச்.டி. பிரேமரத்ன நெறியாள்கை செய்த 'செய்லம' (The City) வசந்த ஒபேசேகர நெறியாள்கை செய்த 'மாருதய' (The Strom) பராக்கிரம நீரியல்ல நெறியாள்கை செய்த 'அயோமா' ஆகிய திரைப்படங்கள் பற்றிய சிறுகுறிப்பொன்றை கீழே தருகின்றேன்.

## செய்லம

### எச்.டி.பாரேமரதன

காடுகளுக்கு அன்றாடம் சென்று விறகு சேகரித்து, விற்றுவாழ்ந்து வரும் ஒரு சிறு குடும்பம். மனைவி (அனோஜா வீரசிங்க) கணவன் (சிறில் விக்கிரமசிங்க) இவர்களுக்கு ஒரு பிள்ளை.

இவர்கள் வாழ்க்கையில், நகரத்தில் இருந்து லொறியில் விறகு ஏற்ற வரும் ஒருவன் (ரவீந்திர ரந்தெனிய) புதிதாக இணைகிறான். இவர்களது வறுமைக்கு அவன் உதவி செய்கிறான். இப்படி இருக்கும் ஒரு சந்தர்ப்பத்தில் ரவீந்திரவுடன் வந்த நண்பர்கள் அனோஜாவை பாலியல் வல்லுறவு செய்கின்றனர். பிரச்சினை உருவாகின்றது. கணவன் சிறில் தற்கொலை செய்துகொள்கிறான். அவள் குழந்தையுடன் தனித்துவிடப்படுகிறாள். ஆனால் ரவீந்திர அவளுக்கு கைகொடுக்கிறான். அவள் நகரத்திற்கு அழைத்துச் செல்லப்படுகிறாள் அங்கு இருவரும் திருமணம் புரிகின்றனர். முதலாளியுடன் ஏற்பட்ட தகராறில் ரவீந்திர வேலையை இழக்கிறான். குடும்பத்தைக் காப்பாற்ற விபச்சார தரகனாக மாறுகிறான். பெண்கள் தொடர்பு அவனுக்குக் கிடைக்கிறது.

மனைவிக்கு இது தெரியவருகிறது. அவளுக்கு கணவனின் தொழிலோ, அவனுக்குள்ள வேறுபெண்களுடனான தொடர்போ பிடிக்கவில்லை. இது தொடர்பாக கணவனுடன் வாதாடுகிறாள். பெண்களை வைத்துச் செய்யும் தொழிலைக் கைவிடும்படி கோருகிறாள். தன்னையும், குழந்தையையும் காப்பாற்றுவதற்காக கணவன் மற்றைய பெண்களைப் பலியிடுவதை அவள் விரும்பவில்லை.

இதுதான் நிலைமை என்றால் அவள் தன்னையே பலியாக்கத் துணிகிறாள்.

அவன் தனது வாடிக்கைப் பெண்ணை பஸ்தரிப்பு ஒன்றில் நிற்பாட்டிவிட்டு, வீதியின் மறுபுறத்தில் காத்திருந்தான். வீதியில் பல வாகனங்கள் குறுக்கும் மறுக்குமாகச் சென்று கொண்டிருந்தன. அவனது மனைவி அந்த பஸ்தரிப்பு இடத்திற்கு வருகிறாள். விபச்சாரப் பெண்ணைப்போல் உடை, கைப்பை, லிப்ஸ்டிக், இத்தியாதிகளுடன்.பழைய பெண்ணை கைவிட்டு, புதியவளை அழைத்துச் சென்றுவிடுகின்றனர் வாடிக்கையாளர். ஏற்கெனவே இவனால் நிறுத்தப்படிருந்த பெண் ஓடிவந்து இவனுக்கு விபரத்தைத் தெரிவிக்கிறாள்.

மனைவியை ஏற்றிச் சென்ற காரை துரத்திச் செல்கிறான். கார் கொஞ்சம் கொஞ்சமாக அவனுடைய பார்வையிலிருந்து மறைந்து சென்று விடுகிறது. மின் கம்பம் ஒன்றில் சாய்ந்து அழுகிறான். திரையில் கட்டிடக் காடுகளிலிருந்து அவன் மனைவிபடும் வேதனைக்குரல் மெல்ல மெல்லமாக அதிகரித்து இறுதியில் அவலமாக ஓங்கி ஒலிக்கிறது. இந்தச் சட்டகம் (Frame) மிகவும் அழகாக ஒளிப்பதிவு செய்யப்பட்டிருந்தது.


## மாருதய

### வசந்த ஒபேசேகர

வீணா ஜயக்கொடி ஒரு அரசியல் வாதியின் மனைவி. அவளுக்கு இளம் பெண்பிள்ளைகள் இருவர். தேர்தல் காலமொன்றின் போது, கணவன் கொலைசெய்யப்படுகிறான். அதுவரை இவர்களுடன் ஒட்டி உறவாடியவரெல்லாம் விட்டு, விலகிச் செல்கின்றனர். மனைவிக்கு கணவன் இருக்கும்போதே, அவனுடைய செயலாளருடன் நெருக்கமான உறவு இருந்தது. அதைப்பாவித்து அவளை அவன் கீழ்தரமாகப் பயன்படுத்துகிறான். அவளும் அதற்கு அடிமைப்பட்டுப் போகிறாள்.

இவை வெளித்தெரியவர இளம் பெண்பிள்ளைகள் இருவரும் சிக்கலான நெருக்கடிக்கு முகம் கொடுக்கின்றனர். சமூகம் அவர்களையும் விட்டுவைக்கவில்லை. மூத்த மகளின் (சங்கீதா)காதலன் அவளை கைகழுவிச் செல்கின்றான். அவள் தாயின் வழிக்கு, சமூகத்தால் இழுத்து விடப்படுகிறாள். இவர்களது பிரபல்யத்தால் இரண்டாவது மகள் (யசோதா) பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கிறாள். வீதியில் செல்ல முடியாது, பாடசாலைக்குச் செல்ல முடியாது, கடைகளுக்கு குளிர்பானம் அருந்தக் கூடச்செல்ல முடியாது. எல்லா இடங்களிலும் இவளை அழைக்கத் தயாராக இருந்தனர் ஆண்கள். அவ்வழியில் செல்வதைத் தவிர்க்க இயன்றளவு முயன்றாள். ஆனால் சமூகம், அவளையும், விட்டுவைக்கவில்லை. அவளும் தன் தாய், தமக்கை வழியில் காலடி எடுத்து வைக்கிறாள்.

இவர்கள் வாழ்க்கை விபச்சாரிகளாக முத்திரை குத்தப்பட்டு ஓடியது. இவர்கள் மனம் இதையெல்லாம் தூக்கியெறிந்து நல்தொரு வாழ்க்கையைப்பற்றி எப்பொழுதும் சிந்தித்துக்கொண்டிருக்கும். இந்நிலமையில் தாய் (வீணா ஜயக்கொடி) இறக்கின்றாள். தமது கிராமத்து வீட்டுக்கு அவளது உடலை எடுதத்துச் செல்கின்றார்கள். தாம் கஷ்டப்படும் பொழுது, தம்மை ஏறெடுத்தும் பார்க்காது, தம்மை இம்சித்த சமூகம், தமக்கு உதவவரும் பொழுது அடித்து விரட்டுகின்றனர் இருமகள்மாரும். இறுதியாக இருவரும் புகைபிடித்துக்கொண்டு தம் சூனியமான எதிர்கால வாழ்வைப்பற்றி சிந்தித்துக்கொண்டிருக்க படம் முடிவடைகிறது.



மாருதய

## அயோமா

### பராக்கிரம நீரியெல்ல

ஒரு கிராமத்துக்கு அரசியல் வாதியொருவர் வருகிறார். அவரது கண்கள் ஒரு இளம் பெண்ணைக் கண்டுவிட்டன. அவரது காரியதரிசி அவ்விளம் பெண்ணை அணுகி நீ இவரிடம் கேட்டால் நல்ல வேலையொன்று வாங்கித்தருவார் என ஆசைவார்த்தை காட்டுகிறான். அவள் அதை நம்பி மறுநாள் காலை துடியாட்டத்துடன் காதலன் சைக்கிளில் ஏற்றிச்சென்று பஸ்ஸில் ஏற்றிவிட அவ் அரசியல் வாதியின் வீட்டுக்குச் செல்கிறாள். அங்கு அவள் பலவந்தமாக பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுகிறாள். அத்துடன் அவள் வாழ்க்கை திசைமாறுகிறது.

திரைப்படம், ஒரு கதாசிரியருக்கு இவள் தன் கதையை சொல்வதாக நகர்த்தப்படுகிறது. ஒரு விபச்சாரவிடுதியை பொலிஸ் முற்றுகையிடும் பொழுது அங்கிருந்து ஒரு பெண் தப்பித்து ஓடுவதுடன் படம் ஆரம்பமாகிறது. அக்கதை இப்படித்தான் நகர்கிறது. அரசியல் வாதியால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளானவள் வீட்டைவிட்டு வெளியே செல்கிறாள். வேலை செய்து வாழ்வதற்காக. ஆனால் ஒரு ஆண், இவளை தன்வசப்படுத்தி, தன்நண்பனின் வீடொன்றில் வேலைக்காரியாக சேர்த்து விடுகிறான். நண்பனின் மனைவி வைத்தியசாலை ஒன்றில் வேலைசெய்பவள். இரவு வேலைக்கு செல்பவள். அப்படியான ஒரு இரவில் அந்நண்பனால் பலவந்தப்படுத்தப்படுகிறாள். இது ஒவ்வொரு இரவும் தொடர்கிறது. இச்சந்தர்ப்பத்தை பின்னர் வேலைக்கு சேர்த்து விட்டவனும் பயன்படுத்துகிறான். இதனால் பாதிப்புற்ற அவள் மீண்டும் வீட்டுக்கு வருகிறாள். கிராமத்தில் அளைப்பற்றி அவதூறாக கதைகள் பரவிவிட்டிருந்தன. அவளுக்கு கிராமத்தில் வாழ முடியவில்லை. அதற்கு, அவளது வயிற்றில் வளர்ந்த குழந்தையும் காரணமாகியது. கருவைக்கலைக்க வெதமாத்தயா ஒருவரிடம் அவளது தாய்அவளை அழைத்துச் செல்கிறாள். கருவைக்கலைப்பதற்கான காலம் கடந்துவிட்டதென்றும், விரும்பினால் குழந்தையைப் பெறும் வரை அவளை அங்கேயே விட்டுவிட்டு போதும் படியும் அவர் சொல்கிறார். அங்கேயே தங்கியிருந்த அவளை அவரும் விட்டுவைக்கவில்லை. அவர் சொல்கிறார். அங்கேயே தங்கியிருந்த அவளை அவரும் விட்டுவைக்கவில்லை. குழந்தையை பெற்றாள். அவள் மீண்டும் கிராமத்துக்கு செல்வதானால் குழந்தையைக் கொண்டுசெல்ல முடியாது. இந்நிலமையை பாவித்து அவர் குழந்தையை பலஆயிரம் ரூபாவுக்கு வெளிநாட்டவருக்கு விற்கிறார். இவளுக்கு சில நூறுரூபாய்களை கொடுக்கிறார். அதை அவள் அவரது முகத்தில் தூக்கியெறிந்துவிட்டு, துக்கம் தாளாமல் அழுகிறாள். மீண்டும், வீடுநோக்கிச் செல்கிறாள். அவ்வேளையில் இன்னுமொரு ஆணைச் சந்திக்கிறாள். அவன் அவளை விரும்புகிறான். இவளும் அவன் அன்புக்கு கட்டுப்படுகிறாள். இருவரும் சிறு அறையொன்றை வாடகைக்கு எடுத்து வசிக்கின்றனர். அவனுக்கு சுவீப் மூலம் பணம் கிடைக்க அவன் அவளை புறக்கணிக்க ஆரம்பிக்கிறான். வேறொரு திருமணம் முடித்த அவன் இவளை விவாகரத்து செய்கிறான். மீண்டுமொருமுறை அவள் ஏமாற்றப்படுகிறாள்.

இச்சந்தர்ப்பத்தில் மீண்டும் ஒருவனை சந்திக்கிறாள். இவன், தன்வீட்டார் சீதனத்துடன் பார்க்கும் பெண்ணை வேண்டாம் எனக் கூறி, இவளது வாழ்க்கைக்கு உரம் ஊட்டுகிறான். கூலிவேலை செய்து வாழும் வாழ்க்கை பலபிரச்சினைகள் ஊடே மகிழ்ச்சியாய் கழிகிறது. பிள்ளையும் பிறக்கிறது. ஆனால் இவளது துரதிர்ஷ்டம் அவன் விபத்தொன்றில் இறந்து விடுகிறான். இவளுக்கு மீண்டும் நெருக்கடி வருகிறது. இப்பாத்திரம் மட்டுமே ஆண்கள் அனைவரும் கெட்டவர்கள் அல்ல என்பதைக் குறிப்பதாக இருந்தது. இவனைத் தவிர, இவள் சந்திக்கும் ஒவ்வொருவரும் இவளை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்துவதற்கு மட்டுமே விரும்புகின்றனர். இப்பொழுது இவள் பிரபல்யமான ஒரு விபச்சாரி. சமூகத்தில் உயர் அந்தஸ்த்தில் இருப்பவர் என கூறப்படுகிறவர்கள் முதல், கீழ்தட்டு ஆண்கள் வரை இவளுக்கு தொடர்பு இருக்கின்றது.



அயோமா.

இவளது கடைசிக்காலத்தில் நோய்வாய்ப்பட்டு ஒரு சேரியில் வாழ்கிறாள். இவளை ஒரு எழுத்தாளர் சந்தித்து, இவளது கதையை ''அயோமா'' என்ற பெயரில் தொடர் நாவலாக பத்திரிகை ஒன்றில் எழுதுகிறார். ஆனால் அவருக்கு எப்படி கதையை முடிப்பது என்று தெரியவில்லை. ஆதலால் அவள் நோய்வாய்ப்பட்டு அக்குடிசையில் இறந்து போக குப்பை லொரி ஒன்றில் இவளது உடல் எடுத்துச் செல்லப்பட்டதாக முடிக்கிறார்.

இப்படி முடிக்கப்பட்டதை அறிந்த இவள் அவரிடம் கேட்கிறாள்.. ''கதையில் ஏன் என்னைக்கொன்றீர்கள்? நான் இன்னும் வாழ்ந்து கொண்டு இருக்கிறேன்.''

படம் முடிகிறது.

பாரதி..

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## மட்டக்களப்பு:

## கூத்துக்களின் அரங்கியற் பரிணாமங்கள் ஆய்வும் நிகழ்வும் — சில குறிப்புகள்



நாட்டார் இலக்கியங்கள், நாட்டார் கலைகள் பற்றிய ஆய்வுகள் இன்று சர்வதேச ரீதியில் முக்கியத்துவமடைந்து வருகின்றன. ஆயினும், சர்வதேச அரங்கில் முக்கியத்துவம் பெற்றுவருகின்ற அளவிற்கு இலங்கை - இந்தியா முதலிய நாடுகளில் தூரநோக்குடன் இவற்றில் கவனம் செலுத்தப்படவில்லை எனலாம். மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் பெரும்பான்மையானவை பக்கச் சார்பு அல்லது மொழிப்பற்று, இனப்பற்றினடிப்படையினிலேயே காணப்படுகின்றன. நாட்டாரியல் ஆய்வுகளை நாட்டாரியல் தன்மையுடன் பார்க்காது செந்நெறி இலக்கிய அந்தஸ்து கொடுக்க சில ஆய்வாளர்கள் முற்படுகின்றனர். இவ்வடிப்படைக் கருத்துடன், அண்மையில் மட்டக்களப்பு சுவாமி விபுலாநந்த இசைநடனக் கல்லூரியில் மூன்று நாட்கள் நடைபெற்ற **"மட்டக்களப்புக் கூத்துக்களின் அரங்கியற் பரிணாமங்கள்"** (ஆய்வும் நிகழ்வும்) கருத்தரங்கு பற்றிய சில குறிப்புக்களை தரலாம் எனத் தோன்றுகிறது.

இக்கருத்தரங்கு முன்புகாணப்பட்ட மட்டக்களப்பு ஆய்வுப்பரப்பில் இருந்து சற்று வித்தியாசமான போக்கைக் காட்டியுள்ளது. மட்டக்களப்பு நாட்டுக்கூத்துக்களின் தோற்றம், அதன் கடந்தகாலப் போக்கு கூத்தின் எதிர்காலம் ஆகிய விடயங்கள் கருத்தரங்கின் தொனிப்பொருளாக அமைந்தன எனலாம்.

முதல் நாள் (95-டிசெ.-29) நிகழ்வில் இரு அம்சங்கள் இடம்பெற்றன. மதிய போசனம் வரை ஆய்வுக்கட்டுரைகள் வாசிக்கப்பட்டன. அதாவது மட்டக்களப்பின் கூத்துவகைகளான பறைமேளக்கூத்து, மகுடிக்கூத்து, வடமோடிக்கூத்து, தென்மோடிக்கூத்து, கூத்துக்களில் நடிப்புக்கலை, ஒப்பனைக்கலை முதலியன பற்றி கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத்துறை இறுதிவருட மாணவர்களான சிவரெட்ணம், சுதாகரன், அன்பழகன், வனிதா மற்ற ஆய்வாளர்களான அன்புமணி, தேனுரான் முதலியவர்கள் கட்டுரைகள் சமர்ப்பித்தனர். இவற்றின் மூலம் கூத்துக்களின் மேலோட்டமான விடயங்களை அறிய முடிந்தது. உண்மையில் இவை சுருக்கமான ஆய்வுகளாகக் காணப்பட்டாலும் தெளிவானவையாகக் காணப்பட்டன.

மாலை நிகழ்வில் மேற்குறிப்பிட்ட மட்டக்களப்புக்கூத்துக்கள் யாவும், சுருக்கமாக ஆடிக்காட்டப்பட்டன. சகல கூத்துக்களையும் ஒரே மேடையில் குறுகிய நேரத்தில் பார்க்கும் அரிய வாய்ப்பு சபையோருக்கு கிடைத்தது ஒரு வரப்பிரசாதமாகும். காரணம் கருத்தரங்கில் பலர் வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள். ஆகையால் அது இன்னும் காத்திரமான விடயமாக அமைந்தது.

பிரதம உரை ஆற்ற இருந்த யாழ் பல்கலைக்கழக நுண்கலைத்துறைப் பேராசிரியர் கா. சிவத்தம்பி தனது உடல்நிலையையும், நாட்டின் பொதுநிலையையும் கருத்திற்கொண்டு சமூகமளிக்கவில்லையாயினும் காத்திரமான ஆய்வுரையொன்றினை அனுப்பியிருந்தார். அது பல்வேறு சிந்தனைகளையும் அச்சிந்தனைகள் மூலம் மட்டக்களப்பின் பாரம்பரியக் கலைகள், கூத்துக்கள் பற்றிய புதிய தேடல் தேவையென்பதனையும் வெளிப்படுத்தியிருந்தார். அவரின் ஆய்வுரை யாழ்ப்பாணம் - மட்டக்களப்பு பற்றிய ஒரு ஒப்பீடாக நோக்கப்பட்டிருந்தது. (யார் இந்த யாழ்ப்பாணத்தான் என்பது போன்றதான ஒரு ஆய்வாக இது இருந்தது) ஆகவே முதல்நாள் அமர்வு இந்தக்கருத்தரங்கின் தலைப்பின் ஒரு பகுதியினைப் பூர்த்தி செய்தது போல் அமைந்தது.

இரண்டாம் நாள் (95.டிசெ.30) நிகழ்வு ஆய்வாகவே அமைந்தது. இவ்வாய்வுகள் யாவும் கிழக்குப்பல்கலைக்கழக விரிவுரையாளர்களான கலாநிதி சி. மௌனகுரு, பாலகுமார், ஜெயசங்கர் ஆகியோரால் வாசிக்கப்பட்டன. **'மட்டக்களப்பு கூத்தின் ஆய்வுச் சிக்கல்கள்"** எனும் தலைப்பில் **சி. மௌனகுரு** ஆய்வுரை வழங்கினார். அவரின் உரையில் மட்டக்களப்புக் கூத்துப் பற்றிய ஆய்வானது ஐந்து படிமுறை வளர்ச்சி நிலைகளில் சென்றுள்ளது என்றார். குறிப்பாக

1. 1950களில் அறிமுக நிலை
2. 1960களில் விவரண நிலை
3. 1970களில் ஆய்வுப் பொருளாக கொள்ளும் நிலை
4. 1980களில் பிரதான ஆய்வுப்பொருளாக கொள்ளும் நிலை
5. 1990களில் நுண் ஆய்வுக்கு உட்படும் நிலை.

எனக் கோடிட்டுக்காட்டி, இத்தகைய ஆய்வுகளை மேற்கொள்கையில் ஏற்படும் சிக்கல்களை பன்னிரண்டு வகையாகக் காட்டி ஆய்வுரை நிகழ்த்தினார். இதைவிட இன்னும் சிக்கல்கள் ஆய்வு மேற்கொள்ளப்படும் போது ஏற்படலாம் எனவும் கூறினார். உண்மையில் இவ்வாய்வுரையானது எதிர்காலத்தில் மட்டக்களப்புக் கூத்துகள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்பவர்களுக்கு இவற்றைத் தீர்த்து அல்லது சிக்கல்களுக்கு தீர்வு கண்டு காத்திரமான ஆய்வுகளை மேற்கொள்ள வழிசமைக்கும் எனலாம். அந்த வகையில் இவரின் ஆய்வுரையானது மிகவும் பயனுள்ளதாக அமைந்தது.

**ஜெயசங்கர் "மட்டக்களப்புக் கூத்துக்களின் அமைப்பும் அதன் அழகியல் அம்சங்களும்"** எனும் தலைப்பில் ஆய்வுரை நிகழ்த்தினார். இவரின் ஆய்வில் வடமோடி, தென்மோடிக் கூத்துக்களில் அழகியல் அம்சங்களையே கருத்திற்கொண்டாரே தவிர முழுமையான சகல கூத்துக்களையும் தனதாய்வில் காட்டவில்லை. சகல கூத்துக்களையும் ஆய்வுக்கு உட்படுத்தியிருந்தால் அது காத்திரமானதாக அமைந்திருக்கும்.

**பாலசுகுமார் "தமிழக இலங்கைக் கூத்துக்களும் மட்டக்களப்புக் கூத்துக்களும்"** எனும் தலைப்பில் ஆய்வுரை ஆற்றினார். உண்மையில் இது ஒப்பியல் ஆய்வாக இருந்த போதும், தனியே அதன் அமைப்பும், தன்மையும் ஒப்பனையுமே சுட்டிக்காட்டப்பட்டது. இவற்றோடு தாளக்கட்டு, ஆட்டவகைகள், பாடல் ஒப்பீடு என்பனவும் ஆய்வில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்குமாயின், சிறப்பாக அமைந்திருக்கும். ஆயினும் இக்கட்டுரை பல புதிய தேடல்களுக்கும் புதிய பரிமாணத்தோடு கூத்துக்கலையை நோக்கவும் வழிசமைத்துள்ளதெனலாம்.

மூன்றாம் நாள் (95 . டிசெ. 31) நிகழ்வின் தலைமையுரையில் சித்திரலேகா மௌனகுரு அவர்கள் "கூத்து எப்படி வந்தது? எங்கிருந்து வந்தது? எது முந்தியது? எது பிந்தியது? முதலிய விவாதங்களில் இறங்குவதை விட அதனை ஒருசிந்தனை பூர்வமான ஆய்வாகவும், சர்வதேசப் பார்வை கொண்டதாகவும் நகர்த்திச் செல்லல் நன்று. அதேவேளையில் இதனை எவ்வாறு எதிர்காலத்தில் பேணிப்பாதுகாப்பது என்பதனைப் பற்றியும் நாம் சிந்தித்தல் வேண்டும்" எனக் குறிப்பிட்டார்.

அன்று **சி. மௌனகுரு "ஈழத்து வளர்ச்சியில் மட்டக்களப்புக் கூத்தின் ஸ்தானமும் அதன் மீள்கண்டுபிடிப்பும்"** எனும் தலைப்பில் கருத்துரை வழங்கினார். இது வரலாற்று நோக்கில் அணுகப்பட்டிருக்கிறது. மீள்கண்டுபிடிப்பு எனும் போது பேராசிரியர், சு. வித்தியானந்தனின் பங்களிப்பு நினைவுகூரப்பட்டது. **வெ. தவராஜாவின் "கூத்தின் நவீனவாக்கமும் 1970 - 1990 வரை மட்டக்களப்புக் கூத்துக்களின் நவீன நாடகத்தில் இடம் பெற்றமையும்"** எனும் தலைப்பிலான கருத்துரை பயனுள்ளதாக அமைந்தாலும் அவரால் காட்டப்பட்ட நவீன நாடகங்கள் யாழ்ப்பாணத்தில் அல்லது வேறு மாவட்டங்களில் தயாரிக்கப்பட்டவையாகவும் மேடையேற்றப்பட்டவையுமாகவே இருந்தன. ஏன் மட்டக்களப்பில் நவீன நாடகம் வளர்ச்சி பெறவில்லை என்பதற்கு அவரின் ஆய்வுரையில் தகவல் இல்லை. மட்டக்களப்பில் பாடசாலை நாடகங்களைக் குறிப்பிட்டபோதும் அதுவும் முழுமையானதாக அமையவில்லை. எனவே அது தகவல் சேகரிப்பில் உள்ள குறைபாடு என்றே எண்ணத் தோன்றுகிறது. ஆகவே கூத்துக்கள் நவீன நாடகத்தில் இடம்பெற வேண்டில் அண்ணாவிமார்களின் ஏக போகச் சொத்தாக இருக்கும் கூத்துக்கள் சகல தரப்பினரையும் சென்றடைய வேண்டும்.

***"மட்டக்களப்புக் கூத்துகளும் புதிய அரங்கை நோக்கிய பயணமும்"*** எனும் தலைப்பில் சிதம்பரநாதன், ஸ்ரீகணேசன் ஆகியோர் உரை நிகழ்த்தவிருந்த போதும் அவர்கள் வராமையினால் அது கலந்துரையாடலாக செய்யப்பட்டது. பாலசுகுமார், வெ. தவராஜா, செ.யோகராஜா, லோகநாதன், ஜெயசங்கர் முதலியோர் பங்கெடுத்தனர். இவர்களினால் எவ்வாறு புதிய அரங்கை நோக்கிச் செல்லலாம் எனக் கருத்துக்கள் வழங்கப்பட்டன. அவை பயனுள்ளவையாக அமைந்ததோடு எதிர்காலத்தில் அரங்கு பற்றிய புதிய சிந்தனைகளையும் புதிய அரங்கினைத் தேடிச் செல்லவும் வழிகாட்டியாக அமைந்தது.

மூன்று நாட்களிலும் இடம் பெற்ற சபையோர் கருத்துக்களை நோக்கும் போது அவையும் புதிய தேடல்களுக்கும் அதன் வழி சிந்திக்கவும் பயனுள்ளதாக அமைந்தன. குறிப்பாக சித்திரலேகா மௌனகுருவின் 'கூத்துக்களில் பெண்களின் நிலை அல்லது பங்களிப்பு என்ன? என்பதும், கமலநாதனின் கூத்தினை நவீன அரங்கு நோக்கி நகர்த்தும்போது பார்வையாளன் பங்குபற்றுதல் எவ்வளவுதூரம் சாத்தியமானது என்பதும், தவராஜாவின் மட்டக்களப்பிற்கென ஒரு மரபு ரீதியான இசை வடிவத்தினையும், பொதுவான கூத்து வடிவத்தினையும் பொது வைபவங்களில் நிகழ்த்தினால் என்னவென்

→15

சு. ஜெயச்சந்திரன் - கிழக்குப் பல்கலைக்கழகம்

## தெரு நாடகங்களின் நிகழ்கால உருவம்?

தொலைக்காட்சி, சினிமா, வானொலி போன்ற தொழில்நுட்பத்தை முதன்மையாகக் கொண்ட தொடர்பூடகங்கள், மக்கள் மத்தியில் மக்களின் ரசனை அறிந்து அவ்விதத்திற்கேற்ப நிகழ்ச்சிகளை வழங்கி வருகின்றன. குறிப்பாக தனியார் தொலைக்காட்சி நிலையங்களும், சிரச போன்ற தனியார் வானொலி நிலையங்களும் இக்காரியத்தை செவ்வனே செய்து வருகின்றன.

இப்பரிணாமங்களின் முன்னால், இலங்கை மக்களுக்கே உரித்தான சம்பிரதாய பூர்வமான நாடகங்கள், நாட்டியக் கலைகள் என்பன பின்தள்ளப்படுகின்றன. குறிப்பாக தொழில்நுட்பம் அற்ற கலை உருப்படிகள் இதற்குள் அடங்கும். மனித உணர்வுகள், சக்திகள் என்பவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் நடனங்கள் சித்திரக்கலைகள் என்பன இதனால் பாரிய பிரச்சினைக்குள்ளாகியுள்ளன.

இவ்வாறான தொடர்பூடக வளர்ச்சிக்கு முன்னால் திறந்த வெளி நாடகங்கள் அல்லது தெருநாடகங்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளுமா? என்பது ஓர் புதுமையான கேள்வி?

தெரு நாடகங்கள் என்பது தொழில்நுட்ப முறைகள் குறைந்தளவில் பாவிக்கப்படும், மனித அபிநயம், சலனம், குரல்வளம், உச்சரிப்பு, நடிப்பு என்பன மனித உடல் என்ற உபகரணம் மூலம் வெளிப்படுத்தப்படும் ஓர் தொடர்பூடகம். இவ்வாறான இயல்புகள் கொண்ட, ஓர் கலை நிகழ்கால ரசிகர்களின் மனதில் நீங்கா இடம் பிடிக்க என்ன செய்ய வேண்டும்?

நாம் இப்படி எண்ணத்தோன்றுவது சிற்சில தெருநாடக ரசிகர்களின் கருத்துக்களின் மூலமாகும்.

"இப்பொழுது தெருநாடகங்கள் பார்க்க முடியாத அளவுக்கு வெறுப்பூட்டுகின்றன"

"ஒன்றையே திருப்பித்திருப்பி கூறுகின்றார்கள்"

"மோசமான அரசியல் உருவம் மூலம் மக்கள் மனதை கிலிகொள்ளச் செய்கின்றனர்"

"ஒரு நாடகம் மூலம் சர்வதேச அரசியலை வெளிக்காட்ட முனைகின்றனர்."

"இது பழங்கால அமைப்பு"

இவ்வாறான குற்றச்சாட்டுகள் யாவும், நிகழ்கால இளம் ரசிகர்களினால் முன்வைக்கப்பட்டவை. அதே போல் பொதுமக்கள் கூட தெரு நாடகங்களை இரண்டு மூன்று முறைகூட திரும்பிப்பார்ப்பதில்லை. ஆனால் இதன் மூலம் நாம் தெருநாடகங்கள் யாவும், நிகழ்கால விஞ்ஞான தொடர்பூடக வளர்ச்சியினுள் நசுங்கிப் போயுள்ளன என்று கூறமுடியாத நிலை இங்கில்லை. (பி.கு:- நர்த்தனம், சங்கீதம், ஆகியவற்றுக்கு முன்னால் வீதி நாடகங்கள் ஓரளவு முன்னேறியுள்ளன என்றே கூறவேண்டும்.)

இலங்கையின் தெரு நாடக சம்பிரதாயம் காமினி ஹத்தட்டுவேகம மூலம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இவரின் இச்செயல் காரணமாக இலங்கை தெரு நாடகங்களுக்கு குறிப்பிடத்தக்க ஓர் இடம் கிடைக்கப்பெற்றது. இது பாராட்டுதலுக்குரிய செயலாகும். அது வரை மக்கள் தொடர்பூடகமாக திகழ்ந்த நான்கு புறங்களிலும் சுவர்களால் மூடப்பட்ட மேடை நாடகங்கள் பின்னர் தெரு நாடகங்களாக அனைத்து மக்களும் ரசிக்கக் கூடிய கலை உருப்படியாக பரிணாமம் அடைந்தது. ஆனால் இந்த முதல் வளர்ச்சி பின்னர் படிப்படியாக வீழ்ச்சியடையத் தொடங்கிவிட்டது. வெவ்வேறுபட்ட தெரு நாடகக் குழுக்கள் உருவானாலும், ஒருவிடயம் மட்டுமே நாடகக் கருவாக சில சமயங்களில் காமினியின் முறை அல்லது பாணியின் அடிப்படையிலேயே பிற்கால தெரு நாடகங்கள் அமைக்கப்பட்டன. மேடை நாடகங்கள் பெருமளவு மாற்றத்தைக் கொண்டிருந்தாலும் தெரு நாடகங்களில் இந்நிலை மாறவில்லை.



நிகழ்காலத்தில் தெரு நாடகங்களின் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைவது, தயாரிப்பு மறுமலர்ச்சியாகும். தற்காலத்தின் தேவை நிமித்தமான கதையமைப்பும் ஆகும். (இவ்வாறு கூறுவது, ஹிந்திப்பாடல்களைப் புகுத்தவேண்டும். அவ்வாறான கதையமைப்பை புகுத்த வேண்டும் என்ற அடிப்டையில் அல்ல.)

இக்காரணத்தை காரியமாக்கிக்கொள்ள தயாரிப்பாளர்கள், விவேகமும், படைப்பாற்றலும், தைரியமும் உடையவர்களாக இருத்தல் வேண்டும். அதற்கான விருப்பம் அல்லது நோக்கம் இன்றைய தயாரிப்பாளர்களிடம் இல்லை என்றே கூறவேண்டும்.

தெருநாடகக்கலைஞன் என்பவரது கடமை தம்மை முற்போக்குவாதி என்று காட்டிக் கொள்வது அல்ல. தம்மை ஓர் சிறந்த நடிகன் என்ற அடையாளத்தின் மூலம், மக்களை தன்பால் ஈர்த்துக்கொள்வதே. ஓர் கலைஞன் செய்ய வேண்டியது இதனையேயன்றி வேறில்லை.

இல்லாவிட்டால் நாம் வழமையாக செய்வது போல் மக்கள், மத்தியில் சென்று, மக்களுக்கு கலைச்சேவை செய்கின்றேன் எனக்கூறிக் கொண்டு, மக்களின் தலைகளில் அமர்ந்திருப்பதாகும். தெரு நாடகங்கள் இதற்காகவா தேவைப்படுகின்றன? என்ற கேள்வி தெரு நாடக கலைஞர்கள் ஒவ்வொருவரினதும் மனதினுள் எழும்ப வேண்டிய வினாவாகும்.

மூலம்: மஹுபந்து வித்தியாபதி
நன்றி: ராவய

தமிழில்: ரத்னா.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலங்கை பாராளுமன்ற அரசியலில் பெண்கள் — 19

# அரசியல் பிழைப்புக்காக பெண்களைப் பயன்படுத்தி வந்த தேசியக் கட்சிகள்!

இலங்கையில் சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டதிலிருந்து இதுவரைக்கும் (10 வது பாராளுமன்றம் வரை) 40பெண்கள் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்துள்ளனர்.

இந்த நாற்பது பேரில் அதிகளவு பெண்களை பிரதிநிதித்துப்படுத்திய கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி (அல்லது அதன் தலைமையிலான கூட்டு) யாகும். 40பேரில் 15பெண்களை அது பிரதிநிதித்துவப்படுத்தியிருக்கிற அதே நேரம், 14 பெண்களை ஐக்கியதேசியக்கட்சி பிரதிநிதித்துவப்படுத்தியிருக்கிறது. இடதுசாரிக்கட்சிகளைச் சேர்ந்த 8பெண்கள் இதுவரை அங்கம் வகித்துள்ளனர்.

இனரீதியில் எடுத்துக்கொண்டால் நாற்பது பெண்களில் மூன்று தமிழ்ப் பெண்கள் (நேசம் சரவணமுத்து, ரங்கநாயகி பத்மநாதன், ராஜமனோகரி புலேந்திரன்) பிரதிநிதித்துவம் வகித்துள்ளனர். ஒரு மேலைநாட்டுப் பெண் (டொரின் விக்கிரமசிங்க) அங்கம் வகித்துள்ளதுடன் ஏனைய 36 சிங்கள சமூகத்ததைச் சேர்ந்த பெண்கள் அங்கம் வகித்துள்ளனர். முஸ்லிம், மலையக, பறங்கி சமூகங்களைச் சேர்ந்த ஒரு பெண்ணும் இது வரை இலங்கை பராளுமன்த்தில் அங்கம் வகித்ததில்லை.

இதே வேளை இலங்கையிலுள்ள 22 தேர்தல் மாவட்டங்களில் 7 மாவட்டங்களிலிருந்தும் இதுவரை பெண்கள் எவரும் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டதில்லை.

அவை மாத்தளை, யாழ்ப்பாணம், அம்பாறை, திருகோணமலை, புத்தளம், அனுராதபுரம், பொலன்நறுவை என்பனவே.

1977இல் அமைக்கப்பட்ட 8 வது பாராளுமன்றத்திலேயே அதிக பெண் நியமன உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதிக பெண்கள் வேட்பாளர்களாக போட்டியிட்டதும் அதிக பெண்கள் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டதும் 9வது பாராளுமன்றத்திலேயே. 1989இல் நடந்த 9வது பாராளுமன்றத் தேர்தலின் போது மொத்தம் 57 பெண்கள் போட்டியிட்டதுடன் 12பேர் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கவும் செய்தனர்.

இதுவரை பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித்தலைவர் பதவிக்கு நியமிக்கப்பட்ட ஒரே பெண் சிறிமாவோ பண்டாரநாயக்கா மட்டுமே. இவர் 6வது (1965-1970) பாராளுமன்றத்திலும், 9வது (1989-1994) பாராளுமன்றத்தின் போதும் எதிர்க்கட்சி தலைவியாக செயல்பட்டுள்ளார்.

இதுவரைகாலம் சபாநாயகர் மற்றும் பிரதி சபாநாயகர் ஆகிய பதவிகளுக்கு எந்த பெண்ணும் நியமிக்கப்படவில்லை.

**பெண்களும் அரசியற் கட்சிகளும்**

இலங்கையின் பாராளுமன்ற அரசியலில் பெண்களின் பிரவேசத்தின் ஆரம்பகாலங்களில் இடதுசாரி இயக்கங்களைச் சேர்ந்த பெண்களே பெரும்பாலும் அரசியலுக்குள் பிரவேசித்தனர். இவர்கள் அன்று, இடதுசாரி இயக்கங்களின் அரசியல் போராட்டங்கள் மற்றும் வேறு பல அரசியல் ஈடுபாடுகளினூடாக பிரவேசித்தனர். மார்க்ஸீய கருத்துக்களினால் உந்தப்பட்டு அந்த நோக்கிலேயே அவர்கள் சகல பிரச்சினைகளையும் இனங்காண முயன்றனர். எனவே பெரும்பாலும் முழுமையாக உணர்வுப்பூர்வமாக தங்களது அரசியல் கடமைகளையாற்றினர். புளொரன்ஸ் சேனநாயக்க இலங்கையின் முதலாவது இடதுசாரி இயக்க பெண் பாராளுமன்ற உறுப்பினராவார். இவரைவிட குசும் சிறிகுணவர்தன, டொரின் விக்கிரமசிங்க, விவியன் குணவர்தன, சோமா விக்கிரமநாயக்க போன்ற பெண் இடதுசாரிகள் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்தனர்.

இடதுசாரி கட்சிகளைச் சேர்ந்த பெண்களின் அரசியல் பிரவேசத்திற்கு ***'ஆண் உறவு முறைச் செல்வாக்கு'*** ஒரு ஊக்கியாக இருந்த போதும், அது மட்டுமே காரணமாக இருந்திருக்கவில்லை. ஏனைய தேசிய கட்சிகளான முதலாளித்துவ கட்சிகளைச் சேர்ந்த பெரும்பாலான பெண்கள் 'ஆண் உறவு முறைச் செல்வாக்கை' அதிகளவுயே பயன்டுத்தி பிரவேசித்திருந்தனர். இன்னும் விளக்கமாக சொல்வதென்றால் ஐ.தே.க., ஸ்ரீ.ல.சு.க. போன்ற கட்சிகளைச் சார்ந்த பெண்கள் பலரது பிரவேசமானது 'ஆண் உறவு முறைச்செல்வாக்கைப்' பயன்படுத்தி திடீரென்று அரசியலில் குதித்திருந்தனர்.

இதேவேளை காலப்போக்கில் ஏற்பட்ட இடதுசாரி இயக்கங்களின் உடைவுகள், முதலாளித்துவ கட்சிகளுடனான கூட்டுகள், பாராளுமன்றவாதத்தின் மீது ஏற்பட்ட பிடிப்பு, இருப்பு மற்றும் இன்னோரன்ன காரணங்களினால் இடதுசாரி இயக்கங்களின் அரசியல் வேலைகளில் ஏற்பட்ட மந்தப்போக்கு, சோர்வு என்பவற்றின் ஓட்டத்தினூடே பெண்களின் அரசியல் பங்களிப்பும் இயல்பாகவே இல்லாது போயின. குறிப்பாக 70களின் இறுதியிலிருந்து இடதுசாரி பெண்களின் பாராளுமன்ற பிரதிநிதித்துவம், இல்லாது போயின. சந்திரிகா குமாரணதுங்க, ஐக்கிய சோஷலிஷ முன்னணியின் முக்கிய உறுப்பினராக இருந்திருந்தபோதும் பிற்காலங்களில் அவர் தன்னை ஒரு மார்க்ஸிஸ்டாக அடையாளம் காட்ட முனைந்த போதும் சந்திரிகாவின் ஆட்சியை விமர்சனத்துக்குள்ளாக்கும் அரசியல் விமர்சகர்கள் அவரையொரு முதலாளித்துவ வர்க்கத்தின் பிரதிநிதியாகவே கொள்

**என்.சரவணன்**

கின்றனர்.

1970களில் ஒரு புறம் பாரம்பரிய இடதுசாரிகளின் தேய்வுக்கூடாக மொத்த பாராளுமன்ற இடதுசாரி பிரதிநிதித்துவத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுக்கொண்டிருந்த அதே சமயம் மக்கள் விடுதலை முன்னணிக்கூடாக தீவிர இடதுசாரி நடவடிக்கைகளில் பெண்களின் பங்களிப்பு அதிகரித்துக் கொண்டிருந்தது எனலாம். இவர்கள் பாராளுமன்ற அரசியலை தமது இருப்பாக்கிக்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எவ்வாறிருந்தபோதும் பெண்நிலைவாதக்கருத்துக்களை முன்னெடுக்கக்கூடிய சக்திகள் என எதிர்பார்க்கப்பட்ட இவ் இடதுசாரிகட்சிகள் பெண்களது உரிமைகளுக்காக அல்லது பெண்ணிலைவாதம் தொடர்பாக ஆக்கபூர்வமான அக்கறைக் காட்டவில்லை என்றே கணிக்க முடிகிறது.

இதேவேளை தேசியக்கட்சிகள் தமது கட்சிகளைச் சேர்ந்த செல்வாக்குப் படைத்தவர்களின் இறப்பினைப் பயன்படுத்தி இறந்தவர்களின் கிட்டிய உறவுமுறைசார்ந்த பெண்ணின் மீதான அனுதாபத்தைப் பயன்படுத்துவதன் மூலமாகவே பெரும்பாலான பெண்களைப் பாராளுமன்றத்துக்கு பிரவேசிக்கச் செய்த தன்மையை காணமுடிகிறது.

இத் தேசியக்கட்சிக்களைச் சேர்ந்த பாராளுமன்ற பெண் உறுப்பினர்கள் கூட தேசிய அரசியலோடு சேர்ந்து இழுபட்டு போகிற பண்பும் பொதுவாக நிலைத்து வருகிறது. குறிப்பாகச் சொல்லப்போனால் ஆக்கப்படும் சட்டமூலங்கள் அனைத்தும் ஆண்நிலைப்பட்டவை என்பது அறிந்ததே. இச்சட்ட மூலங்கள் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்படும் போதுகூட அங்கு பெரும்பான்மை ஆண்களால் நிறைவேற்றப்படுகிறது. இதே மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் போது கூட பெரும்பான்மை ஆண்களால் நிறைவேற்றப்பட்டு விடுகிறது. ஆனால் இச்சட்டமூலங்கள் ஒவ்வொன்றிலும் பெண்களது நலன்தொடர்பாக ஆராய்வது விவாதிப்பது என்பது, பெண் பிரதிநிதிகளிடம் மிகமிகக் குறைவு அல்லது இல்லையென்றே சொல்லலாம்.

எனவேதான் பெண் உறுப்பினர்கள் பெண்களது நலன்களுக்காக இயங்குவதை விட தேசிய அரசியலோடு இழுபட்டு போகிறார்கள் என்பதை கூறக்கூடியதாக உள்ளது.

தேர்தல் விஞ்ஞாபனங்களில் பெண்களது நலன் தொடர்பான விடயங்களிலும் அக்கறைக் காட்டப்பட்டது 1977 இலேயே. சர்வதேச மகளிர் ஆண்டான 1975ம் ஆண்டு முன்வைக்கப்பட்ட பெண்களின் கோரிக்கைகளைத் தொடர்ந்தே 1977இல் ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பெண்களது நலன் தொடர்பான விடயங்களும் உட்படுத்தப்பட்டது.

இதுவரை முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட எந்த முஸ்லிம் கட்சிகளும் முஸ்லிம் பெண்களை தங்களது கட்சிகளது வேட்பாளர்களாகக் கூட இருத்தியதில்லை. முஸ்லிம் சமூகத்தின் தரப்பிலிருந்து இஸ்லாமிய மத ஆசார முறைகள், இதற்கு காரணமாக காட்டப்படுகின்ற போக்கு நடைமுறையிலுள்ளது என்கின்ற போதும் முஸ்லிம் நாடுகளில் பெண்கள் ஆட்சியதிகாரம் கூட ஏறிய சந்தர்ப்பங்களை, விமர்சகர்கள் இதற்கு பதிலளிக்குமுகமாக முன்வைக்கிறார்கள்.

தமிழ்க் கட்சிகள் இயக்கங்கள் கூட தமது ஆண்ணிலைப்பட்ட கருத்தியல் மனோபாவம் காரணமாகவும், அக்கறையின்மையாலும் பெண் பிரதிநிதித்துவம் தொடர்பாக ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொண்டதில்லை என்பதை குறிப்பிடலாம்.

**1947 — 1994 வரையான பெண் வேட்பாளர்கள் மற்றும் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட பெண்களது விகிதாசாரம்**

| | போட்டி | | | தெரிவு | | |
|---|---|---|---|---|---|---|
| தேர்தல் | மொத்த வேட்பாளர்கள் | பெண் வேட்பாளர்கள் | பெண்களின் வீதம் | மொத்தத் தெரிவு | தெரிவு செய்யப் பட்ட பெண்கள் | பெண்களின் வீதம் |
| 1947 | 361 | 3 | 0.8 | 95 | 1 | 1.1 |
| 1952 | 305 | 9 | 3.0 | 95 | 2 | 2.1 |
| 1956 | 249 | 5 | 2.0 | 95 | 3 | 3.2 |
| 1960 மார்ச் | 899 | 16 | 1.8 | 151 | 3 | 2.0 |
| 1960 யூலை | 393 | 5 | 1.3 | 151 | 2 | 1.3 |
| 1965 | 495 | 12 | 2.4 | 151 | 4 | 2.6 |
| 1970 | 441 | 14 | 3.2 | 151 | 6 | 4.0 |
| 1977 | 756 | 14 | 1.9 | 168 | 4 | 2.4 |
| *1989 | 1396 | 57 | 4.0 | 225 | 12 | 5.33 |
| *1994 | 1440 | 55 | 3.8 | 225 | 12 | 5.33 |

(தேர்தல் முடிவுகளிலிருந்து தயாரிக்கப்பட்டது)

* 1989 இல்தெரிவு செய்யப்பட்ட பெண்களில் ஒருவர். தேசியப்பட்டியலின் மூலம் நியமிக்கப்பட்டவர் என்பதை நினைவிற் கொள்க.

* 1994 இல் தெரிவு செய்யப்பட்ட 12 பெண்களில் இருவர். தேசியப்பட்டியலின் மூலம் நியமிக்கப்பட்டவர்கள் என்பதை நினைவிற் கொள்க.

**இதுவரை பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட பெண்கள்**

| பாராளுமன்றக் காலப்பகுதி | பெயர் | கட்சி | தொகுதி |
|---|---|---|---|
| 1931.07.07 - 1935.12.07 | எட்லின் மொலமூரே | ---- | ருவன்வெல்ல |
| | *நேசம் சரவணமுத்து | ---- | கொழும்பு வடக்கு |
| 1936.03.17 - 1947.07.04 | நேசம் சரவணமுத்து | ---- | கொழும்பு வடக்கு |
| 1947.10.14 - 1952.04.08 | புளோரன்ஸ் சேனநாயக்க | LSSP | கிரிஎல்ல |
| | *குசும்சிறி குணவர்தன | LSSP | அவிஸ்ஸாவெல்ல |
| | *தமரா குமாரி இலங்கரத்ன | I | கண்டி |
| 1952.06.09 - 1956.02.18 | குசும்சிறி குணவர்தன | VLSSP | அவிஸ்ஸாவெல்ல |
| | டொரின் விக்கிரமசிங்க | CP | அக்குரஸ்ஸ |
| 1956.04.19 - 1959.12.05 | விவியன் குணவர்தன | NLSSP | கொழும்பு வடக்கு |
| | குசும்சிறி குணவர்தன | VLSSP-MEP | கிரிஎல்ல |
| | விமலா விஜயவர்தன | SLFP-MEP | மீரிகம |
| | *குசுமா ராஜரட்ன | SLFP-MEP | வெலிமட |
| 1960.03.30 - 1960.04.23 | விமலா கன்னங்கர | UNP | கலிகமுவ |
| | குசுமா ராஜரட்ன | JVP | ஊவா பரணகம |
| | சோமா விக்கிரமநாயக்க | LSSP | தெஹியோவிட்ட |
| 1960.08.05 - 1964.12.17 | குசுமா ராஜரட்ன | JVP | ஊவா பரணகம |
| | சோமா விக்கிரமநாயக்க | LSSP | தெஹியோவிட்ட |
| | *விவியன் குணவர்தன | LSSP | பொரல்ல |
| 1965.04.05 - 1970.03.25 | சிறிமாவோ பண்டாரநாயக்க | SLFP | அத்தனகல்ல |
| | ஷிவா ஒபேசேகர | SLFP | மீரிகமஸ |
| | விமலா கன்னங்கர | UNP | கலிகமுவ |
| | குசுமா ராஜரட்ன | JVP | ஊவா பரணகம |
| | *லடீஷியா ராஜபக்ஷ | SLFP | தொடங்கஸ்லந்த |
| | *மல்லிகா ரத்வத்த | SLFP | பலங்கொட |
| 1970.07.06 - 1977.05.18 | சிறிமாவோ பண்டாரநாயக்க | SLFP | அத்தனகல்ல |
| | குசலா அபயவர்தன | LSSP | பொரல்ல |
| | விவியன் குணவர்தன | LSSP | தெஹிவளை |
| | தமரா குமாரி இலங்கரத்ன | SLFP | கலகெதர |
| | ஷிவா ஒபேசேகர | SLFP | மீரிகம |
| | மல்லிகா ரத்வத்த | SLFP | பலங்கொட |
| 1977.7.25 - 1988.12.20 | சிறிமாவோ பண்டாரநாயக்க | SLFP | அத்தனகல்ல |
| | விமலா கன்னங்கர | UNP | கலிகமுவ |
| | ரேணுகா ஹேரத் | UNP | வலபனை |
| | அமரா பியசீலி ரத்நாயக்க | UNP | வாரியபொல |
| | *சுனேத்திரா ரணசிங்க | UNP | தெஹிவளை |
| | X ரூபா சிறியாணி டேனியல் | UNP | ஹேவாஹெட்ட |
| | X எல்.எம். விஜயசிறி | UNP | ஹாரிஸ்பத்துவ |
| | X ரங்கநாயகி பத்மநாதன் | UNP | பொத்துவில் |
| | X தயா சேபாலி சேனதீர | UNP | கரன்தெனிய |
| | X கீர்த்திலதா அபயவிக்கிரம | UNP | தெனியாய |
| | X சமந்தா கருணாரத்ன | UNP | ரம்புக்கனை |
| 1989.2.15 - 1994.8.16 | சிறிமாவோ பண்டாரநாயக்க | SLFP | கம்பஹா |
| | சுமித்திரா பிரியாங்கனி அபேவீர | SLFP | களுத்துறை |
| | ஹேமா ரத்னாயக்க | SLFP | பதுளை |
| | குணவதி திசாநாயக்க | SLFP | மொனராகலை |
| | சுனேத்திரா ரணசிங்க | UNP | கொழும்பு |
| | சமந்தா கருணாரத்ன | UNP | கேகாலை |
| | ரேணுகா ஹேரத் | UNP | நுவரேலியா |
| | அமரா பியசீலி ரத்நாயக்க | UNP | குருநாகல் |
| | சுஜாதா தர்மவர்தன | UNP | புத்தளம் |
| | ராஜமனோகரி புலேந்திரன் | UNP | வன்னி |
| | சந்திரா கருணாரத்ன | UNP | பதுளை |
| | X ரூபா சிறியாணி டேனியல் | UNP | தேசியப்பட்டியல் |
| 1994இலிருந்து | ▲ சந்திரிகா குமாரணதுங்க | PA | கம்பஹா |
| | X சிறிமாவோ பண்டாரநாயக்க | PA | தேசியப்பட்டியல் |
| | ஸ்ரீமணி அத்துலத்முதலி | PA | கொழும்பு |
| | சுமேத ஜீ ஜயசேன | PA | மொனராகலை |
| | நிருபமா ராஜபக்ஸ | PA | அம்பாந்தோட்டை |
| | பவித்திரா வன்னியாராச்சி | PA | இரத்தினபுரி |
| | ஹேமா ரத்நாயக்க | PA | பதுளை |
| | சுமித்திரா பிரியாங்கனி அபேவீர | PA | களுத்துறை |
| | ரேணுகா ஹேரத் | UNP | நுவரேலியா |
| | அமரா பியசீலி ரத்நாயக்க | UNP | குருநாகல் |
| | ராஜமனோகரி புலேந்திரன் | UNP | வன்னி |
| | X அமர பத்திரா திசாநாயக்க | UNP | தேசியப்பட்டியல் |

* இடைத்தேர்தலின் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்கள்

X நியமிக்கப்பட்டவர்கள்

▲ திருமதி சந்திரிகா 10வது ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக 1994 ஒக்டோபரில் பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகினார்

மேற்படி அட்டவணையில் JVP என குறிப்பிடப்பட்ட கட்சி "மக்கள் விடுதலை முன்னணி" அல்ல. தேசிய விடுதலை முன்னணியே (Jathika Vimukthi Peramuna) என்பதை கருத்திற் கொள்க.

UNP - United National Party
SLFP - Sri Lanka Freedom Party
MEP - Mahajana Eksath Peramuna
LSSP - Lanka Sama Samaja Party
CP - Communist Party
JVP - Jathika Vimukthi Peramuna
PA - People Alliance

**1947 இலிருந்து 1971 வரை மேற்சபைக்கு நியமிக்கப்பட்ட பெண்கள்**

| | |
|---|---|
| எட்லின் மொலமூரே | (1947) |
| சிசிகுரே | (1947) |
| கிளோடா ஜயசூரிய | (1954) |
| எவ்லின் டி சொய்சா | (1958) |
| சிறிமாவோ பண்டாரநாயக்க | (1960) |
| சீதா செனவிரத்ன | (1967) |

வரும் ...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






## சரிநிகரின் நிலைப்பாடு சரியானதே!

சென்ற சரிநிகர் இதழில் ''வாசகர்களுக்கு ஒரு கடிதம்'' என்றபந்தியில் சரிநிகர் தொடர்பான விமர்சனம் பார்த்தேன். அது என்னை திகைப்பில் ஆழ்த்தியது. விமர்சனத்தை முன் வைத்தவர்கள் தம்மை எத்தளத்தில் நிறுத்தி, எதை நோக்கி முன்வைத்தனரோ தெரியவில்லை?

''மோர்ஜ்'' ஒரு அரச சார்பற்ற அமைப்பு. அதன் பணிகளில் மேலான ஒன்று சரிநிகரை வெளியிடுவதாகும். மோர்ஜின் குறிக்கோள்களைப் பொறுத்தவரையில் அவை சிறப்பானவையே. ஆனால் அக்குறிக்கோள்களை குறிப்பாக குறிக்கோள்கள் 5,6 என்பவை எந்தளவில் வலிமையுடன் செயற்படுகின்றன என்பது கேள்விக்கு உட்படுத்தக் கூடியதே.

வரையப்பட்டிருக்கும் குறிக்கோள்களுடன் சரிநிகர் முரண்பட்டிருக்கிறது என்ற வாதம் சில இடங்களில் பொருந்தக் கூடியதேயாகும். ''அரசாங்கத்தின் சமாதான தீர்வுப் பொதி'' என்பது ஒரு பக்கம் இருட்டையும் மறுபக்கம் வெள்ளையையும் கொண்டமைந்துள்ளது என்பதில் சந்தேகமில்லை. ''வெள்ளை'' நிறத்தைப் பார்த்து ஏமாற வேண்டிய நிலை சரிநிகருக்கும் இருக்க வேண்டும் என்பதில்லை. மக்களை அகதிகளாக்கிக் கொண்டு, அவசர காலச் சட்டத்தை நிலை நிறுத்திக்கொண்டு, இராணுவத்திற்கு ஆட்களைத் திரட்டிக்கொண்டு, சமாதான தீர்வுப் பொதியை சுமந்து நிற்பது என்பது எந்தளவில் சுத்தமானது; சரியானது என்பது ஒரு பக்கமிருக்க தீர்வுத்திட்டம் தமிழ் மக்களின் தாயகத்தை பிளப்பதுடன், தமிழ் மக்களின் செறிவைக் குறைப்பதுடன்; முஸ்லிம் - தமிழ் மக்களின் உறவை அறுக்கும் வகையில்; ''முதுகில் உதைக்கும்'' பாங்கில் உருவாக்கப்பட்டதை எப்படி ஏற்க இயலும்?

உரிமையை சிதைக்கும், வேலி எழுப்பக்கூடிய எந்தத் தீர்வையும் யாராலும் ஏற்க முடியாது. சரிநிகர் மக்களுக்கான குரல் என்றால் பூரணத்துவம் அற்றதை அங்கீகரிக்க வேண்டிய தேவை இல்லை.

இவ்விடத்தில் தான் ''மோர்ஜ்'' உடன் சரிநிகர் முரண்படுகிறது.

ஐந்தாவதாக குறிக்கப்பட்ட விமர்சனம் பிழையானதே. சரிநிகர் ''விகடம்'' சார்பானது அல்ல. ஏனைய பத்திரிகைகளிலிருந்து சரிநிகர் வேறுபட்டு உயர்ந்து நிற்கக் காரணம்; உண்மையினை உள்ளபடி சொல்ல முற்படுவதேயாகும். ஜனநாயகத்துக்கும் சமாதானத்துக்கும் பாடுபடும் தனிநபர்களை ஆதரிக்க வேண்டும். அவர்களுடன் இணைந்து பங்காற்றுவது கூட சிறப்பானதே. இதற்காக அவர்கள் விடும் பிழைகளை விமர்சிப்பதை ''கிண்டல்'' எனக் காண்பது எந்தளவில் நல்லது எனப்படவில்லை. அவ்வாறான சமாதான, ஜனநாயகத்துக்கு பாடுபடும் தனிநபர்கள் சமூகம் சார்ந்த செயற்பாடுகளில் விடும் பிழைகளை சுட்டிக்காட்டுவதை ''கிண்டலடிக்கும் பாணி'' என்று அறிமுகப்படுத்துவார்களாயின் சரிநிகர் கட்டாயம் கிண்டலடிக்கும் பாணியை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

சரிநிகர் தமிழ் மக்களுக்கு புலிகளைத் தவிர வேறுவழி இல்லை என்று கூறியதாக எனக்குப் படவில்லை. ஒருவிதத்தில் அப்படிக் கூறுவது தான் பொருத்தமானதாக இருக்க முடியும் போல, சரிநிகர் புலிகளை விமர்சித்து இருக்கின்றனர். அதன் வலு அதிகமில்லாமல் இருக்கலாம். விமர்சனத்தை முன் வைத்தவர்களுக்கு திருப்திதராமல் இருந்திருக்கலாம். அதற்காக புலிகளின் பிழைகளை நியாயப்படுத்துகிறது என்பது பொய்.

செய்திகள் தெரிவதில் ''திவயின''க்கு நிகரானது என்ற குற்றச்சாட்டு ஏற்க முடியாதது. ''திவயின'' சிங்கள பௌத்த பேரினவாதத்தை வளர்ப்பதும், சிறுபான்மையினரின் சுதந்திரத்தின் மீது துரோகத்தனமான - இழிவான நடவடிக்கைகளை ஊக்குவிப்பதையும் குறிக்கோள்களாக கொண்டுள்ளது. சரிநிகர் தமிழ் வாசகர்களுக்கான ஒரே ஒருமாற்றுப் பத்திரிகையாக வெளிவருகிறது. ஒரு இனம் என்ற வகையில் தமிழ் மக்களின் உரிமை சுதந்திரம், என்பனவற்றைப் பேணுவதற்கு, சிங்கள பௌத்த பேரினவாதத்தின் சூழ்ச்சிகளை தெளிவாய் மக்களுக்கு விளக்கி நிற்பதாய் செய்திகள் தெரிகின்றனவே தவிர தமிழ் இனவாத சார்பு நிலையினை பின்பற்றவில்லை.

ஒருவிதத்தில் வடக்கு - கிழக்கு தமிழர்களின் பிரச்சினைக்கு தரும் அழுத்தம் முஸ்லிம்களுக்கும் குறிப்பாக மலையகத் தமிழருக்கும் குறைவானது என்று கூறமுடியும். சரிநிகரில் மலையகத் தமிழர் பிரச்சினை தொடர்பான பத்திகள் குறைவானதாகும்.

மாற்றுக் கருத்துக்களை உதாசீனம் செய்கிறது என்ற விமரிசனம் எந்தளவு சரியானது என்பது புரியவில்லை. என்னைப் பொறுத்தவரையில் மாற்றுக்கருத்துக்களை மதிக்கின்ற ஒரே ஒரு தமிழ்ப் பத்திரிகையாக சரிநிகரையே குறிப்பிட முடியும். இதனை அனுபவ பூர்வமா அறிந்தே சொல்கிறேன்.

இறுதியாக

மலையக மக்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் தரும்படி மீண்டும் ஒரு முறை வேண்டிக் கொள்கின்றேன். ஹட்டன் பகுதிக்கு ஒரு நிருபரை தெரிவு செய்யும்படி வேண்டிக்கொள்கின்றேன்.

***எம்.எச்.எம்.ஜவ்பர்***
***டிக்கோயா.***

**சரிநிகர் தொடர்பாக எழுந்துள்ள சில விமர்சனங்களை எதிர்கொள்ள வேண்டி. மோர்ஜ் நிறுவனத்தின் உத்தியோக பூர்வ குறிக்கோள்களையும். சரிநிகர் மீது வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களையும் வாசகர்களின் முன் வைத்து அபிப்பிராயங்களைக் கோரியிருந்தோம்.**

**வாசகர்களின் அபிப்பிராயங்கள் வந்து சேர்ந்த வண்ணமுள்ளன. அவ்வாறு வந்த கடிதங்களில் இரண்டு இம்முறை பிரசுரமாகின்றன.**

**வாசகர்கள் தொடர்ந்தும் எழுதுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

**ஆ-ர்**

## மாற்றுக் கருத்துக்களுக்கு களம் சரிநிகரே!

'வாசகர்களுக்கு ஒரு கடிதம்'' பற்றி சரிநிகர் 87ல் வந்த கடிதம் எனக்கு வியப்பளிக்கவில்லை. ராஜன் ஹூல் சரிநிகர் பற்றி பொறுப்பற்ற முறையில் ''கௌண்ட்ட பொய்ன்ற்'' சஞ்சிகைக்கு எழுதிய கடிதத்திற்கு என் பதிலின் பிரதியை உங்களுக்கு அனுப்பியிருந்தேன். அது பிரசுரமாகுமோ தெரியாது. ஆயினும் 'சந்திரிகா அலையில்' அள்ளுண்டு போகுமுன்னமே, சில 'புத்திஜீவிகள்' தமது புலிஎதிர்ப்பையும் தமிழ் மக்களது விடுதலைப்போராட்டத்தையும் குழப்பிக்கொண்டுள்ளனர். விடுதலைப் புலிகளை எதிர்க்கும் மூர்க்கத்தனமான வெறி அரசின் பிழைகளைக் குறைத்தும் மறைத்தும் எழுதவே சிலரைத் தூண்டியுள்ளது. சிங்கள வாசகர்ளுக்குத் தமிழ் மக்களது விடுதலைப் போராட்டம் பற்றி விளக்கும் அக்கறை சிறிதுமின்றி, வெறுமனே விடுதலைப்புலிகளை விமர்சிப்பதும் குருட்டுத்தனமாக சந்திரிகா அரசின் நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதையுமே தமது நடுநிலைக்கு ஆதாரமாகக் காட்டுகிற சிலரது நெருக்குவாரங்கள் பற்றி ஓரளவு அறிவேன்.

சரிநிகரும் யுக்தியவும் சுயாதீனமாக இயங்குவது மோர்ஜின் சிறப்பு. இதை மாற்றி சரிநிகரின் மீது தணிக்கை முயற்சிகளை எவரும் மேற்கொள்வது கண்டிக்கத்தக்கது. இவ்வருடம் நான் அனுப்பிய கட்டுரை ஒன்றும் கவிதை ஒன்றும் தபாலில் தவறியிருக்கலாம். மற்றப்படி சரிநிகர் எனது கடிதங்களுக்கு உள்ளடக்கத்தில் ஊறு இல்லாத விதமாகவே வெளியிட்டுள்ளது. வேறு சிலரது கட்டுரைகளின் பிரசுரம் தாமதமானது வருந்தத்தக்கது. மற்றப்படி மாறுபட்ட பல கருத்துக்கள் சரிநிகரில் வருவது பற்றி எல்லாரும் அறிவோம். இன்று வடக்கில் உள்ள அவல நிலையில் அச் செய்திகள் முதன்மை பெறுவது சரியானதே. ஆயினும், கிழக்கோ மலையகமோ முஸ்லிம்களோ அலட்சியம் செய்யப்படுவதாக எந்த அடிப்படையில் எவரும் கூற முடியுமோ தெரியவில்லை.

ஆங்கிலத்தில் புலி எதிர்ப்பு வசை மாரி பொழிகிற புத்திஜீவிகள், அதைத்தமிழில் எழுதலாமே. அது எழுப்பும் விவாதங்கள் விடுதலைப்புலிகள் பற்றிய ஒரு நிதானமான கணிப்பீட்டிற்கு வர வழிவகுக்கலாம். விடுதலைப் புலிகளை விமர்சிக்கவே விரும்பாதவர்கள் உள்ளனர். அவர்கள் சரிநிகருக்கு அதிகம் எழுதுவதில்லை. விமர்சிப்போர் பல்வேறு நிலைப்பாடுகளினின்று விமர்சனம் செய்கின்றனர். எல்லோரும் ஒரே அரசியல் நிலைப்பாட்டிலிருந்து எழுதச் சரிநிகர் என்ன கட்சிப்பத்திரிகையா?

சரிநிகரில் முதிர்ச்சியற்ற எழுத்து உள்ளது. சில சமயம் பொறுப்பற்ற முறையிலும் விஷயங்கள் எழுதப்பட்டுள்ளன. ஆயினும், உங்கள் கடிதத்திற் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க அவை ஆதாரங்களல்ல. சரிநிகரின் குரலை அடைக்கும் முயற்சிகள்

ஜனநாயக விரோதமானவை. மோர்ஜ் இதற்குப் பணிந்து போகாது என நம்புகிறேன்.

**சிவசேகரம்,**
**லண்டன்.**

## மட்டக்களப்பு: கூத்தின்...

பதும் சிந்தனையைக் கிளர்த்திய பிரதான கேள்விகள் அதே போல் கூத்துக்கலை அழிந்துபோகாது பாதுகாக்க ஆய்வுகள் மாத்திரமன்றி செயல் வடிவத்தில் அல்லது செயற்கை மூலம் பாதுகாக்க கலாசார அமைப்புக்களை கிராமம் தோறும் தோற்றுவித்தல் வேண்டும் என்ற நீண்ட கருத்துரையும், செ. யோகராஜாவின் சிறுவர் அரங்கம் ஒன்று மட்டக்களப்பில் வளர்ச்சியடையவில்லை. அதனை நவீன அரங்கு நோக்கிய பயணத்தின் ஒரு பகுதியாக கருத்தில் கொள்ளல் வேண்டும் என்ற சிந்தனையும், லோகநாதனின் இத்தகைய பாரம்பரிய கலைவடிவங்கள் ஆபிரிக்க இலத்தீன் அமெரிக்க நாடுகளில் உல்லாசத்துறையுடன் தொடர்புபட்டதாக இருப்பது அதன் வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் வழிகோலியுள்ளது. அது போல் எமது பிரதேசக்கூத்துக்களையும் நகர் நோக்கி நகர்த்தும் போது பயனுள்ளதாக அமையும் என்றும், ஆலோசனைகளை வழங்கினர். அம்மன்கிளி முருகதாஸ் மட்டக்களப்பின் ஒருபிரிவினர் முஸ்லிம், மற்றும் பறங்கியர் இவர்களிடம் இத்தகைய அல்லது எத்தகைய கூத்து மரபுகள் உண்டு எனக் கேட்டதோடு அதனையும் சேர்த்துப் பார்த்தால் முழுமையான ஆய்வாக அமையுமென்றார்.

சிவரட்ணம் ''மறைமேளக் கூத்தினை'', ''மட்டக்களப்பு மேளக்கூத்து' என இனிமேல் அழைத்தால் என்ன என்று எழுப்பிய கேள்வியை மௌனகுரு, கமலநாதன் ஆகியோர் மறுத்துரைத்தனர். ஏனெனில் தலித் பார்வையில் அவை தனித்துவமானவை. இதுவே இவர்களின் அடையாளம். தலித் ஆய்வுகள் வளர்ச்சி பெற்றுவரும் காலகட்டத்தில், அதனை அதன் தன்மையிலேயே பார்த்தால் நன்று என்றனர்.

மன்று நாள் நிறைவின் போதும் கலந்து கொண்டோர் தொகை மிகக் குறைவு. முதல் நாள் கலந்துகொண்ட அண்ணாவிமார்களில் பலர் இரண்டாம் நாள் அமர்வில் இல்லை. அதிகமானோர் மத்தியதர கல்வி கற்றவர்களே கலந்துகொண்டனர். அடிநிலை மட்டத்தில் இருக்கும் இக்கூத்துக்கலை பற்றிய இத்தகைய புதிய சிந்தனைகள் அடிமட்ட நிலையிலுள்ள அண்ணாவி மார்களையும் அவர்கள் சார்ந்த நடிப்பவர்களையுமே சென்றடைய வேண்டும். அப்போதுதான் அதன் புதிய பரிணாமங்கள் தோன்றும். ஆகவே புதிய அரங்கை நோக்கி கூத்தினை நகர்த்தவும், உலகநிலைக்கு அடையாளப்படுத்தவும்.மேலும் இதனைக் கட்டிக்காக்கவும் சகல தரப்பின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளல் வேண்டும்.

கூத்துக்கலை, ஆடல் பாட்லுடன் தொடர்புபட்டதோடு நடிப்புடனும் சம்பந்தமுடையது. ஆகவே வெறும் எழுத்தாய்வுகள் மட்டும் இதனை வளர்ச்சியடையச் செய்ய மாட்டாது. அண்ணாவிமார்களிடம் இருந்து இது, பயிற்றப்பட்ட ஆசிரியர் குழாத்திடம் செல்ல வேண்டும். கூத்துக்களுக்கென மட்டக்களப்பில் பயிலரங்கு ஒன்று உருவாக்கப்பட வேண்டும். அது இளம் தலைமுறையினரைச் சென்றடையும் பட்சத்தில்தான் மட்டக்களப்பு கூத்தின் ஸ்தானம் முழுமையாகத் தெரியவரும். ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் இதில் அதிக அக்கறையும் அர்ப்பணிப்பும் காட்ட வேண்டும். அவ்வாறு செய்யும் போதுதான் மட்டக்களப்புக் கூத்தின் மகிமையும், அதன் வளர்ச்சியும் பரிணாமங்களும் வெளிப்படும்.

எதுவாயினும் இக்கருத்தரங்கானது மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. குறிப்பாகக் கூத்தினை அறிமுகப்படுத்திய அல்லது பல்வேறு பார்வைகளில் ஆய்வுநிலைக்குட்படுத்தியதோடு இதனைப் புத்தக வடிவில் கொண்டுவருவதாக ஒப்புதல் அளித்துள்ள இந்து கலாசார அமைச்சுக்கும் ஏற்பாடு செய்த மண்முனை வடக்குப் பிரதேசச் செயலாளருக்கும் நெறிப்படுத்திய கலாநிதி சி. மௌனகுருவிற்கும் மட்டக்களப்பு கூத்துலகம் கடமைப்பட்டுள்ளது. இனியும் இத்தகைய ஆய்வுகள் தொடரட்டும்!

## மத்திய வங்கி...

சந்தித்த போது அவர் சொன்னார்:

''பாதுகாப்பு இந்தமாதிரி விடயங்களுக்கு வழங்கப்படுவது என்பது மிகவும் கஸ்டம். சாகத்தயாராகி குண்டுகளுடன் வருபவர்களை எதிர்த்து நிற்க யாருக்குத்தான் முடியும்? குண்டுத்தாக்குதலை தவிர்க்கலாம், ஆனால் எதிர்ப்பது எப்படி?.... அரசாங்கம் புலிகளோடு பேசி எதையாவது செய்தாலொழிய இந்த நிலைமையைக் கட்டுப்படுத்துவது என்பது கேள்விக்குறிதான்...''

வவுனியாவிலிருந்து ஒவ்வொருநபரையும் முற்றாக சோதித்து விட்டு அனுப்புகின்ற போது, எப்படி ஒரு லொறி ஆயுதங்களுடன் இங்கு வந்தது என்ற கேள்விக்கு பாதுகாப்பு வட்டாரங்களிடம் கூட பதில் இருப்பதாகத் தெரியவில்லை.

இந்த தாக்குதல் காரணமாக கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களிலுள்ள அலுவலகங்களிலுள்ள உத்தியோகத்தர்களில் கொழும்புக்கு வெளியே மாறுதல் கோரி நிற்பவர்களின் தொகை அதிகரித்து வருவதாக தெரியவருகிறது.

புலிகளின் தாக்குதல் முழு உலகத்தாலும் கண்டிக்கப்பட்டுள்ள போதும், வெறும் கண்டனங்கள் நிலைமையில் எந்த மாற்றத்தைத் தரப்போகின்றன என்று கேட்கிறார் இன்னொருவர்.

எவ்வாறாயினும், புலிகளின் இந்த நடவடிக்கையின் மூலமாக இரண்டு உண்மைகள் தெரியவந்துள்ளன. ஒன்று; யுக்திய ஆசிரியர் குறிப்பிட்டதுபோல யுத்தம் மூலம் வடகிழக்கில் வெற்றிபெறுவது மட்டுமே அமைதியை உருவாக்கிவிடாது. இரண்டு; புலிகளை வெளியே வைத்துக்கொண்டு சமாதானத்தை நடைமுறைப்படுத்திவிட முடியாது.

இந்த இரண்டும் அரசாங்கத்திற்கு விளங்குமா என்பதுதான் இன்று கொழும்பின் பிரதான கேள்வி!

## திருமலை : தமிழ்...

பதவியில் இல்லையென்பது முடிவாகிவிட்டதில் நிம்மதி. ஆனாலும் இப்போதும் அலுவலகத்தில் உபதலைவரது ஆசனத்திலேயே அமர்ந்துகொள்ளும் உபதலைவரால் தலைவருக்கு பெரிய தலையிடியாகப் போய்விட்டது.

வெளியேறிய ஏழு உறுப்பினர்களும் கூடி ரெலோவின் மாவட்ட பொறுப்பாளரும் நகர சபை உறுப்பினருமான க. லிங்கராசாவையே உபதலைவராக்குவது என்று முடிவெடுத்தனர். (லிங்கராசா டெலோ தலைமைப்பீடத்தின் விசாரணைக்குத் தற்போது உள்ளாகி இருப்பதும் மாவட்டப் பொறுப்பாளர் பதவியினின்றும் நீக்கப்பட்டதும் பிந்திய விடயங்கள்) உபதலைவரை நியமிப்பது தலைவரே என்பதை அறிந்திருந்தார்களோ என்னவோ செயலாளருக்கு முகவரியிட்டு எல்லோருமாகக் கையெழுத்திட்டு தங்கள் வேண்டுகோளைத் தெரிவித்துள்ளனர்.

தமிழரான செயலாளருக்கு தமிழ் மக்களது வாக்குகளைப் பெற்றுத் தெரிவான தமிழ் தீவிரவாதிகளான தமிழ் உறுப்பினர்கள், தமிழர் தலைநகரில் தமிழில் நிர்வாகம் நடத்தும் நகரசபைக்கு உபதலைவரை நியமிக்கக் கோரி அனுப்பிய கடிதம் தனிச்சிங்களத்தில்! அடுத்து ஒரு நகரசபைத்தேர்தலில் இவர்கள் பொதுமக்கள் மத்தியில் வந்து பதவி ஆசை எங்களுக்கு கிடையாது. நாங்கள் தமிழருக்காகவே வாழ்கிறோம். தமிழரை அரியணை ஏற்றுவதற்கு உயிரையும் கொடுக்கத்தயங்கோம் என்று வீராவேசத்துடன் கூறுவார்கள். பாவம் தமிழ் மக்கள் கட்டாயமாக நம்பித் தான் ஆகவேண்டும்!

***-கிறிஸ்டினா-***

www.tamilarangam.net

சரிநிகர்
SARINIHAR
சரிநிகர்

## அவர்களுக்கும், இவர்களுக்கும்

கொழும்பு நகரின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசத்தில் நடந்த மத்தியவங்கி மீதான குண்டுத் தாக்குதல் தெரிவிக்கின்ற செய்தி பற்றி பல்வேறு அபிப்பிராயங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அடுத்தடுத்து நடைபெற்ற அண்மைக்கால தாக்குதல்களில், கொலன்னாவ தாக் குதலுக்குப் பிறகு நடந்த முக்கியமான ஒரு தாக்குதல் இது என்று அரசியல் அவதானிகள் குறிப்பிடுகின்றனர். திட்டமிட்ட, இலங்கை அரசாங்கத்தின் பொருளாதார அடித்தளங்களை ஆட்டம் காணச் செய்கின்ற நடவடிக்கைகளில் புலிகள் இறங்கியிருக்கின்றார்கள் என்பது இப்போது ஒரு ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையாகிவிட்டது. அரச தரப்பில் வங்கி மீதான தாக்குதல் வெற்றிகரமானதல்ல என்ற அபிப்பிராயங்கள் நிலவிய போதும், இத்தாக்குதல் ஏற்படுத்தியுள்ள அதிர்ச்சியை சாதாரணமாக மதிப்பிட்டுவிட முடியாது.

யுத்தத்தின் குரூரத்தையும், குண்டுத்தாக்குதல்கள் எப்படி ஒரு சில கணங்களிலேயே மாபெரும் அழிவுகளை தரக்கூடும் என்பதையும் தலைநகருக்கு எடுத்துக் காட்டியுள்ளது இந்தத் தாக்குதல். நெஞ்சை உறைய வைக்கும் பயங்கரமான இந்த நிகழ்வு, மக்களின் நாளாந்த நிகழ்வாகிவிடும் பட்சத்தில் அந்த மக்கள் மனோநிலை எவ்வாறு பாதிப்படையும் என்பதற்கு இந்த நிகழ்வை ஒரு உதாரணமாகக் கொள்ளலாம். இந்த நாட்டின் ஒரு புறத்தில் வாழும் மக்களது தலைவிதி கடந்த ஒரு தசாப்த காலமாக இவ்வாறுதான் இருந்து வந்திருக்கிறது என்பதை இந்தச் சம்பவம் மூலம் விளங்கிக் கொள்ள இங்குள்ள அரசியல்வாதிகள் தயாராக இருப்பார்களானால் அது இந்த நாடு, தன்னை துயரங்களிலிருந்து விடுவித்துக் கொள்ள எவ்வளவோ பயனுள்ளதாக அமையும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக இவ்வாறான சம்பவங்கள் ஒவ்வொன்றும் மேலும் மேலும் நிலமையை மோசமாக்குகின்ற வேகத்தையே இங்குள்ள அரசியல்வாதிகட்கு வழங்கி வருகிறது.

சம்பவங்களை மட்டுமே பார்க்கிற, அவற்றின் பின்னாலுள்ள காரணங்களை ஆராயத் தயாரற்ற ஒரு சாபக் கேடான நிலை எமது நாட்டின் அரசியல் வாதிகளிடையே நிலவும் வரை, இத்தகைய சம்பவங்களை தவிர்ப்பது முடியாது என்பதை அவர்கள் புரிந்து கொண்டுள்ளதாகத் தெரியவில்லை.

'பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது' என்று கூறி மேலும் மேலும் பெருமளவிற்கு மக்களது வரிப்பணத்தையும், கடன் சுமையையும் அவமே வீணடிக்கின்றவர்கள், இந்த நடவடிக்கைக்குப் பின்னால் உள்ள நாட்டின் அரசியல் நிலமையைக் கவனிக்க வேண்டுமென்றே மறுத்து வருகின்றனர்.

இனப்பிரச்சினையின் காரணமாக இதுவரை கொல்லப்பட்ட மக்களும், விரயமாக்கப்பட்ட பணமும், அழிந்து போன சொத்துக்களும் இந்த நாட்டினை செழிப்புறச் செய்வதில் காத்திரமான பங்காற்றியிருக்க முடியும் என்ற உண்மை வெறும் உதட்டளவிலான சொல்லாகி விட்டது. இதை சொல்லும் அரசாங்க தரப்பினர்கள் கூட யுத்த மூலம் புலிகளை அடக்கிவிட்டால் சரி என்ற தமது அபிப்பிராயத்தை மாற்றி விட்டுள்ளதாகத் தெரியவில்லை.

யுத்தம் என்பது எப்போதுமே ஈவிரக்கமற்ற கொலைகளிலிருந்து பிரிக்க முடியாதது. அது சமாதானத்திற்கான யுத்தமாயினும் சரி ஆக்கிரமிப்பிற்கான யுத்தமாயினும் சரி. அதன் விளைவு அழிவும் சாவும்தான்.

1983இல் வெளிப்படையாக வெடித்த ஆயுதம் ஏந்திய கெரில்லா யுத்தம் அதுவரை கால தமிழ்த்தேசிய இனத்தின் மீதான சகிக்க முடியாத ஒடுக்கு முறையின் எதிர்வினையாக வெடித்த ஒன்று என்ற வரலாற்றை மறந்து விட்டு, அதன் இன்றைய வடிவத்தை மட்டும், கவனத்தில் எடுத்தால் இம்மாதிரியான தாக்குதல்களை தவிர்க்கும் வாய்ப்பே இல்லாமல் போய்விடும்.

அரசாங்கம் 'பாசிச, மனநோய்பிடித்த, மிலேச்சத்தனமான, கொலைவெறி' போன்ற அடை மொழிகளுடன் இணைத்து இந்த நிகழ்வை வர்ணிப்பதன் மூலம் அந்த நேரத்து மனவுணர்வுகளை திருப்திப்படுத்த மட்டுமே முடியும். புலிகளையும் அவர்கது கொலை வெறியையும் பற்றி பக்கம் பக்கமான எழுத்துகளும், மணிக்கணக்கான உரைகளும் அடுத்ததாக செய்யப்படவுள்ள

இன்னும் பல கோடி ரூபா செலவிலான பாதுகாப்பு ஏற்பாடுகளை நியாயப்படுத்த மட்டுமே பயன்படும். அல்லது இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிக்கு எந்த வாய்ப்புமே இல்லாத நிலையை ஏற்படுத்தவே பயன்படும்.

இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்ட மக்களின் சார்பாக இந்த நடவடிக்கை குறித்து கோபாவேசம் கொள்வதைப் புரிந்து கொள்ள முடியும். இத்தாக்குதலின் போது கொல்லப்பட்ட மக்கள் மீதான அனுதாப உணர்வினை புரிந்து கொள்வது ஒன்றும் கடினமானதல்ல. ஆனால் இந்த காரணங்கள் தீர்வு முயற்சிக்கு குந்தகமான நிலையை ஏற்படுத்துமானால், அது இந்த உணர்வுகளைக் கூட பயனற்றதொன்றாக்கிவிடும்.

சரிநிகர் சொல்ல விரும்புவதெல்லாம் இதுதான்:

யுத்தம் ஒரு போதும் சமாதானத்தைத் தராது. பாதுகாப்பு ஏற்பாடுகள் அவை எவ்வளவு தான் பெரிதாக இருப்பினும் அரசியல் பிரச்சினை தீர்க்கப்படாதவரை எந்தப் பயனும் அற்றவை. இத்தகைய அழிவுகளை தவிர்க்க சக்தியற்றவை.


– இது அரசுக்கு

அரசுடனான யுத்தத்தையும் கூட பொது மக்கள் அழிவு கணக்கெடுக்கப்படாது செய்யப்படும் பட்சத்தில் எப்படியும் நியாயப் படுத்திவிட முடியாது. எவ்வளவு பலமான அரசியல் காரணங்கள் அதன் பின்னால் இருந்த போதும்!

– இது புலிகளுக்கு

## திருமலை தமிழ் நகரசபை உறுப்பினர்களின் சிங்களக் கடிதம்!

திருக்கோணமலை நகரசபையின் 23.01.1996 கூட்டத்தில் ஏழு உறுப்பினர்கள் வெவ்வேறு மூன்று காரணங்களை வைத்து வெளிநடப்புச் செய்துள்ளார்கள். இதில் ஐந்துபேர் ஆளும் ரெலோ அமைப்பினர். இவர்களில் ஒருவர் ஈரோஸ் என்று சொல்லிக்கொண்டாலும் டெலோவால் நியமிக்கப்பட்ட சுயேட்சைக் குழுவாலேயே கொண்டுவரப்பட்டவர். இவர்களுடைய காரணம்; உபதலைவர் தனது பதவியை ராஜினாமா செய்துவிட்டார் என்பதே. நகரசபைத்தலைவரோ, அப்படியெதுவும் இல்லையென்றார். சம்பந்தப்பட்ட உப தலைவரோ மிகவும் அமைதியாக உப தலைவருக்கான ஆசனத்தில் அமர்ந்து கொண்டிருந்தார். தன்னையே களமாக்கி நடக்கும் எந்தப்பிரச்சினையாலும் அவர் பாதிப்படைந்ததாகத் தெரியவில்லை.




இரண்டாவது காரணத்துடன் எழுந்தவர் மாயன்'நாதன். இவர் ஈ.பி.டி.பி.யைச் சார்ந்தவர். கடந்த மாதக் கூட்டத்தில் நகரசபைத்தலைவர் சூரியமூர்த்தியை இந்திரன் சந்திரன் என்றெல்லாம் புகழ்ந்து தள்ளி, பாலர் பாடசாலை ஒன்றுக்கு தலைவர் பெயரை சூட்ட வேண்டும் என்றும், கோரிக்கை விடுத்து விசுவாசத்தை வெளிப்படுத்தியவர். நிகழ்ச்சி நிரலில் இல்லாதவிடயம் பற்றி பேசமுற்பட, தலைவர் அனுமதிக்காததால் மோசடிக்ககாரர் என்ற தோரணையில் தலைவரை திட்டிவிட்டு வெளிநடப்பு செய்தார். மூன்றாவது நபர் எல்.ஜீ.எச். சுமதிரத்ன. இவர் பொ.ஐ.மு.சார்ந்தவர். நகரசபைதலைவர் என் நடத்தைபற்றி எனது கட்சித்தலைமைக்கு அறிவித்துவிட்டார். அவர்கள் என்னை விசாரணைக்கு உட்படுத்த உள்ளனர். அதனால் வெளியேறுகிறேன் என்றார். போய்விட்டார்.


பரபரப்பான இந்தச் சம்பவங்களின் பின்னணியில் சரிநிகருக்கு கிடைத்த தகவல்கள் இவை.

கடந்த டிசம்பரில் உபதலைவர் தனது பதவியை ராஜினாமாசெய்துள்ளார் என தேர்தல் அலுவலருக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. இதற்கான பதிலை அலுவலர் உபதலைவர் அல்பிரட்டுக்கு அனுப்பி வைத்த போதும் விலாசம் பிழையென அக்கடிதம் திரும்பிவிட்டது.

நியமனப்பத்திரத்தில் சரியான விலாசம் கண்டெடுக்கப்பட்டு அல்பிரெட்டை தேர்தல் அலுவலகத்திற்கு அழைத்து விசாரித்த போது தனக்கு ராஜினாமா செய்ய வேண்டும் என்ற நோக்கமும் இல்லை. அப்படிச் செய்ததாக நினைவும் இல்லையென கூறியிருக்கிறார். ஆனால் ராஜினாமாக் கடிதத்தில் காணப்பட்ட கையெழுத்து தன்னுடையதே என ஒப்புக்கொண்ட அவர் எப்போது கையெழுத்து வைத்தேன் என்பது ஞாபகம் இல்லை எனவும் கூறியதோடு மேற்படி கடிதத்தை மறுத்து ஒரு கடிதம் எழுதிக்கொடுத்து பதவியை காப்பாற்றிக்கொண்டு வந்துள்ளார். (உபதலைவரா இப்படி...? என்று யாரும் ஆச்சரியப்படத்தேவையில்லை. ஏனெனில் அவர் அப்படித்தான்!)

இதை அடிப்படையாகக்கொண்டுதான் உப தலைவர் பதவி விலகினார் என்றும், பதவி விலகவில்லையென்றும் சில்லெடுப்புகள் எழுந்தன. இதில் இவர் எவர் பக்கமும் நிற்காமல் நடுநிலைமை கொண்டதுதான் தனிச்சிறப்பு.

கூட்டம் முடிந்ததும் உபதலைவர் வெளிநடப்பு செய்தவர்களோடு எங்கோ சென்றார்.



அடுத்தநாள் காலை நகரசபைத் தலைவர் சூரியமூர்த்தியிடம் தான் திரும்பவும் ராஜினாமா செய்துவிட்டதாகக் கூறினார். தலைவருக்கு அதிர்ச்சி. எனினும் உபதலைவர்

→15

## மட்டு: புளொட் மோகனும், ஈ.பி.ஆர்.எல்.எவ். ராசிக்கும் களத்தில்?

இரண்டாவது ஈழயுத்தத்திற்கு பின்னரான பிரேமதாச அரசின் காலத்தின் போது மட்டக்களப்பின் வாவியிலும் வீதியோரங்களிலும் கண்கள் தோண்டியெடுக்கப்பட்ட நூற்றுக்கணக்கான மனிதப்படுகொலைகளின் சந்தேகநபரென இன்னமும் மட்டக்களப்பு மக்களின் மனங்களை விட்டகலாத கப்டன் முனாஸ் இன் வலதுகரமாக செயல்பட்ட புளொட் மோகன் மீண்டும் மட்டக்களப்பில் அரசபடைகளுடன் இணைந்து செயல்படத்தொடங்கியுள்ளார்.

இதுவரை காலமும் கொழும்பில் இராணுவ உயரதிகாரிகள் சிலரின் ஆதரவுடன் வாழ்ந்து வந்த மோகன் (இது பற்றி ஏற்கெனவே சரிநிகர் குறிப்பிட்டிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்) மீண்டும் மட்டக்களப்பிற்கு வந்தது இங்குள்ள பொதுமக்களுக்கு ஓர் அதிர்ச்சியையூட்டிள்ளது.

ஆனால் கப்டன் முனாஸ் மற்றும் மோகன் குழுவில் இருந்து மோகனின் பெயரால் பல ஆட்கடத்தல், கொள்ளை, கொலை குற்றச்சாட்டுகளில் தேடப்பட்ட குட்டி ஆகியோர் இன்னமும் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலிலேயே உள்ளார்கள். (இவர்கள் பற்றிய முழுத்தகவல்களையும் ஏற்கெனவே சரிநிகர் வெளியிட்டிருந்தது)

மட்டக்களப்பில் நிவிரண இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதற்கு சில நாட்களுக்கு முன்னர் செங்கலடி பதுளை வீதியில் நடந்த புலிகளுக்கெதிரான ஓர் தாக்குதலை மோகன் குழுவினரே மேற்கொண்டதாகவும் இதில் இரு புலிகள் கொல்லப்பட்டு அவர்களிடமிருந்து ஆயுதம் ஒரு மோட்டார் சைக்கிள் என்பன கைப்பற்றப்பட்டதாகவும் அறியமுடிகிறது. இம்மோட்டார் சைக்கிள் புலிகளால் இராணுவத்தினரிடமிருந்து தாக்குதலொன்றின் போது கைப்பற்றப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

மோகனும், மோகன் குழுவினரும் லேக்வீதியிலுள்ள இராணுவ உயரதிகாரிகள் தங்கும் விடுதியிலேயே (பற்பொடி கொம்பனி முகாம்) தற்போது தங்கியுள்ளதாகவும் தெரியவருகிறது. ஆனால் மோகன் தற்போது வெளியே திரிவதை காணமுடியவில்லை. மட்டக்களப்பில் இராணுவ நடவடிக்கையிலும் மோகன் குழுவினரின் பங்களிப்பு பெறப்பட்டிருக்கலாமெனவும் இங்குள்ள ஒரு முக்கியஸ்தர் குறிப்பிட்டார்.

இதெல்லாவற்றுக்கும் மேலாக ஈ.பி.ஆர்.எல்.எப். இராணுவ நடவடிக்கைகளுக்கு தயாராகி வருவதை அவதானிக்க முடிகிறது. படையினரால் கைப்பற்றப்பட்ட யாழ் குடாநாட்டுப்பகுதியை தீவுப்பகுயை ஈ.பி.டி.பிக்கு வழங்கியது போல் தம்மிடம் தருமாறு அரசிடம் ஈ.பி.ஆர்.எல்.எப் விடுத்த கோரிக்கைக்கு பதிலாக, இதுவரை உங்களுக்கு தந்த ஆயுதங்களை வைத்துக்கொண்டு எத்தனை புலிகளைப் பிடித்தீர்கள் என்று எழுந்த அரசு தரப்பு கேள்விக்கு முகம் கொடுக்கு முகமாகவே ஈ.பி.ஆர்.எல்.எப்பும் மற்றைய இயக்கங்களைப் போல் மட்டக்களப்பில் புலிபிடிக்கும் நடவடிக்கையில் இறங்கத் தயாராகி வருவதாகத் தெரியவருகிறது.

ஈ.பி.ஆர்.எல்.எப். இராணுவ பொறுப்பாளர் ராசிக் மட்டக்களப்பில் தான் தற்போது தங்கியுள்ளார்.

இந்தியப்படைகள் வடகிழக்கில் நிலைகொண்டிருந்த காலகட்டங்களில் ஈ.பி.ஆர்.எல்.எப். உருவாக்கிய 'மண்டையன் குழு'வுக்கு பொறுப்பாளராக இருந்து இரத்தம் உறைய வைக்கும் உரிமை கோரப்படாத பல கொலைகளின் சூத்திரதாரிதான் இந்த ராசிக், இவனின் வருகையும் இன்னும் எத்தனை அப்பாவி மனிதர்களின் உயிர்களை தின்னப் போகிறதோ...? என மட்டக்களப்பின் பெரும்பாலான மக்கள் முணுமுணுப்பதை அவதானிக்க முடிகிறது.

ஈ.பி.ஆர்.எல்.எப்புக்குள்ளேலேயே இராணுவத்துடன் சேர்ந்து செயல்பட்டு தமிழ்மக்களுக்கு துரோகமிழைக்கக்கூடாது என ஒரு சாரார் வலியுறுத்தி வருவதாகவும் தெரியவருகிறது.

இராணுவத்துடன் இணைந்து ஈ.பி.ஆர்.எல்.எப். தலைமை ஒத்துழைக்க முன்வந்துள்ள போதிலும் ஈ.பி.ஆர்.எல்.எப். உறுப்பினர்களை இராணுவ சோதனை நிலையங்களிலோ இராணுவ நடவடிக்கைகளிலோ இதுவரை காணவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. ரெலோ மட்டுமே இராணுவத்துடன் பின்னிப்பிணைந்து தொடர்ந்தும் செயல்பட்டுவருவதை காணமுடிகிறது.

மட்டக்களப்பின் மேற்குப்பகுதிகளில் அரச படைகளின் நிவிரண இராணுவநடவடிக்கை இன்னமும் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது. வவுணதீவில் பாரிய இராணுவ முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ஏனைய இடங்களுக்கு படையினர் போவதும் வருவதுமாகவேயுள்ளனர்.

இப்பகுதிகளில் பொதுமக்கள் வாழும் கிராமங்களை நோக்கி தினமும் ஷெல் தாக்குதல்கள் கண்மூடித்தனமாக மேற்கொள்ளப்படுகிறது. இதனால் இன்னும் ஆயிரக்கணக்கான மக்கள் செங்கலடி, வாழைச்சேனை, ஏறாவூர் பகுதிகளை நோக்கி மூட்டை முடிச்சுகளுடன் வந்தவண்ணமுள்ளனர்.

படுவான்கரை, வாகரைப்பகுதிகள் இராணுவத்தால் தடைசெய்யப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளதால் உணவுக்கும், மருந்துக்கும் கடும் தட்டுப்பாடு நிலவுவதாகவும் அங்கிருந்து வந்தோர் எம்மிடம் நேரடியாகவே முறைப்பட்டார்கள். இந்நிலைமை மேலும் நீடிக்கப்படுமெனில் மட்டக்களப்பின் மேற்கு பகுதி மக்கள் அனைவரும் அகதிகளாக்கப்பட்டு இங்குள்ள கால்நடைகள் விளைநிலங்கள் அனைத்தும் அழிந்து போகும் ஓர் சூழ்நிலையைத்தான் அரசின் நிவிரண தோற்றுவிக்கும்.

**மட்டக்களப்பிலிருந்து**
**குருசேத்திரன்**

06.02.1996

பிரதம ஆசிரியர் : சேரன், எல்லாத் தொடர்புகட்கும் : இல. 04, ஜயரத்ன வழி, திம்பிரிகஸ்யாய, கொழும்பு 05. தொலைபேசி : 593615.
வெளியீட்டாசிரியர் : ச. பாலகிருஷ்ணன், இல. 18/02, அ... அச்சுப்பதிவு : நவகம அச்சகம், இல.334, காலி வீதி, இரத்மலானை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்